# ஒரு கருத்துரை

# இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்று தொடர்பிலான சட்டம் மற்றும் கொள்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மார்கழி 2021

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) ஆட்சிமுறை மற்றும் முரண்நிலைக்கான தீர்வு போன்ற விடயங்களில் பிரதானமாக கவனம் செலுத்துகின்ற சுயாதீனமானதும், பக்கச்சார் பற்றதுமான ஒரு ஸ்தாபனமாகும். அரசாங்கக் கொள்கைக் கலந்துரையாடலின் வலுவூட்டலுக்கான தேவையில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆராய்ச்சி மற்றும் வாதுரைத்தல் மூலம் அரசாங்கக் கொள்கை தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, மாற்றீடுகள் இனங் காணப்பட்டு, மற்றும் பரப்புரை செய்கின்றதுமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பற்றுறுதி கொண்டுள்ளது.

இல. 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை

தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386

தொலைநகல்: +9411 2081388 Email: info@cpalanka.org

இணையத்தளம்: www.cpalanka.org

மின்னஞ்சல்: info@cpalanka.org

முகநூல்: www.facebook.com/cpasl

டுவிட்டர்:@cpasl 2

பதிப்பபளர்: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)இ கொழும்பு, இலங்கை

ISBN இலக்கம்: ISBN 978-624-5914-15-9

பட்டைக் குறியீடு: 9 786245 914159

பதிப்புரிமை © |CPA

## உள்ளடக்கங்கள்


**அறிமுகம்**........................................................................................................ 04

**கட்டமைப்புக்கள்**................................................................................................ 05

செயலணிகளும் நிபுணர் குழுக்களும்........................................................................ 05

**சட்ட வரைச்சட்டம்**............................................................................................ 08

நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகள்........................................................................ 09

ஒற்றுகூடுதல் மீதான கட்டுப்பாடுகள்...................................................................... 09

புதிய சட்டங்களும் ஒழுங்குவிதிமுறைகளும்.............................................................. 12

**ஆட்சி**................................................................................................................ 15

இராணுவமயப்படுத்தப்படலும் அரசியல்மயப்படுத்தப்படலும்........................................ 15

பெருந்தொற்றின் போதான பாராளுமன்றத்தின் வகிபாகம்.......................................... 17

**உரிமைகள்**......................................................................................................... 18

பொலிஸ் துஷ்பிரயோகங்கள்.................................................................................. 19

அடக்குமுறை......................................................................................................... 20

சிறுபான்மை சமூகங்கள் மீதான தொடர்ச்சியான பாரபட்சம்......................................... 22

நலிவுற்ற குடிமக்கள் மற்றும் சமூகங்கள் மீதான தாக்கங்கள் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான சமத்துவமின்மைகள்................................................................................ 23

**பொறுப்புக்கூறலும் ஆட்சியும்**................................................................................ 25

செய்கடமை (இருகம) நிதி தொடர்பான முறைகேடுகள்................................................ 26

தடுப்பூசி கொள்முதல் தொடர்பான முறைகேடுகள்...................................................... 27

தடுப்பூசி வழங்கல் தொடர்பான முறைகேடுகள்........................................................... 30

**பின்னிணைப்பு 1**

சுருக்க வழிகாட்டி 1 - கொவிட் 19 சூழலில் பரிணமிக்கும் சட்டச் சிக்கல்கள்.................... 32

**பின்னிணைப்பு 2**

சுருக்க வழிகாட்டி 2 - இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள் சனாதிபதி செயலணி மீதான ஒரு சுருக்கக் குறிப்புரை................................ 47

**பின்னிணைப்பு 3**

கொவிட்-19இனைக் கையாளுவதற்கு ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள்...................................................................... 67

**பின்னிணைப்பு 4**

வினாக்களும் விடைகளும்: தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் இலங்கையில் கொவிட்-19இனை கையாளுவதில் இதனுடைய தாக்கம் எத்தகையது........................................ 84

**பின்னிணைப்பு 5**

இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்ட வரைச்சட்டம் பற்றிய இற்றைப்படுத்தல்.............................................................................. 94

## அறிமுகம்

கொவிட்-19 சுகாதார நெருக்கடி பங்குனி 2020 முதல் முன்னெப்போதும் முகங்கொடுத்திருக்காத வகையில் சட்ட, அரசியல், பொருளாதார மற்றும் சமூக சவால்களை இலங்கைக்கு தோற்றுவித்துள்ளது. கொவிட்-19 இனுடைய முதலாவது அலையினை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் வெற்றிபெற்றிருந்த போதிலும், அப்போதிலிருந்து அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் அதிகரித்த இராணுவமயமாக்கப்பட்ட மற்றும் அரசியல்மயமாக்கப்பட்ட அணுகுமுறையிலுள்ள சிக்கல்களை வெளிப்படுத்தும் வகையில் பெருந்தொற்று கையாளுகை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. கோவிட்-19 இன் சமீபத்திய அலையிலிருந்து நாடு படிப்படியாக வெளிவருகையில், தொற்றுநோய் மற்றும் அதன் தவறான நிர்வாகத்தால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சி மற்றும் உயரும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றுடன் அது போராட வேண்டும், இதற்கு உடனடி மற்றும் வலுவான சட்ட மற்றும் கொள்கை பதில் தேவைப்படலாம்.

சுகாதார நெருக்கடியை கையாளுவதற்கான அணுகுமுறையில் இராணுவமயமாக்கல், அரசியல்மயமாக்கல், அடக்குமுறை மற்றும் ஓரங்கட்டுதல் ஆகியவற்றின் பரந்த போக்குகள் ஆரம்பத்திலிருந்தே காணப்படுகின்றன. சட்டவாட்சி, அதிகாரப்பிரிப்பு மற்றும் சனநாயக ஆட்சி ஆகியவற்றின் மீது பாராதூரமான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய, தற்போது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஆட்சியாதிக்கக்கொள்கை மற்றும் நிர்வாகத்துறையின் ஆதிக்கத் திரட்சி ஆகியவற்றினை தற்போதைய செயல்முறைகளை இன்றுவரையான பொருந்தொற்றுநோய் மேலாண்மை அதிகப்படுத்தியுள்ளது.

பல்வேறு கட்டங்களில் பெருந்தொற்றினைக் கையாளுவதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு சட்ட மற்றும் கொள்கைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கரிசணைகளை படம் பிடித்துக்காட்டுகின்ற பல்வேறு சுருக்கங்கள், வழிகாட்டிகள் மற்றும் பிற ஆவணங்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் (CPA) முன்னர் வெளியிப்பட்டன (பின்னர் ஆவணத்தில் இணைப்புகளாக சேர்க்கப்பட்டது).

பங்குனி 2020 முதல் கார்த்திகை 2021 வரை தோன்றிய சிக்கல்கள் மற்றும் பாதிப்புகளை ஆராய்வதற்கான நோக்கத்துடனான, பெருந்தொற்று கையாளுகை பற்றிய ஒரு பூரணமற்ற பகுப்பாய்வாக இக் கருத்துரை விளங்குகின்றது.

இந்த நோக்கத்திற்காக, கொவிட்-19இன் பரவலைக் கட்டுப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்புடைய கட்டமைப்புகள் மற்றும் சட்ட வரைச்சட்டம் தொடர்பான கண்ணோட்டத்தை இவ் ஆவணம் முதலில் வழங்கும்.

இரண்டாவதாக, தற்போதைய அணுகுமுறை பெருந்தொற்று கையாளுகையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட

வழிமுறைகளைகளுடனான சிவில் உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள், சுகாதார நெருக்கடி தொடர்பான முறைதவறிய செயலாண்மை மற்றும் ஏனைய முறைகேடுகளை விளைவித்துள்ளது என்பதனை சுட்டிக்காட்டுவதற்காக ஆட்சி, அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடு மற்றும் துஷ்பிரயோகம் செய்தல், நலிவடைந்த சமூகங்கள் தொடர்ந்து ஓரங்கட்டப்படல் மற்றும் பெருந்தொற்றினைக் கையாளுகின்ற போது ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பில் காணப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறும்தன்மை ஆகியவற்றை இரண்டாவதாக அடையாளம் காணுகின்றது.

## கட்டமைப்புக்கள்

முக்கிய குறிப்புகள்:

- மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன்கூடிய பல்வேறு செயலணிகள் நியமிக்கப்பட்டுள்ளன.
- இத் தற்காலிக கட்டமைப்புக்கள் தற்போதுள்ள நிறுவனங்களை தவிர்க்கின்றன அல்லது அவற்றுடன் மேற்பொருந்துகின்றன.
- இக் கட்டமைப்புக்கள் இராணுவமயப்படுத்தப்பட்டதாகவும் அரசியல்மயப்படுத்தப்பட்டதாகவும் அமைந்துள்ளன.
- செயலணிகளினதும் நிபுணர் குழுக்களினதும் நடவடிக்கைகள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே கிடைக்கக்கூடியதாகவுள்ளது.

### செயலணிகளும் நிபுணர் குழுக்களும்

பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பங்குனி 2020 முதல், சனாதிபதிக்கு மட்டுமே பதிலளிக்கவேண்டிய தற்காலிக கட்டமைப்புகள் மூலமான ஆட்சி என்கின்ற ஒரு பரவலான கலாச்சாரத்தினை சமிக்ஞையிடுகின்ற 10இற்கும் மேற்பட்ட செயலணிகள் நிறுவப்பட்டுள்ளன.

அத்தகைய பல தற்காலிக கட்டமைப்புகள் பெருந்தொற்றினால் ஏற்படக்கூடிய பல்வேறு எதிர்பாரா நிகழ்வுகளுக்கு முகங்கொடுப்பதற்காக குறிப்பாக நிறுவப்பட்டன.[1] “சுபீட்சத்தின்

[1] தேர்ந்தெடுக்கப்பட்ட செயலணிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, பார்க்க, "இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள் சனாதிபதி செயலணி மீதான ஒரு சுருக்கக் குறிப்புரை”, 8 சித்திரை 2020 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் https://www.cpalanka.org/wp-content/uploads/2020/04/FINAL-Presidential-Task-Force-on-COVID19-April-2020-copy.pdf (பின்னிணைப்பு 2) மற்றும் “இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்ட வரைச்சட்டம் பற்றிய இற்றைப்படுத்தல்”, 12 வைகாசி 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ (பின்னிணைப்பு 5)

நோக்கம்” இனுடைய கொள்கைகளை அமுல்படுத்துவதற்காகவும் ஏனைய செயலணிகள் நிறுவப்பட்டன.[2]

பங்குனி 2020 முதல் நியமிக்கப்பட்டுள்ள செயலணிகள்:

கொவிட்-19 தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில்:

- ❖ கொவிட்-19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் (NOCPCO), 17 பங்குனி 2020[3]
- ❖ ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்கான சனாதிபதி செயலணி, 26 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2168/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.
- ❖ முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காகச் சகல படைகளினாலும் எடுக்கவேண்டிய செயல்நெறிகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணி, 27 சித்திரை 2020 தேதியிடப்பட்ட 2173/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.
- ❖ கொவிட்-19 தடுப்பூசியேற்றல் தேசிய திட்டத்துக்கான சனாதிபதி செயலணி, 31 மார்கழி 2020 தேதியிடப்பட்ட 2208/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.

“சுபீட்சத்தின் நோக்கு” மற்றும் மற்றும் “ஒரே நாடு, ஒரே சட்டம்“ ஆகியவற்றின் கொள்கைகள் தொடர்பில்:

- ❖ பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலன் கொண்ட மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி, 2 ஆனி 2020 தேதியிடப்பட்ட 2178/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.

---

[2] "இரண்டு சனாதிபதி செயலணிகளின் நியமனங்கள்", ஆனி 2020, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/the-appointment-of-the-two-presidential-task-forces/

[3] கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் (NOCPCO) ஒரு வருடம் மற்றும் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு செயல்பாட்டை நிறுத்துகின்றது.. ‘சவேந்திரா தலைமையிலான கொவிட் செயலணி தனது நடவடிக்கைகளை நிறுத்துகிறது’ 9 மார்கழி 2021, கொழும்பு கஸட் https://colombogazette.com/2021/12/09/covid-task-force-headed-by-shavendra-ceases-operations/ என்பதைப் பார்க்கவும்.

❖ கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணி, 2 ஆனி 2020 தேதியிடப்பட்ட 2178/17 ஆம் இலக்க அதிவிசேட வா்த்தமானி.

❖ ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணி, 26 ஐப்பசி 2021 தேதியிடப்பட்ட 2251/30 ஆம் இலக்க அதிவிசேட வா்த்தமானி.

இராணுவமயமாக்கல் மற்றும் அரசியலாக்கம் ஆகியவை இத் தற்காலிக கட்டமைப்புகளின் உறுப்புரிமை மற்றும் செயல்பாடுகள் தொடா்பில் அடையாளம் காணக்கூடிய பரந்துபட்ட பிரச்சினைகளாகும்.

இச் செயலணிகளின் ஆணைகளும் பரந்தவை, அத்துடன் பொறுப்புக்கூறல் தன்மையினை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் இல்லை. இது அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பெருந்தொற்று தொடா்பான பிரச்சினைகளை திறம்பட தீா்க்கத் தவறுதல் போன்றவற்றிற்கு வழிவகுக்கும்.[4]

செயலணிகளும் ஏனைய கட்டமைப்புகளும் பாராளுமன்ற மேற்பாா்வையின் கீழ் வரவில்லை. சோதனைகளும் சமனிலைகளும் பலம்பொருந்திய நிறைவேற்றுத்துறைக்கு சாதகமான வகையில் சிதைக்கப்பட்டு செயலாற்றுகின்ற பாராளுமன்றம் ஒன்று இல்லாத காலப்பகுதியிலேயே பல செயலணிகள் நியமிக்கப்பட்டன.

செயலணிகளின் பல செயல்பாடுகள் பாராளுமன்ற மேற்பாா்வையின் கீழ் வரும் நியதிச்சட்ட அமைப்புக்களின் செயல்பாடுகளினை மேற்பொருந்தலாம் அல்லது புறத்தொதுக்கலாம்.[5] சட்டபூா்வத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை தொடா்பான கரிசணைகள் இந்த கட்டமைப்புகளின் தற்போதைய நடவடிக்கைகள் தொடா்பிலான பொது களத்தில் கிடைக்கும் மட்டப்படுத்தப்பட்ட அளவிலான தகவல்கள் காரணமாக அதிகரிக்கின்றது.

கொவிட்-19 தொடா்பான பிரச்சினைகள் குறித்த பரிந்துரைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவதற்காக செயலணிகளுக்க மேலதிகமாக பல்வேறு நிபுணா் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. 24 மாா்கழி 2020 அன்று, முஸ்லிம் மக்களையும் அவா்களுடைய அடக்கம் செய்வதற்கான உரிமையினையம் பாரபட்சப்படுத்துகின்ற, சா்ச்சைக்குரிய கட்டாய தகனம் விதிமுறைகளை ஆய்வு செய்ய சுகாதார அமைச்சினால் நிபுணா் குழுவொன்று

---

[4] "இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள் சனாதிபதி செயலணி மீதான ஒரு சுருக்கக் குறிப்புரை", 8 சித்திரை 2020 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் https://www.cpalanka.org/wp-content/uploads/2020/04/FINAL-Presidential-Task-Force-on-COVID19-April-2020-copy.pdf (பின்னிணைப்பு 2)

[5] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, “பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு” (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021). https://www.cpalanka.org/wp-content/uploads/2021/08/06-Chapter-2.pdf

தாபிக்கப்பட்டது. அடக்கம் மற்றும் தகனம் செய்தலை உள்ளடக்குகின்ற விதத்தில் விதிமுறைகளை மாற்றியமைக்குமாறு இக் குழு பரிந்துரைத்தது. மாசி 2021 இல் இவ் விதிமுறைகள் திருத்தப்பட்டன.[6] வேறு நிபுணர் குழுக்களும் நியமிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள போதும்,[7] அவற்றின் செயல்பாடுகள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தகவல்களே பொதுத்தளங்களில் கிடைக்கப்பெறக்கூடியதாக உள்ளது.

## சட்ட வரைச்சட்டம்

முக்கிய குறிப்புகள்:

- நடமாட்டம் மற்றும் ஒன்றுகூடல் மீதான பல்வேறு கட்டுப்பாடுகளுக்கான சட்ட அடிப்படை தெளிவுபடுத்தப்படவில்லை.
- ஆர்ப்பாட்டங்கள் மீதான தடைகள் பற்றிய வினாவிற்குரிய சட்ட அடிப்படை.
- சுகாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கு ஏற்கனவே உள்ள சட்டங்களைப் பயன்படுத்தவோ அல்லது புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவோ அரசாங்கம் ஆரம்பத்தில் தயக்கம் காட்டியமை.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் பெருந்தொற்றின் விளைவாக எழுந்த பரந்த அளவிலான பிரச்சினைகளை போதுமான அளவு தீர்க்கவில்லை.
- அவசர கால ஒழுங்குவிதிகள் மூலம் எதேச்சையதிகாரமான நடவடிக்கைகளுக்கான சாத்தியத்தன்மை.

[6] மேலதிக விபரங்களுக்கு, பார்க்க: 'வினாக்களும் விடைகளும்: தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் இலங்கையில் கொவிட்-19இனை கையாளுவதில் இதனுடைய தாக்கம் எத்தகையது.' 6 கார்த்திகை 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/q-and-a-on-regulations-issued-under-the-quarantine-and-prevention-of-diseases-ordinance-how-this-impacts-the-covid-19-response-in-sri-lanka/ (பின்னிணைப்பு 4), "இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்ட வரைச்சட்டம் பற்றிய இற்றைப்படுத்தல்", 12 வைகாசி 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ (பின்னிணைப்பு 5); "இலங்கையின் சுபீட்சத்தின் நோக்கம்: மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் தற்போதைய போக்குகள் மீதான விமர்சனம்", 12 ஆடி 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/sri-lankas-vistas-of-prosperity-and-splendour-a-critique-of-promises-made-and-present-trends/

[7] உதாரணமாக, சினோபார்ம் தடுப்பூசியை எந்த வயதினர் பெற வேண்டும் என்று பரிந்துரைக்க நிபுணர் குழு நிறுவப்பட்டது.

**நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகள்**

தொற்றுநோய் தொடங்கியதில் இருந்து, கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பொதுமக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பல்வேறு கட்டுப்பாடுகள் பல தருணங்களில் விதிக்கப்பட்டன. இக் கட்டுப்பாடுகள் “ஊரடங்கு உத்தரவு”, “தனிமைப்படுத்தல்”, “பொலிஸ் ஊரடங்கு உத்தரவு” மற்றும் “தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு” என அறிவிக்கப்பட்டன.[8] இந்த கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதில் காணப்படுகின்ற தெளிவற்ற தன்மை மற்றும் முரண்பாட்டுத்தன்மை காரணமாக இக் கட்டுப்பாடுகளின் சட்ட அடிப்படை தொடர்ச்சியாகக் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றது. “தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு” போன்ற இந்த கட்டுப்பாடுகளை அடையாளம் காண பயன்படுத்தப்படும் சில வார்த்தைகள் அறியப்பட்ட எச் சட்டத்திலும் இல்லை. நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகள் பொது அறிவிப்புகள் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. அத்தகைய பல்வேறு அறிவிப்புகள் தமிழ் மொழியில் வெளியிடப்படாமை தொடர்பில் கரிசனைகள் எழுப்பப்பட்டுள்ளன.

இக் கரிசணைகள் கருத்திலெடுக்கப்படாது கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கைது செய்யப்பட்டனர்.[9]

வைகாசி 2021 இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ) பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில், சுகாதார நெருக்கடியை நிர்வகிப்பதில் தனிநபர்களின் நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அவசியமானதெனினும் இத்தகைய கட்டுப்பாடுகள் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கும் சட்ட வலிதுடைத்தன்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மை தொடர்பிலான அரசியலமைப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் அமைவாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தது.[10]

**ஒன்றுகூடுதல் மீதான கட்டுப்பாடுகள்**

6 ஆடி 2021 அன்று, பொலிஸ் ஊடகப் பிரிவு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு தடையை அறிவித்ததுடன், தடையினை மீறுபவர்கள் தனிமைப்படுத்தல்

---

[8] இக் கட்டுப்பாடுகள் பற்றிய விரிவான தகவல்களுக்கு, “கொவிட்-19இனைக் கையாளுவதற்கு ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள்”, 21 சித்திரை 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், <https://www.cpalanka.org/curfew-in-response-to-covid-19-legal-framework-and-relevant-questions-in-sri-lanka/> (பின்னிணைப்பு 3)இனைப் பார்க்க.

[9] மேலதிக விபரங்களுக்கு, பார்க்க: “இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்ட வரைச்சட்டம் பற்றிய இற்றைப்படுத்தல்”, 12 வைகாசி 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ (பின்னிணைப்பு 5)

[10] ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள், 08 ஆனி 2020, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/curfew.HRCSL-recommendation-final.pdf

ஒழுங்குவிதிமுறைகளுக்கு அமைவாகக் கையாளப்படுவார்கள் எனவும் தெரிவித்தது.[11] கொவிட்-19 தொற்றுவதற்கான பேராபத்து நிலவுகின்ற காரணத்தினால் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் மறு அறிவிப்பு வரும் வரை முன்னெடுக்கப்படக்கூடாது என அறிவித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொலிஸாரிற்கு அனுப்பிய கடிதத்தைத் தொடர்ந்து இந்த தடை விதிக்கப்பட்டது. தடைக்கான சட்ட அடிப்படை அவ் அறிவித்தலில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. பெருந்தொற்று காலப்பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது தொடர்பில் அரசினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான சட்ட சிக்கல்கள் குறித்து மா.கொ.நி சமீபத்தில் கருத்துத் தெரிவித்துள்ளது.[12]

இருப்பினும், கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக (கொ.தே.பா.ப) சட்டமூலம், பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வுக்கான கோரிக்கைகள்,[13] சமீபத்திய எரிபொருள் விலை உயர்வு, மற்றும் இரசாயன உரத்திற்கான தடை உள்ளிட்ட பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பிலான மனக்குறைகளை வெளிப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களின் போது பெரும் எண்ணிக்கையிலான கைதுகள் முன்னெடுக்கப்பட்டன.[14]

ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்தமையும் பலவந்தமாக தனிமைப்படுத்தியமையும், தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளையும் நிலையங்களையும் நடமாடுவதற்கான மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரங்களை மட்டுப்படுத்துவதற்காக துஷ்பிரயோகம் செய்தமையும் தடையின் சட்டவலிதுடைத்தன்மை பற்றிய கரிசணைகளை எழுப்பியது.

மிதமிஞ்சிய பலத்தினைப் பயன்படுத்திய மற்றும் சிவிலியன் உடையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்த நிகழ்வுகள் தொடர்பில் ஊடகங்களில்

---

[11] 'ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்களை இலங்கை தடைசெய்கின்றது', 06 ஆடி 2021, ColomboPage. http://www.colombopage.com/archive_21A/Jul06_1625587252CH.php

[12] "கருத்து: கொவிட்-19 பெருந்தொற்றுநோயின் பின்னணியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் உரிமையினை அரசு கையாளும் வழிமுறையின் சட்டவலிதுடைத்தன்மை", கார்த்திகை 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/comment-legality-of-the-state-response-to-the-right-to-protest-in-the-light-of-the-covid-19-pandemic/

[13] ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக் கூட்டங்களுக்கு விதித்த தடையினை மீறிய குற்றச்சாட்டில் 8 ஆனி 2021 அன்று கைது செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (CTU) பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட இருபத்தி இரண்டு தொழிற்சங்க உறுப்பினர்கள் சட்டரீதியாக கேள்விக்குட்படுத்தக்கூடிய சூழ்நிலையில் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். பார்க்க: இமேஷ் ரணசிங்க, 'இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் 14-நாட்கள் தனிமைப்படுத்தல் காலப்பகுதிக்கு பல நாட்கள் மீதமிருந்த நிலையில் விடுவிக்கப்பட்டனர்' 16 ஆடி 2021, EconomyNext. https://economynext.com/quarantined-protestors-in-sri-lanka-released-several-days-short-of-14-day-isolation-period-84091/

[14] தினித்த ரத்நாயக்க மற்றும் பமோதி வரவிட்ட, 'ஆனந்த பாலித பிணையில் விடுதலை' 22 ஆவணி 2021, The Morning, https://www.themorning.lk/ananda-palitha-released-on-bail/

செய்தி வெளியிடப்பட்டதனைத் தொடர்ந்து பொலிஸ் திணைக்களத்தின் நடத்தையும் கூர்ந்தாராயப்பட்டது.[15]

நீதித்துறை சேவை ஆணைக்குழுவினால் (நீ.சே.ஆ.) நடத்தப்பட்ட நீதவான்கள் உட்பட பல நீதிபதிகளுக்கு இடையே இடம்பெற்ற கூட்டம் பற்றிய ஊடக அறிக்கைகள் வெளிவந்தன. இக் கூட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களையும் பொதுமக்கள் ஒன்றுகூடுவதனையும் கட்டுப்படுத்த குற்றவியல் நடபடிமுறைக் கோவையின் 98 மற்றும் 106 ஆம் பிரிவுகளைப் பயன்படுத்துமாறு நீதவான்கள் அறிவுறுத்தப்பட்டனர்.[16] இந்த அறிக்கைகளின் அடிப்படையில், நீதவான்களின் நீதித்துறை சிந்தனையினை பிரயோகிப்பது தொடர்பான தற்துணிவில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் கரிசணைகள் எழுப்பப்பட்டன. இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் (இ.ச.ச.) குறித்த அறிவுறுத்தல் தொடர்பிலும் நீதித் துறையின் சுதந்திரத்தின் மீதான அதனுடைய தாக்கம் தொடர்பிலும் கரிசணை தெரிவித்திருந்தது.[17] குறித்த கலந்துரையாடலானது இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டதென்றும், நீ.சே.ஆணைக்குழுவினால் அல்ல என்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 23 ஆவணி 2021 அன்று அனுப்பிய கடிதத்தில் நீ.வே.ஆ. தெளிவுபடுத்தியிருந்தது.[18]

2253/10 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி[19] அறிவித்தலின் மூலமாக 9 கார்த்திகை 2021 அன்று கூட்டங்கள், செயற்பாடுகள், நிகழ்வுகள் அல்லது அது போன்ற ஒன்றுகூடலுக்கான இடங்களினை நடத்துவதற்கான முற்கூட்டிய அனுமதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கட்டாயமாகப் பெற வேண்டிய புதிய ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கொழும்பில் ஒரு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்த எதிர்க்கட்சி திட்டமிட்டிருந்த சந்தர்ப்பத்தில் அதற்கு சில நாட்களுக்கு முன்பு இந்த விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்படவிருந்த இந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக பொலிஸாரினால் பல நீதிமன்ற ஆணைகள்

---

[15] அஜித் சிறிவர்தன மற்றும் யொஹான் பெரேரா, 'ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்யும் போது முறையான நடைமுறைகளை பின்பற்றுங்கள்: அனுர' 6 ஆவணி 2021, Daily Mirror Online, https://www.dailymirror.lk/latest_news/Adopt-proper-procedure-when-arresting-protesters-Anura/342-217690

[16] லக்மால் சூரியகொட, 'சமீபத்திய JSC கூட்டம் குறித்து நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்', 15 ஆவணி 2021, Daily Mirror Online. https://www.dailymirror.lk/latest_news/Judges-and-lawyers-express-dismay-over-recent-JSC-meeting/342-218276

[17] "இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடுமையான கரிசணைகளை வெளிப்படுத்துகிறது, நீ.சே.ஆணைக்குழுவிடம் பதில் வேண்டிநிற்கிறது" 22 ஆவணி 2021, The Sunday Times. https://www.sundaytimes.lk/210822/news/basl-expresses-grave-concerns-seeks-answers-from-jsc-452873.html

[18] பமோதி வரவிட்ட, 'வலைத்தள கருத்தரங்கினை தாங்கள் ஏற்பாடு செய்யவில்லை என நீ. சே. ஆ.. கூறுகிறது' 23 ஆவணி 2021, The Morning. https://www.themorning.lk/jsc-says-it-did-not-organise-webinar/

[19] 9 கார்த்திகை 2021 தேதியிடப்பட்ட 2253/10ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல் http://documents.gov.lk/files/egz/2021/11/2253-10_T.pdf

பெறப்பட்டிருந்த போதிலும் நாட்டின் பல பாகங்களிலிருந்தான மக்களின் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.[20]

**புதிய சட்டங்களும் ஒழுங்குவிதிமுறைகளும்**

பெருந்தொற்று தொடங்கியதிலிருந்து, சுகாதார நெருக்கடியை நிர்வகிக்க தற்போதுள்ள சட்டங்களைப் பயன்படுத்துவது[21] அல்லது புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் முன்முனைப்பு காட்டாதது விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளது. 2020 இல் அரசியலமைப்புக்கான திருத்தத்தினையும் 2021 இல் துறைமுக நகர சட்ட மூலத்தினையும் விரைவான நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் காண்பித்த ஆர்வத்திலிருந்து முரண்படுகின்றது.[22] பொது சுகாதார அவசரநிலை பிரகடனம் மற்றும் பொது சுகாதார நலன்களுக்காக விசேட நடவடிக்கைகளை உருவாக்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் 20 ஐப்பசி 2020 அன்று சமர்ப்பிக்கப்பட்ட தனி உறுப்பினர் சட்டமூலம்[23] போன்ற கொவிட்-19 தொடர்பிலான சட்டங்களை அறிமுகம் செய்வதற்கான எத்தனிப்புக்கள் புறக்கணிக்கப்பட்டன. கொரோனா வைரஸ் தொற்று 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலமும் அவசரகால நிலைமை (அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குதல்) ஒழுங்குவிதிகளும் கொவிட்-19 நெருக்கடியை நிர்வகிக்க சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடத்தக்கவை.

உச்ச நீதிமன்றத்தின் கருத்தேற்புகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் 2021 ஆவணி 17 ஆம் திகதி அன்று, கொரோனா வைரஸ் தொற்று 2019 (கொவிட் -19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலத்திற்கு பாராளுமன்றம் அங்கீகாரம் அளித்தது. இச் சட்டமூலம் 2021 பங்குனி 01 முதல் நடைமுறைக்கு வருகிறது, மேலும் இது 2 ஆண்டுகளுக்கு வலுவிலிருக்கம். வழக்கு மற்றும் ஒப்பந்த ஒப்பந்த உடன்படிக்கைகள் தொடர்பில் இச் சட்டம் நிவாரணம் வழங்குகிறது.

---

[20] "தடை உத்தரவுக்கு மத்தியில் இலங்கை எதிர்க்கட்சி இன்று தனது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது" 16 கார்த்திகை 2021, ColomboPage. http://www.colombopage.com/archive_21B/Nov16_1637044208CH.php

[21] மேலதிக விபரங்களுக்கு, பார்க்க: "சுருக்க வழிகாட்டி 1 - கொவிட் 19 சூழலில் பரிணமிக்கும் சட்டச் சிக்கல்கள்" 28 பங்குனி 2020, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/brief-guide-i-evolving-legal-issues-in-the-context-of-covid-19/ (பின்னிணைப்பு 1)

[22] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, "பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு" (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021). https://www.cpalanka.org/wp-content/uploads/2021/08/06-Chapter-2.pdf

[23] சமன் இத்ரஜித், 'சுகாதார அவசரகாலநிலையை சமாளிக்க சுமந்திரன் தனி உறுப்பினர் சட்டமூலத்தை முன்வைத்தார்' 21 ஐப்பசி 2021, The Island. https://island.lk/sumanthiran-moves-private-members-bill-to-tackle-health-emergency/

எவ்வாறாயினும், பெருந்தொற்றின் காரணமாக ஏற்படக்கூடிய எதிர்பாரா நிகழ்வுகளினை எதிர்கொள்வதற்கு பிற விடயப்பரப்புகளிலான சட்டங்கள் தேவைப்படலாம். உதாரணமாக, தடுப்பூசிகள் வீணடிக்கப்படல் மற்றும் ஆபத்து முன்னுரிமை மீறப்படல் உட்பட்ட முறைகேடுகள் தடுப்பூசி வழங்கல் நடைமுறையில் இருப்பது தெரிந்திருந்தும், தடுப்பூசி வழங்கல் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்குமான ஏற்பாடுகளை இச் சட்டம் கொண்டமைந்திருக்கவில்லை.[24] மேலும், பெருந்தொற்றுக்கள் மற்றும் பிற பொது சுகாதார அவசரநிலைகள் பற்றி அறிக்கையிடல் தொடர்பிலான சட்டம் இலங்கையில் இல்லாதது பற்றியும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தின் சர்வதேச வழிகாட்டிக்குறிப்புகளுக்கு முரணாக கொவிட்-19 காரணமான இறப்புகள் தொடர்பான வரைவிலக்கணத்தினை சூழ்ச்சித்திறனுடன் கையாண்டமை தொடர்பில் இ.ம.அ.ச. (GMOA) சிக்கல் எழுப்பிய மற்றும் உத்தியோக புள்ளிவிபரங்களின் துல்லியத்தன்மை தொடர்பில் தொடர்ச்சியாகக் கேள்வியெழுப்பப்படுகின்ற பின்னனியிலும் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) பெருந்தொற்று தொடர்பான அறிக்கையிடல் தொடர்பான நெறிமுறைகள்[25] மற்றும் செயல்முறைகள் பற்றிய ஏற்பாடுகளினை பெருந்தொற்றினைக் கையாளும் முறை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.[26]

தற்போதைய சுகாதார அவசரகால நிலையினை கையாளுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இலங்கையின் சர்வதேச சட்டக் கடப்பாடுகளுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வது அவசியமாகும். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்திலுள்ள மட்டுப்படுத்தல் மற்றும் மதிப்பு தாழ்வுபடுத்தல் பற்றிய சிரகூசா (Siracusa) கோட்பாடுகள் (1984) பொது அவசரநிலைகளை கையாளுவதற்காக அரசுகளினால் எடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் உறுதிப்படுத்தக்கூடிய சட்டப்படியான நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும் எனக் குறித்துரைக்கின்றது.

[24] 'கொவிட் தடுப்பூசி திட்டத்தில் உள்ள முறைகேடுகளை GMOA சுட்டிக்காட்டுகிறது, விசாரணையை கோருகிறது', 12 ஆனி 2021. NewsWire. https://www.newswire.lk/2021/06/12/gmoa-points-out-irregularities-in-covid-vaccination-program-demands-inquiry/; அருந்ததி சங்கக்கார, 'இலங்கையின் தடுப்பூசி திருடர்கள்', 20 வைகாசி 2021. Colombo Telegraph. https://www.colombotelegraph.com/index.php/vaccine-thieves-of-sri-lanka/

[25] 'கோவிட் தடுப்பூசி திட்டத்தில் உள்ள முறைகேடுகளை GMOA சுட்டிக்காட்டுகிறது, விசாரணையை கோருகிறது', 12 ஆனி 2021. NewsWire. https://www.newswire.lk/2021/06/12/gmoa-points-out-irregularities-in-covid-vaccination-program-demands-inquiry/

[26] ராஜபக்ஷ தவறான கொவிட்-19 இறப்பு புள்ளிவிவரங்களை வெளிப்படுத்தியதை அடுத்து, சிரேஷ்ட சுகாதார அதிகாரியை இலங்கை மாற்றுகிறது. 19 ஆனி 2021. Thre New Indian Express. https://www.newindianexpress.com/world/2021/jun/19/sri-lanka-shuffles-senior-health-official-after-rajapaksa-reveals-wrong-covid-19-death-figures-2318540.html

**அவசரகால நிலையும் அவசரகால ஒழுங்குமுறை விதிகளும்**

அத்தியாவசிப் பொருட்களைப் பதுக்கி வைப்பதனைத் தடுப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலையினை சனாதிபதி 2243/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் 30 ஆவணி 2021 அன்று பிரகடனம் செய்தார். திருத்தப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) இரண்டாம் பிரிவின் கீழ் 30 ஆவணி 2021 தேதியிடப்பட்ட 22243/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழான பிரகடனத்தைத் தொடர்ந்து இவ் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் ஓராம் இலக்க அவசரகால நிலைமை (அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குதல்) ஒழுங்குவிதியும் 30 ஆவணி 2021 தேதியிடப்பட்ட 2243/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலமாக நடைமுறைக்கு வந்தது. ஒழுங்குவிதி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல "ஒழுங்கீனங்களை ஏற்படுத்துகின்றதும் பாவனையாளர்களுக்கும் பொதுமக்களின் சேமநலத்துக்கும் வசதியீனத்தினை விளைவிக்கின்றதுமான சந்தையொன்றை உருவாக்கி அரிசி மற்றும் சீனி உள்ளடங்கிய அத்தியாவசியமான தொகையான உணவுகளை ஒளித்துவைத்தல், அவற்றின் விநியோகத்தை இடையீடுசெய்தல், உயர்ந்த விலைகளை விதித்தல் போன்ற செயற்பாடுகளை தடுப்பதே" இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கமாகும். ஒழுங்குவிதி 12 இன் பிரகாரம், "பொதுமக்களுக்கு அத்தியாவசிய வழங்குகைகளையும் சேவைகளையும் வழங்கும் நோக்கத்துக்காக நெல் மற்றும் அரிசி உட்பட்ட எவையேனும் அத்தியாவசிய உணவுப்பொருட்களையும் அத்தகைய பொருட்களை இடம்பெயர்க்கின்ற ஏதேனும் வாகனத்தையும் கைப்பற்றுவது அவசியமாகவுள்ளதெனத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் கருதுமிடத்து, அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி, நெல் மற்றும் அரிசி உட்பட்ட அத்தகைய உணவுப்பொருட்களையும் அத்தகைய உணவுப்பொருட்களை, இடம்பெயர்க்கின்ற ஏதேனும் வாகனத்தையும் கைப்பற்றலாம்".

அத்தியாவசிப் பொருட்களைப் பதுக்கி வைப்பதனைத் தடுப்பதற்காக ஆவணி 2021 இல் அவசரகால ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தியாவசிய சேவைகளைப் பேணுதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்துதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பணிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகமாக (அ.சே.ஆ.நா.) முன்னாள் இராணுவ ஜெனரலை ஆணையராக ஒழுங்குவிதி 9 இன் கீழ்[27] சனாதிபதி நியமித்தார்.[28] எவ்வாறிருப்பினும், நெல் மற்றும் நெல் மீதான கட்டுப்பாட்டு விலை ஒழிப்பினைத் தொடர்ந்து, அ.சே.ஆ. நாயகத்தினை தாபித்தது பற்றிய முடிவை அரசாங்கம் மறுபரிசீலனை

[27] 30 ஆவணி 2021 தேதியிடப்பட்ட 2243/5ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல். http://documents.gov.lk/files/egz/2021/8/2243-05_T.pdf

[28] மேற்குறிப்பிட்டது

செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. 27 புரட்டாதி 2021 அன்று, குறித்த வர்த்தமானியை இரத்து செய்வதற்கான தீர்மானத்தினை அமைச்சரவை எடுத்ததாகக் கூறப்படுகிறது.

தெளிவான நடைமுறைகள் இல்லாதது எதேச்சையதிகாரமான நடவடிக்கைக்கு வழிவகுக்கும் என்பது பற்றிய ஆரம்பகட்ட கரிசணைகளை மா.கொ.நி. எழுப்பியிருந்ததோடு ஒழுங்குவிதிகளால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மட்டுமே அவசரகால ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியிருந்தது.[29] தற்போதுள்ள சட்ட வரைச்சட்டத்திற்கு மாற்றீடாக அவசரகால ஒழுங்குவிதிகள் கருதப்படக்கூடாது என்பதனையும் மா.கொ.நி. மீள்வலியுறுத்தி இருந்தது.[30] எவ்வாறிருப்பினும் அவசரகால நிலை ஒரு மாதத்திற்குப் பின்னர் வறிதற்றதாகிவிடும்.[31]

## ஆட்சி

முக்கிய குறிப்புகள்

- பெருந்தொற்றினை சுகாதார ரீதியில் எதிர்கொள்வதில் இராணுவத்தினரின் அதிகரித்த பங்கேற்பு.
- செயலணிகளுக்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குமான அரசியல்மயப்படுத்தப்பட்ட நியமனங்கள்.
- பொது நிதி மீது மட்டுப்பாடற்ற கட்டுப்பாட்டினை நிறைவேற்றுத்துறைக்கு வழிவகுக்கின்ற விதத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் பாராளுமன்ற கண்காணிப்பு காணப்படாமை.
- நிறைவேற்றுத்துறையின் அதிகரித்த மேலாதிக்கம்.

**இராணுவமயப்படுத்தப்படலும் அரசியல்மயப்படுத்தப்படலும்**

சிவிலியன் இடங்கள் மற்றும் நிறுவனங்களின் இராணுவமயமாக்கல், மற்றும் பெருந்தொற்று கையாளுகையில் சிவில்-இராணுவ தொடர்புகள் என்பன வளர்ந்து வரும் கரிசணைக்கு ஒரு காரணமாக உள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் போன்ற அரசாங்க பதவிகளுக்கு முன்னாள் மற்றும் தற்போது பதவி வகிக்கின்ற

[29] "அவசரகாலநிலைப் பிரகடனம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பேணுவதற்கான ஒழுங்குவிதிமுறைகள்", 2 புரட்டாதி 2021. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://cpalanka.org/wp-content/uploads/2021/09/Initial-Comment-CPA-Essential-Food-Serivces-ERs-2021-1.pdf

[30] மேற்குறிப்பிட்டது

[31] அவசரகால நிலையை அறிவிக்கும் அறிவிப்பு ஒரு மாத காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். அவசரகாலநிலைச் சட்டத்தை நீட்டிப்பு நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும்.

இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுவதன் காரணமாக சிவிலியன் நிறுவனங்களினுள் இராணுவமயமாக்கல் ஊடுருவியுள்ளது. சுகாதார நெருக்கடிக்கு மத்தியில் ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு செயலணிகளில் இராணுவப்பின்னணி கொண்ட பல உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். NOCPCO இனுடைய தலைவரான இராணுவ தளபதி சவேந்திர சில்வா, கையாளுகையின் முன்னணியல் இருந்ததுடன் பொதுமக்களுக்கான ஒழுங்குவிதிகளுடன் தொடர்புடைய பிராதானமான தீர்மானங்களை தொடாச்சியாக அறிவித்துமிருந்தார்.[32]

2021 தை மாதத்தில், இராணுவத் தளபதியால் பரிந்துரைக்கப்பட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் மாவட்ட அளவிலான தனிமைப்படுத்தல் செயல்முறையை மேற்பார்வையிடவும் நியமிக்கப்பட்டனர்.[33]

சோதனைச் சாவடிகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் ஆளில்லா விமானத்தினைப் (drone) பயன்படுத்தல் போன்ற கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக தொடர்பு தடமறிதல், தடுப்பூசி ஏற்றல் இயக்கி மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு ஆட்களை வலுக்கட்டாயமாக கொண்டு செல்லுதல் போன்ற செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபட்டது.[34] அரிசி மற்றும் சீனி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அரசாங்க- உத்தரவாத விலையில் அல்லது சுங்கத்திலான இறக்குமதி செலவுகள் அடிப்படையில் விலையில் விற்கப்படுகின்றது மற்றும் பொருள் இருப்புகளை மறைத்து வைத்தலைத் தடுத்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துகின்ற அதிகாரங்களை அதிகாரிகளுக்கு வழங்குகின்ற செயற்பாடுகளில் இராணுவம் மேற்பார்வையிடும் என சனாதிபதி பேச்சாளர் மிக அண்மையில் கூறினார்.[35]

மேலும், தற்காலிக கட்டமைப்புகளின் அரசியல் மயப்படுத்தப்பட்ட தன்மையை பல முக்கிய நியமனங்கள் மூலம் அவதானிக்க முடியும்.

உதாரணமாக, அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்கான சனாதிபதி செயலணி உள்ளிட்ட இச் செயலணிகளில் பலவற்றிற்கு பசில் ராஜபக்ச தலைமை வகிக்கின்றார். இது விநியோகச்

---

[32] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, “பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு” (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021).

[33] மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் கொவிட்-19 கட்டுப்பாட்டுப் பணிகள் மேலும் வலுப்படுத்தப்படும் 01 தை 2021, இலங்கை இராணுவம். https://www.army.lk/news/covid-19-control-work-be-further-strengthened-district-coordinating-officers

[34] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, “பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு” (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021).

[35] ‘அந்நிய செலாவணி நெருக்கடி மோசமடைந்து வருவதால் உணவு விலைகளை கட்டுப்படுத்த இலங்கை பொருளாதார அவசரநிலையை பிரகடனம் செய்கிறது’ 1 புரட்டாதி 2021, The Hindu. https://www.thehindu.com/news/international/sri-lanka-declares-economic-emergency-to-contain-food-prices-as-forex-crisis-worsens/article36226141.ece

சங்கிலியில் அரசாங்க ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது பற்றிய கரிசணைகளைத் தோற்றுவிக்கின்றது. இந்த இராணுவ மற்றும் அரசியல் நியமனங்கள் சுகாதாரம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற அனுபவம் வாய்ந்த சிவில் சேவையைச் சேர்ந்தவர்களை கருத்திற்கொள்ளவில்லை என்பது கவனிக்கப்படவேண்டியது.[36] சமீபத்திய மாதங்களில் பல அரசு நிறுவனங்களின் தலைவர்கள் பதவி விலகியமை இந்த நிறுவனங்களின் சுதந்திரமற்ற தன்மை குறித்து பெருகிய சந்தேகங்களை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

**பெருந்தொற்று காலப்பகுதியில் பாராளுமன்றத்தின் வகிபாகம்**

கொவிட்-19 க்கான சுகாதார அவசரநிலை இலங்கையில் காணப்படாத ஒரு காலகட்டத்தில் 2 பங்குனி 2020 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. எனினும், நாட்டில் பல கொவிட்-19 தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதினைத் தொடர்ந்து தேர்தலை ஒத்திவைக்க கோரும் அழைப்புகள் விடுக்கப்பட்டன. 19 பங்குனி அன்று வேட்புமனு தாக்கல்செயவதற்கான கால எல்லை முடிவடைந்திருந்த நிலையில் தேர்தலினை ஒத்திவைக்க தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்தது. இதன் காரணமாக பெருந்தொற்று ஆரம்பித்து பல மாதங்கள் கடந்துவிட்டிருந்த நிலையில், இயங்குகின்ற பாராளுமன்றம் நாட்டில் இருக்கவில்லை.

பாராளுமன்றத்தைக் கலைத்து அறிவித்த வர்த்தமானியை மீளப்பெறுவதிலிருந்து ஜனாதிபதியினைத் தடுக்கின்ற ஏற்பாடுகள் அரசியலமைப்பிலோ அல்லது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலோ இல்லை என்பது இங்கே கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.[37]

பாராளுமன்ற கண்காணிப்பு காணப்படாமை பொது நிதி மீது மட்டுப்பாடற்ற கட்டுப்பாட்டினை நிறைவேற்றுத்துறை கொண்டிருப்பதற்கு வழிவகுத்தது.[38] பெருந்தொற்றிற்கு முகங்கொடுக்கின்ற நெருக்கடியான தருணங்களில், பாராளுமன்றத்தை கூடும்படி அழைக்கத்தவறியமை பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்காக தற்போதுள்ள பல பொறிமுறைகளினை அரசாங்கம் பயன்படுத்துவதிலிருந்து தடுத்துவிட்டது.[39]

---

[36] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, "பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு" (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021).

[37] மேலதிக விபரங்களுக்கு, பார்க்க: "சுருக்க வழிகாட்டி 1 - கொவிட் 19 சூழலில் பரிணமிக்கும் சட்டச் சிக்கல்கள்" 28 பங்குனி 2020, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/brief-guide-i-evolving-legal-issues-in-the-context-of-covid-19/ (பின்னிணைப்பு 1)

[38] மேற்குறிப்பிட்டது

[39] உதாரணமாக, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 21(2)ஆம் பிரிவின் கீழ் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதைப் போன்றே அரசியலமைப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சனாதிபதியால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமெனில், ஒரு கட்டளையொன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பார்க்க: கொவிட்-19இனைக் கையாளுவதற்கு ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள்"

அதிகரித்த நிறைவேற்றுத்துறை மேலாதிக்கம், சர்வாதிகார ஆட்சிகளின் ஒருங்கிணைவு, பாராளுமன்ற மேற்பார்வையின்மை மற்றும் வினைத்திறனான சட்டங்கள் மற்றும் நிர்வாகப் பொறிமுறைகளுக்குப் பதிலாக ஜனரஞ்சகவாதம் என்பவற்றிற்கு இப் பெருந்தொற்று வழிவகுத்துள்ளமை சர்வதேச ரீதியில் அவதானிக்கப்பட்டுள்ளது.[40]

தொற்றுநோயின் முதல் சில மாதங்களில் இலங்கையில் செயற்படுகின்ற பாராளுமன்றம் இல்லாதிருந்த சூழ்நிலை அவசர கால முன்னெடுப்பினை மேற்பார்வையிடுதல், பொது சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிதிக்கு ஒப்புதலளித்தல், கொவிட்-19 எதிர்கொள்கின்ற செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல் என்பவற்றில் பாராளுமன்றத்தின் வகிபாத்தினை பாரியளவில் சீர்குலைத்துள்ளது.[41]

## உரிமைகள்

முக்கிய குறிப்புகள்:

- அதிகரித்த பொலிஸ் துஷ்பிரயோகங்கள் / ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக அல்லது சுகாதார ஒழுங்குவிதிமுறைகளை மீறியதற்காக கைதுசெய்யப்பட்டவர்களின் தடுப்புகாவலின் போதான மரணங்கள்.
- போலிச் செய்திகளை முறியடிப்பதற்கான சட்டங்களினூடாக கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் மீதான அடக்குமுறை.
- கொவிட் நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தவர்களை புதைப்பது தொடர்பில் முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சமான கொள்கை.
- சுகாதாரமற்ற நிலைமைகள், புலம்பெயர் பணியாளர்கள், குறைந்த ஊதியம் பெறுவோர், மற்றும் சிறைக்கைதிகளை முன்னுரிமைப்படுத்தலில் உள்ள இடைவெளிகள்.
- பெருந்தொற்றுக் காலப்பகுதியில் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான அதிகரித்த குடும்ப வன்முறை.

---

சித்திரை 2020. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/wp-content/uploads/2020/04/Brief-Guide-III-CURFEW.pdf (பின்னிணைப்பு 3)

[40] Ronan Cormacain & Ittai Bar-Siman-Tov, 'கொவிட்-19 காலப்பகுதியில் சட்டவாக்கங்கள்' (2020) 8 (1-2, 3-9) சட்டத்தின் கோட்பாடு மற்றும் நடைமுறை (Routledge 2020). https://www.tandfonline.com/doi/pdf/10.1080/20508840.2020.1816017?needAccess=true

[41] "கொவிட்-19 மற்றும் பெருந்தொற்று ஒன்றின் போது பாராளுமன்றத்தின் வகிபாகம், 24 பங்குனி 2020, ParlAmericas http://parlamericas.org/uploads/documents/COVID19_and_Role_of_Parliaments_ENG.pdf

**பொலிஸ் துஷ்பிரயோகங்கள்**

கொவிட்-19 நெருக்கடிக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் எதேச்சையதிகாரமான தடுத்துவைப்பு, சித்திரவதை மற்றும் அளவுக்கு மீறிய பலத்தினைப் பிரயோகித்தல் பற்றிய குற்றச்சாட்டுகள் உள்ளடங்கலாக சமீபத்திய பொலிஸ் துஷ்பிரயோகங்கள் பற்றிய ஊடக அறிக்கைகள் கரிசணையினைத் தோற்றுவிக்கின்றன.[42]

ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதில் பொலிஸ் அதிகாரிகள் பிரயோகித்த அளவுக்கு மீறிய பலத்தினை பயன்படுத்திய காணொளிகள்[43] வெளிவந்ததை ஒட்டிய காலப்பகுதியில் ஆனி 2020 இல் கறுப்பினத்தவர்களின் உயிர்களும் மதிப்பமிக்கவை கூட்டொருமைப்பாடு போராட்டத்தின் போதான பொலிஸாரின் நடத்தை விமர்சனங்களை ஈர்த்தது.[44]

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியதற்காக கைது செய்யப்பட்டவர்கள் தடுப்புக்காவலில் இறந்தமை மற்றும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகள் துஷ்பிரயோகமான முறையில் பிரயோகிக்கப்பட்டமை பற்றிய அறிக்கைகளும் பாரியளவிலான கரிசணைகளை ஏற்படுத்தியுள்ளது.[45] தனது குடும்பத்திற்கு உணவு தேடி சென்று கொண்டிருந்த ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டு சாலையில் நிராதரவாக விடப்பட்ட போது கடந்து சென்றபேருந்தினால் கொல்லப்பட்ட சம்பவத்தினையும் இவ் அறிக்கைகள் உள்ளடக்கும். இதனைத் தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் ஏனைய இருவரும் கைது செய்யப்பட்டனர்.[46] முள்ளிவாய்க்கால் வீதி பெயர்ப் பலகையினை புகைப்படம்

---

[42] 'இலங்கை: கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் பொலிஸ் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு', 6 ஆவணி 2021, மனித உரிமைகள் கண்காணிப்பகம். https://www.hrw.org/news/2021/08/06/sri-lanka-police-abuses-surge-amid-covid-19-pandemic

[43] சமீப காலத்திய ஆர்ப்பாட்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள எதிரான தடை தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன மற்றும் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன ஆகியோருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) அனுப்பியுள்ள கடிதத்தில், சுகாதார ஒழுங்குவிதிகளை மேம்போக்காக மீறியதற்காக போராட்டக்காரர்களை கைது செய்கின்ற போது பொலிஸாரின் மிதமிஞ்சிய பலப்பிரயோகம் மற்றும் கடுமையான கையாளுகை தொடர்பில் கடும் கரிசணம் தெரிவித்துள்ளது. பார்க்க: 'அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்வதையும் கட்டாயமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதனையும் BASL கண்டிக்கிறது'. 10 ஆடி 2021, Colombo Telegraph. https://www.colombotelegraph.com/index.php/basl-condemns-arrest-and-forced-quarantining-of-peaceful-protesters/

[44] மீரா சீனிவாசன், 'இலங்கையில் 'காவல்துறையின் மனிதப்பண்பற்றதன்மை' குறித்து கரிசணம். 10 ஆனி 2020, The Hindu. https://www.thehindu.com/news/international/concern-over-police-brutality-in-sri-lanka/article31798486.ece

[45] மேலும், இந்தக் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இலங்கையில் உள்ள அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தை ஸ்காட்லாந்து பொலிஸ் இடைநிறுத்தி வைத்துள்ளது. டேவிட் லீஸ்க், 'துஷ்பிரயோக அச்சத்தினால் இலங்கையில் பொலிஸ் பயிற்சி இடைநிறுத்தப்பட்டது' என்பதைப் பார்க்கவும், 27 கார்த்திகை 2021, The Times https://www.thetimes.co.uk/article/police-training-in-sri-lanka-halted-over-abuse-fears-3w87qk9rp

[46] பசில் பெர்ணான்டோ, 'தனது குடும்பத்திற்கு உணவு தேடிச் சென்ற ஒருவன் அடித்துக் கொல்லப்பட்டார்', 28 வைகாசி 2021, Colombo Telegrapgh. https://www.colombotelegraph.com/index.php/a-man-who-went-in-search-for-food-for-his-family-beaten-killed/

எடுத்ததற்காக பத்திரிகையாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரனை இலங்கை இராணுவ அதிகாரிகள் தாக்கிய் செய்தி மிக அண்மையில் வெளியாகியது.[47]

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மைக்கேல் பாச்லெட் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு எழுதிய தை 2021இல் அறிக்கையில் "சட்டம் ஒழுங்கு மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாடு பற்றிய இராணுவமயமாக்கப்பட்ட அணுகுமுறைக்கு" மத்தியில் அவர் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாக இடம்பொறும் "பொலிஸ் தடுப்பக்காவலிலான இறப்பு மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள் கும்பல்கள் தேடுதல் மற்றம் பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது பொலிஸ் அதிகாரிகளினால் சுட்டுக்கொல்லப்படல்" தொடர்பில் கரிசணை அடைந்துள்ளதாக எழுதியுள்ளார். 2020 ஆனி முதல் ஐப்பசி வரையிலான காலத்தில் இலங்கை பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்புடைய ஐந்து நீதிக்குப் புறம்பான கொலைகள் இவ் அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[48]

சமீபத்திய பொலிஸ் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து கருத்து தெரிவித்த மனித உரிமைகள் கண்காணிப்பகம் (HRW), அரசாங்கம் "பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான சுயாதீனமான மேற்பார்வையை மீளக்கட்டமைக்க வேண்டும் என்றும் பொலிஸ் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அர்த்தமுள்ள முறையில் விசாரித்து வழக்குத் தொடரவேண்டும்" எனவும் கூறியுள்ளது.[49]

**அடக்குமுறை**

அரசாங்க அதிகாரிகளை விமர்சித்தும் அவர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தும் சமூக ஊடகங்களில் பதிவுகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கும் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் (CID) பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியதாக 1 சித்திரை 2021 அன்று தெரிவிக்கப்பட்டது.[50]

அன்றிலிருந்து, சமூக ஊடகங்களில் போலி செய்திகளை பரப்புவதைத் தடுப்பதற்கு குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையிலும் குற்றவியல் நடைபடிமுறைச் கோவையிலும்

---

[47] 'தமிழ் ஊடகவியலாளர் மீது இலங்கை படையினர் முட்கம்பியால் தாக்குதல்', 27 கார்த்திகை 2021, Tamil Guardian. https://www.tamilguardian.com/content/sri-lankan-soldiers-attack-tamil-journalist-barbed-wire

[48] 'பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழக்கூடிய அபாயகரமான பாதையில் இலங்கை உள்ளது – ஐ.நா அறிக்கை, 27 தை 2021, மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=26695&LangID=E

[49] 'இலங்கை: கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் பொலிஸ் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு', 6 ஆவணி 2021, மனித உரிமைகள் கண்காணிப்பகம். https://www.hrw.org/news/2021/08/06/sri-lanka-police-abuses-surge-amid-covid-19-pandemic

[50] 'சமூக ஊடகங்களில் அரசு அதிகாரிகளை விமர்சிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை', 1 சித்திரை 2020. Daily Mirror. https://www.dailymirror.lk/breaking_news/Strict-action-against-those-criticise-state-officials-on-social-media/108-186028

உள்ள சட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுகிறது. “தேசிய பாதுகாப்பை பாதிக்கும் மற்றும் சமூகங்களுக்கு இடையே வன்முறையைத் தூண்டும் கூற்றுக்கள்” உட்பட போலிசெய்திகளைப் பரப்பும் தனிநபர்கள் ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்திற்கு உட்படுத்தப்படலாம்.

பெருந்தொற்றினை கையாண்ட முறை தொடர்பில் அரசாங்கத்தை விமர்சித்த நபர்களைக் கைது செய்த பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உடனடி எரிபொருள் பற்றாக்குறை பற்றி ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்ததன் காரணமாக தொழிற்சங்க உறுப்பினர் ஆனந்த பாலித, கைது செய்யப்பட்டு[51], பின்னர் கொழும்பு மேலதிக நீதவானினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். உண்மைத் தகவல்களின் அடிப்படையில் அபிப்பிராயங்களினை வெளிப்படுத்துவது தடுப்புக்காவலில் வைப்பதற்கான ஒரு விடயமாகாது என்பதை நீதவான் எடுத்துக்காட்டினார்.[52]

ரிமாண்ட் செய்ய வேண்டியது அல்ல. 26 ஆகஸ்ட் 2021 அன்று, தவறான உள்ளடக்கத்தை பகிர்ந்து கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு ஒரு பல்கலைக்கழக மாணவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.[53]

“அரசாங்க அதிகாரிகளையோ அல்லது கொள்கைகளையோ வெறுமனே விமர்சித்ததற்காக கைது எவரேனையும் கைது செய்தல் அரசியலமைப்புக்கு முரணானது,” என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னர் குறிப்பிட்டுள்ளதோடு, “பொய்யான தகவல்கள் பரவுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் பொருத்தமான அளவின் அடிப்படையில் எடுக்கப்படவேண்டும்” என்றும் ஐக்கிய நாடுகள் சபையும் மீள்வலியுறுத்தியது.[54]

அரசாங்கத்தின் மீதான அதிருப்தி மற்றும் விமர்சனங்களைக் கட்டுப்படுத்த குற்றவியல் தண்டனைகளை விதிப்பது அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் மீது மிகவும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தும். இதன் விளைவாக ஏற்படக்கூடிய தீங்கு விளைவிக்கக்கூடிய தவறான தகவல் அல்லது தீங்கற்ற

---

[51] தினித்த ரத்நாயக்க மற்றும் பாமோதி வரவிட்ட, ‘ஆனந்த பாலித பிணையில் விடுதலை’, 22 ஆவணி 2021, The Morning. https://www.themorning.lk/ananda-palitha-released-on-bail/

[52] ‘உண்மையை வெளிப்படுத்துவது தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கான காரணம் இல்லை’- தொழிற்சங்க உறுப்பினரை நீதவான் விடுவித்தார்” 22 ஆவணி 2021, NewsFirst. https://www.newsfirst.lk/2021/08/22/expressing-the-truth-no-reason-to-remand-magistrate-releases-unionist/

[53] கொவிட்-19 தொடர்பில் தவறான விபரங்களைப் பகிர்ந்ததற்காக ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர், 2 சித்திரை 2020, Daily Mirror. https://www.dailymirror.lk/breaking_news/Five-arrested-for-sharing-false-content-on-COVID-19/108-186120. மேலும் பார்க்க: கெஹான் குணதிலக்க, ‘தவறான தகவல்களை சட்டவிரோதமாக்கல்: பொருத்தமான நேரமோ இடமோ இல்லை’ 26 வைகாசி 2021. Groundviews. https://groundviews.org/2021/05/26/criminalising-disinformation-neither-the-time-nor-the-place/

[54] 'கொவிட்-19 சுகாதார நெறிமுறைகளை பாதுகாப்புமயப்படுத்தல்' ஆவணி 2021, ஆசிய நிலையம். https://www.hri.global/files/2021/08/18/HRI_Asia_Centre_-_Securitisation_FINA1.PDF

தவறான தகவல் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டின் மீதான மழுங்கடிப்பினை ஏற்படுத்தக்கூடிய இத் தண்டனைகளின் விகிதாசாரத்தன்மை தொடர்பிலும் கரிசனைகள் எழுப்பப்பட்டுள்ளது.

**சிறுபான்மை சமூகங்கள் மீதான தொடர்ச்சியான பாரபட்சம்**

2020 சித்திரை 11ஆம் திகதியிடப்பட்ட 2170/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலமாக கோவிட்-19 ஆல் இறந்த அல்லது இறந்ததாக சந்தேகிக்கப்படும் ஒருவரின் உடலை தகனம் செய்வது கட்டாயமாக்கப்பட்டது.[55] ஆரப்பாட்டங்களையும் சர்வதேச அழுத்தங்களையும் தொடர்ந்து, அடக்கம் செய்வதனையம் உள்ளடக்கிய விதத்திலே இச் சர்ச்சைக்குரிய ஒழுங்குவிதிமுறையை[56] அரசாங்கம் பின்னர் திருத்தியது.[57] இதன் பின்னர் மன்னார் வளைகுடாவில் உள்ள இரணைதீவு அடக்கம் செய்வதற்கான பிரதேசமாக குறித்தறிவிக்கப்பட்டது. இது கொழும்பில் இருந்து ஏறத்தாள 300 கி.மீ. (186 மைல்கள்) தொலைவில் உள்ளதுடன், குறைந்த மக்கள் தொகை கொண்டிருப்பதே அந்தப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது.[58]

எவ்வாறெனினும், சில முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ தலைவர்கள் அரசாங்கத்தின் இச் சமீபத்திய நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர். இது அந்த பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களை நிறுத்தும் ஒரு செயற்பாடு என்ற கரிசனைகள் உண்டு. 90களின் தொடக்கத்தில் உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்து, பின்னர் 2018இல் மட்டுமே மீள்திரும்பிய ஏறத்தாள 250 தமிழர்கள் இத் தீவில் இருப்பதாக கூறப்படுகிறது.[59]

கட்டாய தகனம் என்ற பாரபட்சமான கொள்கை மாற்றப்பட்டாலும், தொலைதூரத்தில் அமைந்துள்ள ஒதுக்குப்புறமான ஒரு பிரதேசத்தினைத் தேர்ந்தெடுத்திருப்பது முக்கியமான மத

---

[55] 'வினாக்களும் விடைகளும்: தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் இலங்கையில் கொவிட்-19இனை கையாளுவதில் இதனுடைய தாக்கம் எத்தகையது.' 6 கார்த்திகை 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/q-and-a-on-regulations-issued-under-the-quarantine-and-prevention-of-diseases-ordinance-how-this-impacts-the-covid-19-response-in-sri-lanka/ (பின்னிணைப்பு 4)

[56] மேலதிக விபரங்களுக்கு, பார்க்க: "வினாக்களும் விடைகளும்: தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் இலங்கையில் கொவிட்-19இனை கையாளுவதில் இதனுடைய தாக்கம் எத்தகையது.' 6 கார்த்திகை 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/q-and-a-on-regulations-issued-under-the-quarantine-and-prevention-of-diseases-ordinance-how-this-impacts-the-covid-19-response-in-sri-lanka/ (பின்னிணைப்பு 4), மற்றும் இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்ட வரைச்சட்டம் பற்றிய இற்றைப்படுத்தல், 12 வைகாசி 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ (பின்னிணைப்பு 5).

[57] 'கொவிட்-19: இலங்கை ஒதுக்குப்புறமான தீவுகளை அடக்கம் செய்தலுக்காக தேர்ந்தெடுக்கின்றது', 2 பங்குனி 2021, BBC. https://www.bbc.co.uk/news/world-asia-56249805

[58] மேற்குறிப்பிட்டது

[59] மேற்குறிப்பிட்டது

மற்றும் பிற சந்தர்ப்பங்களில் தங்களுடைய உறவுகள் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கு குடும்பத்தினரும் நண்பர்களும் செல்வதை கடினமாக்குகிறது.

இது தவிர, மக்கள் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவமயமாக்கல் அதிகரித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் ஊரடங்கு உத்தரவு / நடமாட்டம் மீதான கட்டுப்பாட்டை மீறிய தமிழ் பொதுமக்கள் மீது பொலிசாரும் இராணவத்தினரும் பரவலான முறையிலும் அதிகரித்த எண்ணிக்கையிலும் நடத்திய தாக்குதல்கள் தொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.[60] பெருந்தொற்றின் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் என்ற போர்வையில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் சிறுபான்மையினருக்கு தொல்லையளிக்கின்றனர் என்ற கரிசணையை இது எழுப்புகிறது.

**நலிவுற்ற குடிமக்கள் மற்றும் சமூகங்கள் மீதான தாக்கங்கள் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான சமத்துவமின்மைகள்**

சமூகத்தின் குறிப்பிடும்படியாக நலிவுற்ற மற்றும் பின்தங்கிய பிரிவினர் மீதான பெருந்தொற்றினதும் மற்றும் அதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் விளைவினதும் தாக்கம் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம்.[61] குறைந்த ஊதியம் பெறுபவர்கள், சுதந்திர வர்த்தக வலய (FTZ) தொழிலாளர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட சமூகத்தினரை இந்தப் பிரிவுகள் உள்ளடக்கும்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் சில பகுதிகளில் இருந்தான குறைந்த ஊதியம் மற்றும் உற்பத்தித் திறன் அடிப்படையிலான ஆடைத் தொழிலாளர்கள் தரக்குறைவான மற்றும் நெரிசலான வாழ்க்கை நிலைமைகளினால் சுகாதார நெருக்கடிக்கு மத்தியில் பாதிக்கப்படைந்துவருகின்றனர்.

இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட தனிமைப்படுத்தல் செயல்முறையில் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டமை வெளிப்படையாகத் தெரியவந்தது. அத்தகைய தொழிலாளர்களின் பிரதிநிதிகளால், 2020 ஐப்பசியில், குரூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான நடத்தை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டது.[62] மிக சமீபத்தில் 2021 மார்கழியில்,

[60] சுபாஷ் சோமசந்திரன், கொவிட்-19: போரினால் பாதிக்கப்பட்ட வட இலங்கையில் இராணுவம் அடக்குமுறையை முடுக்கிவிட்டுள்ளது, 16 வைகாசி 2020, சர்வதேச பொதுவுடமைவாதி இணையத்தளம். https://www.wsws.org/en/articles/2020/05/16/nort-m16.html

[61] "இலங்கையின் சுபீட்சத்தின் நோக்கம்: மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் தற்போதைய போக்குகள் மீதான விமர்சனம்", 12 ஆடி 2021, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/sri-lankas-vistas-of-prosperity-and-splendour-a-critique-of-promises-made-and-present-trends/

[62] "இலங்கை: சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களை தனிமைப்படுத்துவதில் கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான முறையில் நடத்துகை தொடர்பில் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக

அடிமைத்தனத்தின் தற்கால வடிவங்கள் மீதான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் தனது அறிக்கையில் ஏனையவர்கள் மத்தியில் ஆடைத் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலிவடைந்த நிலைமையை வலியுறுத்தினார்.[63]

எனினும், 21 வைகாசி 2021 முதல் விதிக்கப்பட்ட முடக்கத்தின் போது ஆடைத் தொழிற்சாலைகள் திறந்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார். தொழிற்சாலைகளில் மற்றும் பல தொழிலாளர்கள் வசிக்கும் நெரிசலான தங்குமிடங்களில் பல தீவிர வைரஸ் தோற்றமும் பரவலும் இடம்பெற்றதெனவும், தொழில்தருநர்கள், உற்பத்தி மட்டங்களை பேணுவதற்காக குறைந்தளவிலான சோதனைகளை மேற்கொண்டதுடன், தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையினை குறைத்தும் அறிவித்தனர் என தொழிற்சங்கங்களும் பொது சுகாதார பரிசோதகர்களும் குற்றம் சாட்டினர்.[64]

சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் நிலவிய கூட்ட நெரிசல் மற்றும் சுகாதாரமற்ற வாழ்க்கை நிலைமைகள் ஆகியவையும் சிறைச்சாலைகளில் வைரஸ் விரைவாக பரவ வழிவகுத்துள்ளன. கம்பஹா மாவட்டத்திலுள்ள மஹர சிறைச்சாலை, கண்டியிலுள்ள போகம்பர சிறைச்சாலை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் பாதுகாப்புப் படைகள் அவர்களைத் தாக்குவதற்கு வழிவகுத்தது. இது முறையே பதினொன்று, ஒன்று மற்றும் இரண்டு சிறைக்கைதிகள் இச் சிறைச்சாலைகளில் இறப்பதற்கும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைவதற்கும் காரணமாகியது.[65] சமீபத்தில் FTZ தொழிலாளர்களுக்கும்[66] சிறைக்கைதிகளுக்கும்[67] தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், இவர்களிடையே கொவிட்-19 மேலும் பரவுவதைத் தடுக்க முன்னுரிமைப்படுத்தல் மற்றும் செயல்படுத்தலில் உள்ள இடைவெளிகள் நிவர்த்திசெய்யப்பட வேண்டும்.

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது" 17 ஐப்பசி 2020, Sri Lanka Brief. https://srilankabrief.org/sri-lanka-a-complaint-logged-against-general-shavendra-silva-for-cruel-inhumane-degrading-treatment-in-quarantining-ftz-workers/

63 இலங்கைக்கான தனது பயணத்தின் காரணங்கள் மற்றும் விளைவுகள் உட்பட, அடிமைத்தனத்தின் தற்கால வடிவங்கள் மீதான சிறப்பு அறிக்கையாளரின் பணி நிறைவுக்கூற்று (26 கார்த்திகை - 3 மார்கழி) OHCHR. https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=27895&LangID=E

64 "இலங்கை: பெருந்தொற்றின் போது ஆடைத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும்" 12 ஆடி 2021, மனித உரிமைகள் கண்காணிப்பகம். https://www.hrw.org/news/2021/07/12/sri-lanka-protect-garment-workers-rights-during-pandemic

65 'கொவிட்-19 சுகாதார நெறிமுறைகளை பாதுகாப்புமயப்படுத்தல்' ஆவணி 2021, ஆசிய நிலையம். https://www.hri.global/files/2021/08/18/HRI_Asia_Centre_-_Securitisation_FINA1.PDF

66 காஞ்சனா ருவன்புர, சமந்தி குணவர்தன மற்றும் புத்திமா பத்மசிறி, "தடுப்பூசி ஏற்றத்தாழ்வு மற்றும் ஆடைத் துறை தொழிலாளர்களுக்கான இழப்பு மதிப்பு", 22 வைகாசி 2021, Groundviews. https://groundviews.org/2021/05/22/vaccine-inequality-and-the-cost-to-garment-sector-workers/

67 திலினி மதுஷங்கி, 'சிறைக் கைதிகளுக்கு கொவிட்-19இற்கு எதிரான தடுப்பூசி இன்று தொடங்குகிறது', 5 ஆவணி 2021, Ceylon Today. https://ceylontoday.lk/news/vaccination-of-prison-inmates-against-covid-19-begins-today

பெருந்தொற்றின் பாலின தாக்கம் தொடர்பில் அரசாங்கத்தால் போதுமான அளவு அவதானம் செலுத்தப்படவில்லை. பெருந்தொற்று தொடங்கியதில் இருந்து, ஒரு "நிழல் பெருந்தொற்றுக்கு" வழிவகுக்கின்ற பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை, குறிப்பாக குடும்ப வன்முறை, அதிகரித்துள்ளமை தொடர்பிலான தரவுகள் மற்றும் அறிக்கைகள் உலகெங்கிலும் வெளிவந்துள்ளன.[68] இந்த உலகளாவிய போக்குக்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. பெண்கள் குற்றம்புரிபவர்களுடன் வீட்டினுள் முடக்கப்பட்டிருத்தல், வேலை இழப்பு காரணமான மன அழுத்தம், நிதி நெருக்கடிகள் போன்ற இன்னும் பல்வேறுபட்ட காரணங்களால், நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் குடும்ப வன்முறை சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததாக அறிக்கைகள் வெளிவந்தன.[69] பெருந்தொற்று மற்றும் மக்கள் நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகள் அதிகாரிகளிடம் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் மற்றும் ஆதரவு வலைப்பின்னல்களை அணுகுவதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன.[70] எனவே, கொவிட்-19 சுகாதார நெருக்கடியின் பாலின அடிப்படையிலான தாக்கத்தை பெருந்தொற்றினைக் கையாளுவதில் கவனத்தில் கொள்ள வேண்டும், மேலும் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான தற்போதைய சட்ட கட்டமைப்பு மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்த வேண்டும்.

## பொறுப்புக்கூறலும் ஆட்சியும்

முக்கிய குறிப்புகள்:

- செய்கடமை (இருகம) நிதி தொடர்பிலான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்தன்மை இல்லாமை.
- தடுப்பூசி கொள்முதலில் நிலவுகின்ற தாமதம், வெளிப்படையற்றதன்மை, தவறான முகாமைத்துவம்
- தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை (NMRA) மீதான முறையற்ற மேலாதிக்கம்

[68] "நிழல் பெருந்தொற்று: கோவிட்-19 இன் போது பெண்களுக்கு எதிரான வன்முறை" ஐ.நா. பெண்கள் https://www.unwomen.org/en/news/in-focus/in-focus-gender-equality-in-covid-19-response/violence-against-women-during-covid-19

[69] மினோவான் கமகே மற்றும் ரொசெல் தும்மோதர, "இலங்கை முடக்கப்பட்டிருந்த காலத்தில் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை அதிகரிப்பு பற்றிய ஆய்வு", 12 ஆவணி 2021, Colombo Telegraph. https://www.colombotelegraph.com/index.php/a-study-on-the-rise-of-domestic-violence-against-women-in-sri-lanka-during-the-lockdown/

[70] பியுமி பொன்சேகா, 'பெருந்தொற்று தொடர்பான குடும்ப வன்முறை: பாதிக்கப்பட்டவர்களுக்கு விரும்பிய உதவிகள் பெரும்பாலும் கிடைப்பதில்லை', 11 ஆனி 2021, Daily Mirror. https://www.dailymirror.lk/news-features/Pandemic-related-Domestic-Violence%3A-Victims-don%E2%80%99t-often-get-the-desired-help/131-213849

**செய்கடமை (இருகம) நிதி தொடர்பான முறைகேடுகள்**

“கொவிட்-19 வைரஸ் நாட்டில் பரவுவதனை கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்ட தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சமூக நலத் திட்டங்களை வலுப்படுத்துவதற்காக” 23 பங்குனி 2020 அன்று, “இருகம” கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதி சனாதிபதியால் தாபிக்கப்பட்டது.[71]

இது சனாதிபதி நிதியத்திலிருந்தான 100 மில்லியன் ரூபா நன்கொடையுடன் தாபிக்கப்பட்டது. பொது மக்கள், பல உள்ளூர் நிறுவனங்கள், அத்துடன் வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கையர்கள் நிதிக்கு நன்கொடைகள் வழங்கினர்.[72]

இருகம நிதி தொடர்பான பொதுமக்களின் வினாக்களுக்கு பதிலளிக்கும் வகையில், சனாதிபதி ஊடகப் பிரிவு (ச.ஊ.பி.) நிதி நிறுவப்பட்டதிலிருந்தான அதனுடைய வருமானம் மற்றும் செலவினங்களை குறித்துரைக்கின்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது. அவ் அறிக்கையின் படி, வைகாசி 2021 வரை நிதியின் 23 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதி தடுப்பூசி வழங்கலுக்காக செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.[73]

ஒரு தனி சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத காரணத்தினால் நிதியை நேரடியாக கணக்காய்வு செய்வதற்கான அரசியலமைப்பு அதிகாரங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு (தே.க.அ.) இல்லை என தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் துணை கணக்காய்வாளர் நாயகம் வலியுறுத்திக்கூறினார். அதனால், செய்கடமை நிதி வருடாந்த சனாதிபதி செயலக கணக்காய்வின் போது கணக்காய்வு செய்யப்படவேண்டும்.[74]

எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் (பாதீடு) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் தேசிய கணக்காய்வு அலுவலகம் நிதியின் கணக்காய்வினைத் தொடங்கி அதை நிறைவு செய்யும் என்று அவர் மேலும் வலியுறுத்திக்கூறினார்.[75] வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்தன்மை இல்லாத போதிலும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு

---

[71] ‘இருகம கோவிட்-19 நிதி மீதியில் 6%இனை மட்டுமே அரசாங்கம் செலவிட்டது’, 5 வைகாசி 2021, PublicFinance.lk https://publicfinance.lk/en/topics/The-government-spent-only-6-of-the-Itukama-COVID-19-fund-balance-1620900512

[72] மஹீஷா முதுகமுவ, ‘இதுகம கொவிட்-19 நிதி: நேரடியாகக் கணக்காய்வு செய்யப்பட முடியாது: கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்’, 23 வைகாசி 2021. The Morning https://www.themorning.lk/itukama-covid-19-fund-cannot-be-directly-audited-auditor-general-department/

[73] மேற்குறிப்பிட்டது

[74] மேற்குறிப்பிட்டது

[75] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, “பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு” (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021). https://www.cpalanka.org/wp-content/uploads/2021/08/06-Chapter-2.pdf

நன்கொடையாளர்களால் நிதிக்கு நன்கொடைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது.[76] 2021 ஐப்பசில், சண்டே டைம்ஸ் (Sunday Times) தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கை, இந்த நிதியில் 1.6 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் பயன்படுத்தப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியது. அதனடிப்படையில், 21 புரட்டாதி 2021 வரை 189 மில்லியன் ரூபாவுக்கும் சிறிதளவு அதிகமான தொகையே பயன்படுத்தப்பட்டுள்ளது. பி.சி.ஆர் (PCR) பரிசோதனைக்காக 42.6 மில்லியன் ரூபாவும், “ஆதரித்து வாதிடும் திட்டத்திற்காக” 67.5 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டது என RTI கோரிக்கை மேலும் வெளிப்படுத்தியது.

ஆதரித்து வாதிடும் திட்டம் “முற்றுமுழுதாக சுகாதார அமைச்சினால் செயல்படுத்தப்பட்டதால்” அத் திட்டம் பற்றிய தகவல்களை சனாதிபதி அலுவலகம் கொண்டிருக்கவில்லை எனக் கூறப்படுகிறது. மக்களை தனிமைப்படுத்தும் மையங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக வழங்கப்படும் போக்குவரத்து வசதிகளுக்கான செலவினமாக கூடுதலாக ரூ.38 மில்லியன் பட்டியலிடப்பட்டுள்ளது.[77]

**தடுப்பூசி கொள்முதல் தொடர்பான முறைகேடுகள்**

நாடு அதன் தடுப்பூசி பிரச்சாரத்தை தொடர்ந்து முன்னெடுத்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் தடுப்பூசி கொள்முதல் தொடர்பான தாமதங்கள், தவறான முகாமைத்துவம் மற்றும் பிற முறைகேடுகள் காணப்படுவது கரிசணைகளைத் தோற்றுவிக்கின்றது. தேவையான எந்த வழிகளிலும் அவசர கொள்முதலினை மேற்கொள்வதற்கு கொள்முதல் வழிகாட்டிக்குறிப்புகள் அரசாங்கத்திற்கு அசாதாரண அதிகாரங்களை வழங்குகின்றன.

9 சித்திரை 2020 அன்று வெளியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள கொவிட்-19 தொடர்பான கொள்முதல் தற்போதுள்ள வழிகாட்டிக்குறிப்புகள் அமைச்சரவையினால் நேரடியாக ஒப்புதல் அளிக்கப்படக்கூடிய 25 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கொள்முதல்களுக்கு “மிகவும் அவசரமான மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளில்”

[76] ‘இருகம’ நிதிக்கு லங்கா ஹாஸ்பிடல்ஸ் (Lanka Hospitals) PLC 10 மில்லியன் ரூபா நன்கொடை அளிக்கிறது. 23 புரட்டாதி 2021. Daily News. https://www.dailynews.lk/2021/09/23/local/260073/lanka-hospitals-plc-donates-rs10-million-%E2%80%98itukama%E2%80%99-fund

[77] சந்துன் ஜெயவர்தன, ‘அதிக பகிரங்கப்படுத்தப்பட்ட கோவிட்-19 நிதி: 1.6 பில்லியனுக்கும் அதிகமான நிதி இன்னும் பயன்படுத்தப்படவில்லை’, 24 ஐப்பசி 2021 The Sunday Times. https://www.sundaytimes.lk/211024/news/highly-publicised-covid-19-fund-more-than-1-6bn-still-not-used-459654.html

அமைச்சரவை ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளில் இருந்து விலகுவதற்கு அதிகாரம் அளிக்கின்றன.[78]

அதற்கமைய, 25 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கொள்முதல்களை விரைவுபடுத்த அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழுவின் (SCAPC) மீது அல்லது "பொருத்தமான" குழுவொன்றின் மீது தங்கியிருக்க முடியும்.[79]

கொள்முதல் செயல்முறை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையிடமிருந்து (NMRA) அனுமதி பெறப்படவேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது. ஒரு தடுப்பூயினை முன் அனுப்பானை செய்வதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் ஒப்புதல் தேவையில்லை என்றாலும் அத் தடுப்பூசியினை இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் ஒப்புதல் பெறப்படல் அவசியம்.[80]

அரசாங்கத்தால் ஆரம்பத்தில் சரியான நேரத்தில் தடுப்பூசிகளுக்கான முன் அனுப்பானைகளை மேற்கொள்ளவோ தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்யவோ இயலவில்லை. முன் அனுப்பானையினை மேற்கொள்வதற்கான ஒப்புதலினை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையிடமிருந்து பெறுவதற்காக அரசாங்கம் காத்திருந்த காரணத்தினால் இந்தியாவின் சேரம் (Serum) நிறுவனத்திடமிருந்து "கோவிஷீல்ட்" தடுப்பூசிகளின் முற்கூட்டிய தொகுதியொன்றிற்கான முன் அனுப்பானை மேற்கொள்ளப்படவில்லை.

கொள்முதல் செயல்முறையானது நடபடிமுறைச் சிக்கல்களினாலும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தவறான முகாமைத்துவத்தினாலும் பாதிக்கப்பட்டதுடன் மேலதிக தாமதத்திற்கு வழிவகுத்தது. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை மீதான முறையற்ற மேலாதிக்கமும் முறைகேடுகளுக்கும் வழிவகுத்தது. தீ விபத்தொன்றின் காரணமாகவும் பங்குனி 2021 தொடக்கத்தில் இந்தியாவில் ஏற்பட்ட திடீர் வைரஸ் தோற்றம் மற்றும் பரவல் தொடர்பான பிரச்சினைகள் காரணமாகவும் சேரம் நிறுவனம் உற்பத்தி

[78] 'சேரம் நிறுவனத்தின் உள்ளூர் முகவரினை ஒதுக்கித் தள்ளியமை இலங்கையில் தடுப்பூசி போடுவதில் தாமதத்தை ஏற்படுத்தியதா?', 22 ஆனி 2021. EconomyNext. https://economynext.com/did-pushing-aside-serum-institutes-local-agent-cause-a-vaccination-delay-in-sri-lanka-83204/
09 சித்திரை 2020 தேதியிடப்பட்ட "கொவிட் 19 தொடர்பான அவசரகால கொள்முதல்களை விரைவாகக் கையாளுவதற்கு வசதியாக, 2006ஆம் ஆண்டுக்கான கொள்முதல் (பொருட்கள் மற்றும் பணிகள்) கையேட்டிற்கு வழங்கப்பட்ட இணைப்பு 35இன் கீழ் ஏற்பாடுகளை மேலும் தளர்த்துகின்ற சுற்றறிக்கை.- PFD/PMD/149/000/2020-02இனையும் பாரக்கவும். https://theleader.lk/images/Vaccine_2.pdf

[79] 'சேரம் நிறுவனத்தின் உள்ளூர் முகவரினை ஒதுக்கித் தள்ளியமை இலங்கையில் தடுப்பூசி போடுவதில் தாமதத்தை ஏற்படுத்தியதா?', 22 ஆனி 2021. EconomyNext. https://economynext.com/did-pushing-aside-serum-institutes-local-agent-cause-a-vaccination-delay-in-sri-lanka-83204/

[80] கலாநிதி கெஹான் குணதிலக்க, 'இலங்கையின் தடுப்பூசி அவலநிலை குறித்து ஜனாதிபதி விசாரணை நடத்த வேண்டும்', 20 ஆவணி 2021. DailyFT. https://www.ft.lk/opinion/President-must-probe-into-Sri-Lanka-s-vaccine-tragedy/14-721939

பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க தொடங்கியதன் காரணமாக கொவிஷீல்டு கொள்முதல் இடைநிறுத்தப்பட்டது.

முன் அனுப்பானை மேற்கொள்ள தான் தான் தவறியமை தொடர்பான மக்களுடைய அவதானத்தினை திசைதிருப்ப இச் சூழ்நிலைகள் அரசாங்கத்திற்கு ஒரு வசதியான சாக்குப்போக்கை வழங்கின. இதன் விளைவாக, 500,000இற்கும் மேற்பட்ட மக்கள் இரண்டாவது அஸ்ட்ராசெனகா (AstraZeneca) தடுப்பூசியினைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது.[81]

மேலதிகமாக, தடுப்பூசிகளின் பல்வேறு வகையான விலைகள் தொடர்பாக வெளிப்படைத்தன்மை இல்லாதது விமர்சனங்களை எழுப்பியது.[82] உதாரணமாக, சீன உற்பத்தியாளர் சினோவாக் தடுப்பூசியின் விலையை வெளியிடுவதில் இருந்து இலங்கை உள்ளூர் முகவரை தடை செய்ததாக கூறப்படுகிறது. பொது நிதியைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் கொள்முதல் செய்யப்பட்ட தடுப்பூசியின் விலையை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த விரும்பாதது தொடர்பில் கரிசணைகள் எழுப்பப்பட்டதுடன், இவ்வாறு விலையினை மறைப்பது அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தகவல் உரிமையை மீறுவதாக அமையும் விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.[83]

இதற்கு விடையிறுக்கும் வகையில், இலங்கையில் உள்ள சீனத் தூதரகம், மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கான கொள்முதல் செயல்முறையில் வெளிப்படுத்தலற்ற உடன்படிக்கைகள் (NDAs) பொதுவான அம்சம் என்றும், சினோபார்ம், சினோவாக், ∴பைசர் மற்றும் மொடேர்னா ஆகியவையும் கொள்முதலாளர்களுடனான தங்களுடைய வணிகத்தில் வெளிப்படுத்தலற்ற உடன்படிக்கைகளையும் அபராதங்களைளையும் விதிக்கின்றன என்றும் கூறி சினோவாக் தடுப்பூசி உற்பத்தியாளருக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கையின் கடுமைத்தன்மையை நியாயப்படுத்தியது.[84]

வழிகாட்டிக்குறிப்புகள், செயலணிகள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகள் பற்றி பொதுத்தளங்களில் கிடைக்கும் தகவல்கள் போதுமானதாக இல்லை, மற்றும் பொது நிதி மற்றும் கொள்முதல் செயல்முறை தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை பற்றிய இவற்றுடன் தொடர்புடையதான கரிசணைகளையம் அதிகரிக்கச் செய்கின்றது. ஒக்ஸ்போர்டு அஸ்ட்ராஜெனிகா மற்றும் ஏனைய தொடர்புடைய தடுப்பூசிகளின கொள்முதல், தடுப்பூசியினை வழங்குவதற்காக முன்னுரிமை பெறுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான

[81] மேற்குறிப்பிட்டது
[82] மேற்குறிப்பிட்டது
[83] மேற்குறிப்பிட்டது
[84] 'சீன தூதரகம் சினோவாக் தடுப்பூசி விலையை வெளிப்படுத்தாத இலங்கையுடனான ஒப்பந்தத்தை அதரித்து வாதாடுகிறது', 28 ஆனி 2021. NewsWire. https://www.newswire.lk/2021/06/28/chinese-embassy-defends-sinovac-vaccine-price-non-disclosure-agreement-with-sri-lanka/

வரன்முறைகள் உட்பட பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கான திட்டம் மற்றும் தொடர்புடைய தடுப்பூசிகளுக்கான மருத்தவ ஒப்புதல் தொடர்பான தகவல்கள் போன்ற பல்வேறு தகவல் அறியும் உரிமை கோரிக்கைகளை டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் இலங்கை (TISL) நிறுவனம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் முன்வைத்திருந்ததுடன், இவ் விடயங்கள் தொடர்பிலான தகவல்களை பூரணமாகவும், துல்லியமானவும் மற்றும் காலப்பொருத்தத்துடனும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரியது.[85]

**தடுப்பூசி வழங்கல் தொடர்பான முறைகேடுகள்**

இலங்கையில் தடுப்பூசி வழங்கல் 29 தை 2021 அன்று தொடங்கியது. இடர் முன்னுரிமைக்கான வரன்முறைகள் மற்றும் நாடளாவிய ரீதியிலான தடுப்பூசி வழங்கல் தொடர்பான தகவல்கள் இல்லாமை தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே கரிசணைகள் எழுப்பப்பட்டன.[86]

திட்டமிடலில் காணப்பட்ட போதாமைகள், முன்னுரிமைப்படுத்தல், மற்றும் தடுப்பூசி பிரச்சாரத்திலான இடர் பற்றிய தகவல் தொடர்பு போன்ற பல பிரச்சினைகளும் தெளிவாகத் தெரிந்தன. பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு போதுமான பொது பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படாமை தடுப்பூசி தொடர்பில் அச்சம் மற்றும் நிச்சயமற்ற தன்மை ஏற்படுவதற்கு வழிவகுத்தது.[87]

தடுப்பூசி வழங்கல் செயல்முறையின் போது அரசியல் தலையீடு மற்றும் முறையற்ற மேலாதிக்கம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.[88] தடுப்பூசி வழங்கலில் இராணுவத்தின் பங்கேற்பு, பரந்த போக்கிலான இராணுவமயமாக்கலின் மற்றொரு அம்சம் என்கின்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டது. இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் தடுப்பூசி பிரச்சாரம் வெற்றிகரமானது எனக் கருதப்பட்டாலும்[89], தடுப்பூசி வீணடிப்பு மற்றும் இடர்

---

[85] "கொவிட்-19 தடுப்பூசி வழங்குதல் குறித்த இரண்டு முக்கிய சிக்கல்களை TISL எடுத்துக்காட்டுகிறது", 2 மாசி 2021. ட்ரான்ஸ்பேரெண்சி இன்டர்நேஷனல் இலங்கை. https://www.tisrilanka.org/tisl-highlights-two-key-issues-on-covid-19-vaccine-rollout/

[86] மேலதிக விபரங்களுக்கு, 'இலங்கையில் கோவிட்-19 தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்டக் கட்டமைப்பின் புதுப்பிப்பு' என்பதைப் பார்க்கவும். 12 வைகாசி 2021. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/

[87] பிரதீப் பீரிஸினுடைய *நோயை விட பிணிநீக்கம் மோசமானதா? இலங்கையில் கொவிட் மேலாண்மை பற்றிய பிரதிபலிப்புகள்* இல் பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க, "பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையினுடைய விரைவுபடுத்தப்பட்ட சனநாயகச் சிதைவு" (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2021). https://www.cpalanka.org/wp-content/uploads/2021/08/06-Chapter-2.pdf

[88] இமேஷ் ரணசிங்க, 'தடுப்பூசி குழறுபடி: அரசியல் செல்வாக்கிற்கு அடிபணிய வேண்டாம் என அரசாங்கம் அதிகாரிகளுக்கு தெரிவிக்கிறது', 9 பங்குனி 2021. EconomyNext. https://economynext.com/the-vaccination-mess-government-tells-officials-dont-give-in-to-political-influence-79633/#modal-one

[89] 'தடுப்பூசி: வெற்றி உறுதி', 12 புரட்டாதி 2021, Sunday Observer. https://www.sundayobserver.lk/2021/09/12/vaccination-success-assured

முன்னுரிமை மீறல் ஆகியவை தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான கரிசணைகளில் சிலவாகும்.[90] ஆதலால், இச் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும்தன்மை என்பவற்றை உறுதி செய்ய, பொதுமக்களுக்கு, தலைமைத்துவம், வினைத்திறனாக முடிவெடுக்கும் தன்மை, ஒழுங்கமைப்பு மற்றும் தடுப்பூசி வழங்கல் தொடர்பான முடிவெடுத்தலில் பொறுப்புடைமை ஒழுங்கு ஆகியவை தொடர்பான தகவல்களை வினைத்திறனான முறையில் வழங்குவது அவசியம்.

[90] 'கோவிட் தடுப்பூசி திட்டத்தில் உள்ள முறைகேடுகளை GMOA சுட்டிக்காட்டுகிறது, விசாரணையை கோருகிறது', 12 ஆனி 2021. NewsWire. https://www.newswire.lk/2021/06/12/gmoa-points-out-irregularities-in-covid-vaccination-program-demands-inquiry/; அருந்ததி சங்கக்கார, 'இலங்கையின் தடுப்பூசி திருடர்கள்', 20 வைகாசி 2021. Colombo Telegraph. https://www.colombotelegraph.com/index.php/vaccine-thieves-of-sri-lanka/

**பின்னிணைப்பு 1**

## சுருக்க வழிகாட்டி 1

## கொவிட் 19 சூழலில் பரிணமிக்கும் சட்டச் சிக்கல்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
28 பங்குனி 2020

இலங்கையில் கொவிட்-19 சூழலில் எழுந்துள்ள பல்வேறு சட்ட சிக்கல்களை முன்வைக்கவும், அவற்றின் விளைவுகளை முன்னிலைப்படுத்தவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) இந்த சுருக்க வழிகாட்டியை தயாரித்துள்ளது. கொவிட் பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக சமீபத்திய வாரங்களில் இலங்கை விரைவான நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகள், பங்குனி 2 ஆம் தேதி சனாதிபதி கோதாபய ராஜபக்ஷவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னணியில் எடுக்கப்பட்டுள்ளன.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் முன்னணியில் இருப்பவர்கள் செய்த சேவையினை CPA நன்றியோடு ஏற்றுக்கொண்டாலும், தற்போதைய சுகாதார அவசரநிலையினைக் கையாளவதில் அதிகரித்து வரும் ஆட்சி மற்றும் உரிமைகள் பிரச்சினைகள் குறித்து அதிகரித்தளவிலான கரிசணைகள் எழுப்பப்படுகின்றன. கொவிட்-19 பெருந்தொற்றினை வினைத்திறனாகவும், சட்டபூர்வமாகவும் மற்றும் அரசியலமைப்பு ரிதியாகவும் கையாளுவதற்கு அரசாங்கத்திற்கு இயலுமானதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்த அதிகாரிகளுடன் ஆக்கப்பூர்வமாக ஈடுபடுதலினை இந்த சுருக்க வழிகாட்டி நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையில் சட்ட ஆட்சியை நிலைநிறுத்துவதனதும் அரசியலமைப்பு ஆட்சியினைப் பின்பற்றுவதனதும் முக்கியத்துவத்தை CPA அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**நிறைவேற்றுச் சுருக்கம்**

முதலாவதாக, பாராளுமன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து கவனம் செலுத்தப்படுகிறது. கொவிட்-19 தொடர்பில் சுகாதார அவசரநிலையொன்று அறியப்படாத சூழ்நிலையில், 2 பங்குனி 2020 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. எவ்வாறெனினும், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், தேர்தல்களை ஒத்திவைக்க அழைப்புவிடுக்கப்பட்டபோதும் அதனால் எந்தப் பயனும் எட்டப்படவில்லை. பாராளுமன்றத்தைக் கலைத்து அறிவித்த வர்த்தமானியை மீளப்பெறுவதிலிருந்து ஜனாதிபதியினைத் தடுக்கின்ற ஏற்பாடுகள் அரசியலமைப்பிலோ அல்லது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலோ இல்லை என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டும்.[91]

[91] 'தடுப்பூசியைப் பற்றி பேசுவோம்: உத்தி, தெளிவு மற்றும் சமத்துவத்தின் தேவை', 2021. சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) https://lstlanka.org/images/pdf/2021/Lets_talk_about_the_vaccine_English.pdf

19 பங்குனி அன்று, வேட்புமனு தாக்கல் செய்வதற்கான காலம் முடிவடைந்திருந்த நிலையில், தேர்தல்கள் திணைக்களம் தேர்தலை ஒத்திவைக்க முடிவு செய்தது. அத்தகைய சூழலில், தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்ற நிச்சயமற்ற தன்மையுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. மேலும், 14 வைகாசி 2020 அன்று "புதிய பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு" பங்குனி 2ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அழைப்பு விடுத்திருந்த போதிலும், குறிப்பிட்ட திகதியில் கூடுவதற்கு அத்தகைய பாராளுமன்றம் ஒன்று இருக்காது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சிக்கல்களையும் மற்றும் அதனுடைய விளைவுகள் பற்றியும் வழிகாட்டி ஆராய்கிறது. தேர்தலை ஒத்திப்போடுவது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திற்கு வேறு தீர்வுகள் காணப்படாத போதும், அது குடிமக்களின் அடிப்படை உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2 பங்குனி 2020 தேதியிடப்பட்ட வர்த்தமானியை சனாதிபதி மீளப்பெற்றிருந்தால், 2020 ஆவணி இறுதிப்பகுதி வரை பாராளுமன்றம் தொடர்ந்து செயற்பட்டிருக்க முடியும் என்பதனை CPA குறிப்பிடுகிறது.

செயல்பாட்டில் உள்ள பாராளுமன்றம் ஒன்று இல்லாத நிலையினால் தோற்றுவிக்கப்படக்கூடிய பலவேறுபட்ட பின்விளைவுகள் பற்றி CPA இங்கே கலந்துரையாடுகிறது. உறுப்புரை 148 இன் பிரகாரம், பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாடு, பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். இது பல உயர் நீதிமன்ற தீர்மானங்களால் மீண்டும் வலியுறுத்தப்பட்ட நிலைப்பாடாகும். செயற்பாட்டில் உள்ள பாராளுமன்றம் ஒன்று இல்லாத நிலையில், அத்தியாவசியமான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான சனாதிபதியின் திறன் தொடர்பான அரசியலமைப்பு மட்டுப்பாடுகள் மீதான மேற்பார்வையின்மை உட்பட்ட கடுமையான பின்விளைவுகள் எழுகின்றன.

இது அரசியலமைப்பின் கடிதம் மற்றும் உணர்வுக்கு எதிராக, நிறைவேற்றுத்துறைக்கு, சோதனைகளும் சமனிலைகளுமின்றி பொது நிதி மீது மட்டுப்பாடற்ற கட்டுப்பாட்டை வழங்கலாம், மேலும் காசோலைகள் மற்றும் சமநிலைகள் இல்லாமல் இருக்கலாம். அவசரகால நிலைமைக்கான பிரதிபலிப்பில் அரசியலமைப்பு மற்றும் வினைத்திறன் இரண்டையும் உறுதிப்படுத்துவதற்காக, தேவையான ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றம் வரவழைக்கப்படுவது முக்கியமானதாகும்.

இலங்கை பல தசாப்தகால அனுபவங்களைக் கொண்டிருந்தாலும், பல அனர்த்தங்களை சமாளித்தபோதிலும், கோவிட்-19 புதிய கட்டமைப்புகளின் தேவையுடன் முன்னோடியில்லாத சவாலை முன்வைக்கிறது. ஒரு செயல்படும் பாராளுமன்றம் இல்லாத நிலையில், இது எவ்வாறு செய்யப்படும் என்பது குறித்தும் கவலை எழுப்பப்படுகிறது. மேலும், பாராளுமன்றத்தை அழைக்காமை, தற்போதைய அவசரநிலையைக் கையாளுவதற்கு

அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய பல தற்போதைய பொறிமுறைகளைப் பயன்படுத்துவதிலிருந்தும் அரசாங்கத்தினைத் தடுக்கிறது.

அவசரகாலச் சூழ்நிலைகளில் ஒரு நிறுவனமாக நாடாளுமன்றம் முக்கிய பங்கு வகிக்கிறது. அவசரகால நிலைமைகளுக்கு திறம்பட பதிலளிக்கும் வகையில் அரசாங்கத்தின் பல்வேறு ஆயுதங்கள் செயல்படுவதும், அரசியலமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கும் வகையில் அவ்வாறு செய்வதும் மிக முக்கியமானதாகும்.

வழிகாட்டியில் விரிவாக விவாதிக்கப்படும் இந்த விடயங்கள், அவசரகால நிலைமைக்கு இலங்கையின் பிரதிபலிப்பு பயனுள்ளதாகவும், அளவிடப்பட்டதாகவும், அரசியலமைப்பு கட்டமைப்பை பின்பற்றுவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசர கவனம் தேவைப்படுகிறது. இந்த விஷயத்தில் செயலற்ற தன்மை மற்றும் / அல்லது விருப்பமின்மை கடுமையான மற்றும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும்.

**பின்னணி**

பாராளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானி அறிவித்தலை 2 பங்குனி 2020 அன்று ஜனாதிபதி கோத்தபயா ராஜபக்ஷ வெளியிட்டார்.[92] இந்த அறிவித்தலின் அடிப்படையில்:

1) 2 பங்குனி 2020ஆம் திகதி நள்ளிரவு முதல் பாராளுமன்றம் கலைக்கப்படும்.
2) 25 சித்திரை 2020ஆம் தேதியன்று நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும்.
3) பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 12 பங்குனி 2020ஆம் திகதி தொடக்கம் 19 பங்குனி 2020ஆம் திகதி நண்பகல் 12 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
4) புதிய பாராளுமன்றம் 14 வைகாசி 2020 அன்று அமர்வுகளைத் தொடங்கும்.

2015 ஆவணியில் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றம் தன்னுடைய ஐந்தாண்டு பதவிக்காலத்தின் நான்கரை ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் சந்தர்ப்பத்தில், கிடைக்கக்கூடிய முதல் வாய்ப்பில் பாராளுமன்றத்தினைக் கலைப்பேன் என்கின்ற நிலைப்பாட்டிலேயே சனாதிபதி மார்கழி 2020 முதல் இருந்துவந்தார். அவர் பாராளுமன்றத்தைக் கலைத்த நேரத்தில், சீனாவிலும் ஐரோப்பாவிலும் அதிகரித்துவந்த போதிலும், ஏனைய கிழக்கு ஆசிய நாடுகளில் அதிக எண்ணிக்கையிலான இருந்த போதிலும், இலங்கையினுள் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளானவர்கள் காணப்படவில்லை.

இலங்கைப் பிரசையின் முதலாவது உறுதிப்படுத்தப்பட்ட தொற்று 11 பங்குனி 2020 அன்று அறிவிக்கப்பட்டதுடன், 18 பங்குனி 2020ஆம் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட மொத்த

[92] 2 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2165/8ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் http://documents.gov.lk/files/egz/2020/3/2165-08_T.pdf

தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்தது.[93] நோய் அச்சுறுத்தல் தணியும் வரை பாராளுமன்றத் தேர்தல்களை சில மாதங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்கின்ற அழைப்புபினை இக் காலகட்டத்தில் சில அரசியல் கட்சிகளும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் முன்வைக்கப்பட்டன.[94]

மேலும், கொவிட்-19 பரவலைத் தடுக்கின்ற நோக்கில் அரசாங்கம் முன்னெடுத்த வேறு பல நடவடிக்கைகளை அறிவித்தநிலையில், 16 பங்குனி 2020 தினம் பொது விடுமுறையாகவும் 17 தொடக்கம் 19 பங்குனி வரையான காலப்பகுதி "சிறப்பு விடுமுறைகளாகவும்" அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது.[95] தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்கள் பொது சுகாதார அதிகாரிகளை சந்தித்து பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான "முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்" குறித்து கலந்துரையாடினர்.[96]

2020 மார்ச் 19 ஆம் திகதி வேட்புமனுக்கள் தாக்கல் செயவதற்கான காலம் 19 பங்குனி அன்று முடிவடைந்ததும், பாராளுமன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு ஊடகங்களுக்குத் தெரிவித்தது.

**<u>இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான தற்போதைய நிலைப்பாடு.</u>**

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 24(1) இன் அடிப்படையில், 22 தேர்தல் மாவட்டங்களிலும் தேர்தல்கள் வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாக இருக்கும் என உத்தியோகபூர்வமாக அறிவித்து தேர்தல் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.[97]

எவ்வாறாயினும், 21 பங்குனி 2020 தேதியிடப்பட்ட மேலதிக வர்த்தமானி அறிவித்தலினூமாக இலங்கையில் நிலவுகின்ற கொவிட்-19 பரவலின் காரணமாக 22 தேர்தல் மாவட்டங்களிலும் 25 சித்திலை 2020 அன்று வாக்கெடுப்பு நடத்த முடியாது என்று பொதுமக்களுக்கு ஆணைக்குழு

---

[93] சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட்-19) - சூழ்நிலை அறிக்கை - 19.03.2020, இங்கே பார்வையிடலாம்: http://www.epid.gov.lk/web/images/pdf/corona_virus_report/sitrep-sl-en-19-03_10.pdf

[94] NewsWire.lk, "பொது மக்களின் பாதுகாப்பு அதிக அக்கறைக்குரிய விடயம், தேர்தலை ஒத்திவைக்கவும் – த.தே.கூ.", https://www.newswire.lk/2020/03/16/safety-of-public-of-paramount-concern-postpone-election-tna/; தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம், "பொதுத் தேர்தல் 2020இனை பிற்போட CMEV அழைப்பு விடுக்கிறது", https://cmev.org/wp-content/uploads/2020/03/press-release-postponement-of-election-tamil.pdf

[95] சனாதிபதியின் ஊடகப் பிரிவு, "கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்த கூடுதல் முடிவு", https://www.pmdnews.lk/more-decision-to-contain-covid-19-outbreak/

[96] மஞ்சுள பெர்னாண்டோ, "தே.ஆ., சுகாதார அமைச்சு தாயார்நிலை நவடிக்கைகள் குறித்து நாளை முடிவு செய்யும்", The Sunday Observer. இங்கே பார்வையிடலாம் http://www.sundayobserver.lk/2020/03/15/news/ec-health-ministry-decide-contingency-measures-tomorrow

[97] 20 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2167/12ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் http://documents.gov.lk/files/egz/2020/3/2167-12_T.pdf

அறிவித்தது.[98] 14 வைகாசி 2020இற்குப் பின்னைய தேதியொன்றினை வாக்கெடுப்புக்கான தேதியாக ஆணைக்குழு நிர்ணயிக்கும் என்றும், "குறித்த திகதி உரிய நேரத்தில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்படும்" என்றும் அந்த அறிவிப்பு மேலும் குறிப்பிட்டது.[99]

அதன்பிரகாரம், பாராளுமன்றம் தொடர்ந்து கலைக்கப்பட்டிருந்ததுடன், பாராளுமன்றத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது பற்றி தற்போது சரியான தேதியும் குறித்தறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

வேட்புமனு காலம் முடிவுற்றிருந்த போதிலும், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1) (ஆ) இன் பிரகாரம் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தலும் அந்தந்த அரசியல் கட்சிகளினாலும் சுயாதீனக் குழுக்களினாலும் நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

மேலும், சனாதிபதி தனது பிரகடனத்தில் புதிய பாராளுமன்றத்தை 14 வைகாசி 2020 அன்று கூடுமாறு அழைத்திருப்பினும், குறித்த திகதியில் கூடுவதற்கு பாராளுமன்றம் ஒன்று இருக்காது.

**பாராளுமன்றத் தேர்தல்களைப் பிற்போடுதவனால் ஏற்படக்கூடிய சட்டப் பின்விளைவுகள்**

பாராளுமன்றத்தின் முதல் அமர்வு இடம்பெற்ற திகதியிலிருந்து நான்கரை ஆண்டுகள் கடந்த பின்னர் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம், அரசியலமைப்பின் 70(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதிக்கு உள்ளது. முன்னர் குறிப்பிட்டது போல, 2 பங்குனி 2020 தேதியிடப்பட்ட பாராளுமன்றத்தைக் கலைத்து அறிவித்த வர்த்தமானியை வெளியிடுவதற்கு இவ் ஏற்பாடுதான் சனாதிபதியால் பயன்படுத்தப்பட்டது. சனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்காவிடின், அரசியலமைப்பின் அடிப்படையில், பாராளுமன்றம் 1 புரட்டாதி 2020 வரை தொடர்ந்திருக்கும்.[100]

22 தேர்தல் மாவட்டங்களிலும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கு, தேர்தல்கள் திணைக்களம், பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 24(3) இன் பிரகாரம், அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியது.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில், பிரிவு 24(1)இற்கமைய தேர்தல் ஒரு வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் என்று ஒரு பிரகடனத்தை வெளியிட்ட பின்னரே இந்த அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக்குழு பயன்படுத்த முடியும்.[101]

---

[98] 21 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2167/19ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் http://documents.gov.lk/files/egz/2020/3/2167-19_T.pdf

[99] மேற்குறிப்பிட்டது, பந்தி (ii)

[100] அரசியலமைப்பின் உறுப்புரை 62(2)

[101] அதனை 20 பங்குனி 2020 அன்று அது செய்தது. மேலே உள்ள அடிக்குறிப்பு 6இனைப் பார்க்கவும்.

தேர்தலை ஒத்திவைத்து தேர்தல்கள் திணைக்களம் உத்தரவு பிறப்பிக்கும் கணம் வரை, 2 பங்குனி 2020 தேதியிடப்பட்ட வர்த்தமானியை திரும்பப் பெறுவதில் இருந்து சனாதிபதியினைத் தடுக்கின்ற ஏற்பாடுகள் அரசியலமைப்பிலோ அல்லது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலோ காணப்படவில்லை.

நியாயமான முறையில் செயற்படவேண்டிய கடப்பாடு சனாதிபதிக்கு உண்டு. அத்தகைய வர்த்தமானியை எதேச்சையதிகாரமான முறையில் மீளப்பெறும் அதிகாரம் சனாதிபதிக்கு இல்லை.[102]

எவ்வாறெனினும், நிலவி வருகின்ற சூழ்நிலைகளின் அடிப்படையில், வர்த்தமானியை மீளப்பெறுகின்ற செயற்பாடு முற்றுமுழுதாக நியாயப்படுத்தப்பட்டிருக்கும். மேலும் எதேச்சையதிகாரத்துடன் செயற்படல் என்கின்ற குற்றச்சாட்டு எதுவும் எழுப்பப்பட்டிருக்க வாய்ப்பில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை திரும்பப் பெறுவதே மீளப்பெறப்பட்டதன் விளைவாக இருந்திருக்கும்.

கொவிட்-19 பெருந்தொற்றின் போது தேர்தல்களை நடத்துவது பேரழிவு மிக்க பின்விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என்ற காரணத்தினடிப்படையில் பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தினை வரவேற்கிறோம்.

எனினும், பாராளுமன்றத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்தமை கீழே கலந்துரையாடப்பட்டுள்ள பல பின்விளைவுகளை எழுப்பியுள்ளது:

1. தேர்தல் பிரச்சாரம்

தேர்தலை ஒத்திவைக்கும் தேர்தல் ஆணையத்தின் முடிவு, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் அடிப்படையில் தடை செய்யப்படாத நடவடிக்கைகள் மூலம் பிரச்சாரத்தில் ஈடுபடுவதில் நேரடியாகப் பாதிப்பினை ஏற்படுத்தாது. இது வேட்பாளர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்யும் சூழ்நிலைக்கு வழிவகுத்திருக்கலாம், அதன் காரணமாக அவர்கள் கொவிட்-19 பரவுவதற்கான காவிகளாக செயற்பட்டு பொதுமக்களை பாரிய ஆபத்திற்கு உள்ளாக்கியிருக்கலாம்.

வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் ஆணைக்குழுவினால் குறித்தளிக்கப்பட்ட அவர்களின் தொடர் இலக்கங்கள் ஆகியவற்றைக் குறித்துரைக்கின்ற வர்த்தமானியை வெளியிடாமல் தவிர்த்ததன் மூலம் இந்த இடர்ப்பாடினை தணிப்பதற்கு ஆணைக்குழு செயற்பட்டது. ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற உத்தியோகபூர்வ தொடர் இலக்கம் இல்லாத

[102] ராஜவரோதயம் சம்பந்தன் மற்றும் ஏனையோர் எதிர் சட்டமா அதிபர் மற்றும் ஏனையோர், SC FR 351-356 / 2018, SC FR 358-361 / 2018இனைப் பார்க்கவும்.

நிலையில், ஒரு வேட்பாளர் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட முடியும்.

மேலும், “ஊரடங்கு உத்தரவு“ பிரகடனம் இல்லாத சந்தர்ப்பத்தில் கூட, கொவிட்-19 பரவலை அதிகரிக்கக் கூடிய பொது பிரச்சாரங்களையும் தேர்தல் கூட்டங்களையும் தடுப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பல ஏற்பாடுகளை பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் சட்டம் குற்றவியல் நடபடிமுறைக் கோவை இரண்டும் கொண்டுள்ளன.[103]

2. பாராளுமன்றம் கலைப்பு

தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் தேர்தல்கள் திணைக்களத்திற்கு மட்டுமே உள்ளது. இந்தக் கட்டளை பாராளுமன்றத்தைக் கலைத்து சனாதிபதியினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தை இல்லாதாக்காது. அதனடிப்படையில், தற்போது தேர்தல்களுக்கான அல்லது புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கான திகதி தெளிவாக வரையறுக்கப்படாத நிலையில், பாராளுமன்றமானது அரசியலமைப்பின் 70 வது பிரிவின் அடிப்படையில் கலைக்கப்பட்டுள்ளது. இது பல சட்டச் சவால்களை எழுப்புகிறது.

**அ) மக்களின் இறைமை**

அரசியலமைப்பின் மூன்றாவது உறுப்புரையின்படி, மக்களின் இறையாண்மை என்பது அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமையை உள்ளடக்கியது. மக்களினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்டமைந்த பாராளுமன்றமே மக்களின் சட்டவாக்கல் தத்துவம் பிரயோகிக்கப்படுகின்ற முக்கிய கருவியாகும்.

உரிய தேதியில் தேர்தலை நடத்தத் தவறுவதும் அல்லது அத்தகைய தேர்தல்களை ஒத்திவைப்பதும் மக்களின் வாக்குரிமை மற்றும் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடு என் உயர் நீதிமன்றம் பல தீர்ப்புகளில் அங்கீகரித்துள்ளது.[104] தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் மட்டுப்படுத்தப்பட்ட மாற்றுத்தெரிவுகளையே கொண்டிருந்தபோதிலும், அது குடிமக்களின் அடிப்படை உரிமைகளினை மீறுவதற்கு வழிவகுத்தது. (தேர்தல்கள் திணைக்களம் தேர்தலை ஒத்திவைப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதற்குப் பதிலாக) பாராளுமன்றத்தை கலைத்தறிவித்த 2 பங்குனி 2020 தேதியிடப்பட்ட வர்த்தமானி சனாதிபதியால் மீழப்பெறப்பட்டிருந்தால்

---

[103] பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 77 – 81 மற்றும் குற்றவியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 106 ஆகியவற்றைப் பொதுவாகப் பார்க்கவும்.

[104] கருணாதிலக எதிர் திஸ்ஸநாயக்க (1999) 1 S.L.R. 157 பக்கங்கள். 173-174; மொஹமட் ஹுசைன் ஹாஜியார் முஹம்மது மற்றும் ஏனையோர் எதிர் இலங்கை தேர்தல்கள் திணைக்களம் மற்றும் ஏனையோர் SC FR 35/2016

பாராளுமன்றம் 2020 ஆவணி இறுதி வரை தொடர்ந்து செயற்பட்டிருக்குமாதலால், மக்களின் வாக்குரிமையினை இது மீறியிருக்காது.

அதே போல் மக்களின் இறைமைக்கு நல்வாழ்வு அடிப்படையாக இருக்கின்ற காரணத்தினால், செயற்படுகின்ற பாராளுமன்றம் ஒன்று இல்லாதிருப்பது ஆட்சியின் மீது பல்வேறுபட்ட பாராதூரமான பின்விளைவுகளை கொண்டுள்ளது.

**ஆ) பொது நிதி**

அரசியலமைப்பின் உறுப்புரை 148இன்படி[105], பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாட்டை பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசாங்க வருமானம் / உள்நாட்டு இறைவரி மற்றும் அரசாங்க செலவினம் உள்ளிட்ட இக் கட்டுப்பாடு தொடர்பிலான திட்டவட்டமான வரையறைகளை அரசியலமைப்பின் உறுப்புரைகள் 149 - 152 வழங்குகின்றன.

பொது நிதி தொடர்பான விடயங்களில் பாராளுமன்றம் முழுமையான கட்டுப்பாட்டை வைத்திருப்பதனை உறுப்புரை 148 கட்டாயமாக்குகின்றது என உயர் நீதிமன்றம் பல தீர்மானங்களில்[106] தீர்மானித்திருக்கின்றது. முழுமையான கட்டுப்பாட்டினை பிரயோகிப்பதற்கான பாராளுமன்றத்தின் கடப்பாடு என்றால் என்ன என்பதனை உயர் நீதிமன்றம் மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

அவையாவன:

(i) நிதி மூலங்களின் மீதான கட்டுப்பாடு, அதாவது, வரி விதிப்பு, தீர்வை, வீதம், மற்றும் இவற்றை ஒத்தவை மற்றும் குடியரசின் எந்தவொரு கடன்.

(ii) அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பொது நிதியினை ஒதுக்கீடு செய்வது மூலம் மற்றும் அத்தகைய செலவினங்கள் மீதான வரம்பெல்லையினை அமைத்தல் மூலமான கட்டுப்படுத்தல்; மற்றும்

(iii) மேலே உள்ள (i) மற்றும் (ii) இனுடைய செயல்திறன் தொடர்பிலான தக்க சரிபார்த்தல் பொறிமுறையினை தொடர்ச்சியான கணக்காய்வு மற்றும் பரிசீலனை மூலம் கட்டுப்படுத்துதல்.

முக்கியமாக, இக் கட்டுப்பாடு ஏன் முக்கியமானது என்பதற்கான காரண விளக்கத்தினை உயர் நீதிமன்றம் அதன் தீர்மானங்களில் மேலும் சொல்கிறது. முதலாவதாக,

---

[105] "பொது நிதியில் பாராளுமன்றம் முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். பாராளுமன்றத்தால் இயற்றப்படுகின்ற அல்லது தற்போதுள்ள சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர, எந்தவொரு உள்ளூராட்சி அதிகார சபைகளாளோ அல்லது வேறு எந்த பொது அதிகாரசபைகளாளோ வரி, விகிதம் அல்லது வேறு எந்த வரியும் விதிக்கப்படக்கூடாது."

[106] பார்க்க: உயர் நீதிமன்ற சிறப்புத் தீர்மானம் 3 & 4 / 2008 [ஒதுக்கீடு சட்டமூலம் தொடர்பில்]; உயர் நீதிமன்ற சிறப்புத் தீர்மானம் 28 & 29 / 2016 [நிதி மேலாண்மை (பொறுப்பு) (திருத்தம்) சட்டமூலம்]

பாராளுமன்றத்தின் முழுமையான கட்டுப்பாடு நிறைவேற்றுத் துறையினை பரிசீலிப்பது தொடர்பிலான பாராளுமன்றத்தின் செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். இரண்டாவதாக, பாராளுமன்றம் இவ் அதிகாரத்தினை அதன் சொந்த நலனுக்காகவன்றி மக்களுக்கான "நம்பிக்கையில்" அதிகாரத்தை பிரயோகிக்கின்றது. அதன் காரணமாக, பொது நிதியானது வெளிப்படைத்தன்மையுடனும் ஒளிவின்மையுடனும் கட்டுப்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கு உள்ளது.

அத்தகைய கட்டுப்பாட்டினை வெளிப்படையான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு, பாராளுமன்றம், ஒரு ஆழ்ந்தாராய்கின்ற சபையாக, மிகப் பொருத்தமானது என்பதனைக் குறித்துரைக்கவேண்டிய அவசியமில்லை. பாராளுமன்றத்தின் அலுவல்கள் பகிரங்கப்படுத்தப்படுவதோடு, அவை பொதுப் பதிவேடுகளிலும் இடம்பெறும். பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்ற சட்டமூலங்கள், பிரேரணைகள் மற்றும் தீர்மானங்கள் பகிரங்க ஆவணங்களாகும். ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தினுள் வினாக்கள் எழுப்பவும், கூற்றுரைகளை மேற்கொள்ளவும், விவாதத்தில் ஈடுபடுவதற்கும் பேச்சு சுதந்திரம் உள்ளது.

பொது நிதியை பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டு எல்லைக்கு வெளியே நகர்த்துதல் மற்றும் நிறைவேற்றுத் துறைக்கு மட்டுப்பாடற்ற அதிகாரத்தை வழங்குதல் என்பது வெறிப்படையாகவே அரசியலமைப்பிற்கு முரணானது மட்டுமல்லாமல், விவேகமற்றதும் பொது நலனிற்கு எதிரானதும் ஆகும்.

எவ்வாறிருப்பினும், இந்த விதிக்கு ஒரு[107] முக்கியமான விதிவிலக்கினை உறுப்பரை 150(3) கொண்டுள்ளது:

"அந்த நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலமானது சட்டமாக நிறைவேற்றப்பட முன்னர் சனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைக்கின்றவிடத்து, பாராளுமன்றம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய, புதிய பாராளுமன்றம் கூடுவதற்கென நிருணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கொண்ட ஒரு காலப்பகுதி முடிவடையும் வரை, பகிரங்க சேவைகளுக்கு அவசியமானவை என சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத்தொகைகளை திரட்டு நிதியத்திலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்."

[107] "சனாதிபதி பாராளுமன்றத்ததைக் கலைத்து, பொதுத் தேர்தலுக்கான தேதியை அல்லது தேதிகளை நிர்ணயிக்கின்றவிடத்து, **<u>அதற்கெனப் பாராளுமன்றம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய</u>**, தேர்தல்கள் ஆணையாளருடன் ஆலோசனையின் பின்னர், அத்தகைய தேர்தலுக்கு அவசியமானவையெனச் சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத்தொகைகளைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்" என்று தேர்தல் தொடர்பான செலவினங்கள் குறித்து கூறுகின்ற உறுப்புரை 150(4)இனையும் பார்க்கவும்.

இது மிகக் குறிப்பிடும்படியான ஒரு சூழ்நிலையுடன் தொடர்புடையது என்பதை இவ் ஏற்பாடு தொடர்பான பகுப்பாய்வு காட்டுகிறது.

(i) பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்குப் பிற்பட்ட காலப்பகுதிக்கான செலவினம் தொடர்பாக மற்றும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் ஆரம்பம் தொடர்பில் பாராளுமன்றம் எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை;

(ii) “பொது சேவைகளுக்கு அத்தியாவசியமானது” என்கின்ற அளவுக்கு மட்டும் சனாதிபதி ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடுகளைச் செய்ய முடியும்;

(iii) இந்த ஒதுக்கீட்டிற்கான கால அவகாசம் வரையறுக்கப்பட்டது மற்றும் காலவரையறையற்றதன்று,

ஆகிய சந்தர்ப்பங்களில் மட்டுமே இது ஏற்புடையதாகும்

கார்த்திகை 2019இல் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கம் புதிய பாதீடு ஒன்றினை சமர்ப்பிக்கவில்லை. அதற்குப் பதிலாக, 1 தை 2020இல் தொடங்குகின்றதும், 2020ஆம் நிதியாண்டுக்கான சேவைகளுக்காக ஏற்பாடு செய்கின்ற ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவடைகின்றதும் அல்லது 30 சித்திரை 2020ஆம் திகதியன்று முடிவடைகின்றதும் இவற்றுள் எத் திகதி முதலில் நிகழ்கின்றதோ அத்திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கான கணக்கு வாக்குப்பணத்தினை 23 ஐப்பசி 2019 அன்று பாராளுமன்றம் நிறைவேற்றியது.[108]

பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், சித்திரை 2020 காலப்பகுதியின் போது கணக்கு வாக்குப்பணத்தினூடாக பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடுகளுக்கான இறுதித் திகதியாக 30 சித்திரை 2020 இருக்கின்ற காரணத்தினால் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலமானது நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்பில்லை. அந்தவகையில் உறுப்புரை 150(3)இற்கு கீழான சனாதிபதியின் அதிகாரங்கள் 30 சித்திரை 2020இற்குப் பின்னர் மட்டுமே செயல்படுத்தப்படலாம்.[109]

ஜனாதிபதி அத்தகைய ஒதுக்கீடுகளைச் செய்வதற்கான கால அவகாசம் “புதிய பாராளுமன்றம் கூடுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாத காலப்பகுதி

---

[108] பார்க்க https://www.parliament.lk/files/documents_news/2019/vote-on-account/resolution.pdf

[109] இவ் ஏற்பாடுகளின் குறிப்பிட்ட தன்மையின் பின்னணியில், நிதி தொடர்பான சட்டமூலம் மற்றும்/அல்லது தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு அமைக்கப்பட்டுள்ள நடைமுறை கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கருதுகின்ற உயர் நீதி மன்ற சிறப்பு தீர்மானம் 30, 31, 32 மற்றும் 33 / 2016 [பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டமூலம்]. அரசியலமைப்பு ஏற்பாடுகள் மீறப்படாமல் இருப்பதையும், அரசியலமைப்பின் மூலம் அரசாங்கத்தின் ஒவ்வொரு துறைக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்வது இந்த நீதிமன்றத்தின் முக்கிய கடமையாகும்...” என்ற அடிப்படையில் நீதிமன்றம் தனது சொற்பொருள் தளர்வற்ற பொருள்கோடலினை நியாயப்படுத்தியது.

காலாவதியாகும் வரை” என்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டது. சனாதிபதியினால் வெளியிடப்பட்ட 2 பங்குனி தேதியிடப்பட்ட வர்த்தமானி தற்போது வலிதாகவும் செயற்பாட்டிலுமுள்ளது. அந்தவகையில், பொதுச் சேவைகளுக்கு அத்தியாவசியமான” செலவினங்களுக்கான தொகைகளை சனாதிபதி 14 ஆவணி 2020 வரை (அதாவது புதிய பாராளுமன்றம் கூடுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து 3 மாதங்கள்) மட்டுமே செலுத்த முடியும். ஆதலினால், 14 ஆவணி 2020 இறுதித் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். அதுமட்டுமன்றி நிதி ஒதுக்கீட்டு சட்டமூலமும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட வேண்டும். கொவிட் பெருந்தொற்று நிலவிவருகின்ற தற்போதைய காலகட்டத்தில் சாத்தியமற்ற இறுதித்திகதியாக இது காணப்படுகின்றது.

ஆதலால், உறுப்புரை 150(3)இற்கு கீழான சனாதிபதியின் அதிகாரம் கால எல்லை மற்றும் “பொது சேவைகளுக்குத் அத்தியாவசியமான” செலவினங்களுக்கு மட்டும் என்கின்ற நோக்கெல்லை என்பவற்றினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. “பொது சேவைகளுக்குத் அத்தியாவசியமானது” என்பது வரையறுக்கப்படவில்லை எனினும், பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் முழுமையாக ஏற்பாடு செய்யப்படும் வரை பொதுச் சேவைகள் தொடர்ச்சியாக இயங்குவதனை உறுதிப்படுத்தவதற்கு அவசியமான செலவினங்களையே குறித்துநின்கின்றது என்பது தெளிவு. மேலும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன் தொகைகளின் அளவு குறித்து அரசாங்கம் பல சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.[110] இந்த தொகைகளை மற்ற பாராளுமன்ற சட்டங்களால் மட்டுமே மாற்ற முடியும்.

நிதி தொடர்பாக சிரமத்தினைத் தீர்க்க சனாதிபதிக்கு பல பொறிமுறைகளையும் அரசியலமைப்புச் சட்டம் வழங்குகிறது. எழுந்துள்ள அவசரநிலை காரணமாக சனாதிபதி அரசியலமைப்பின் 70(7) உறுப்புரையின் மீது சார்ந்திருந்து பாராளுமன்றத்தை கூட்டுவதே இந்தப் பொறிமுறைகளில் மிகவும் நேரடியானது.[111] பாராளுமன்றம் கூட்டப்பட்டவுடன், அது கொவிட்-19 பெருந்தொற்றினை முகங்கொடுப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலங்களை நிறைவேற்ற முடியும். இந் நெருக்கடியை எதிர்கொள்வதற்கு தேவையான நிதியை திரட்டுவதற்கும் செலவழிப்பதற்குமான அத்தியாவசியமான வெளிப்படைத்தன்மை இது வழங்கும். தற்போதைய சூழ்நிலையில், விசேடமாக, நெருக்கடியின் தீவிரத்தன்மை மற்றும்

[110] 2019 ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் தீவரப் பொறுப்பு முகாமைச் சட்டம் ஆகியவற்றைப் பார்க்க..

[111] **பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர்** எந்த நேரத்திலேனும், பாராளுமன்றம் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னராகக் கூட வேண்டுமென்பதனை அவசியமாக்குகின்ற அத்தகைய இயல்பினதான **நெருக்கடி நிலையொன்று எழுந்துள்ளதெனச்** சனாதிபதி திருப்திப்பட்டால், அவர், கலைக்கப்பட்டிருந்த **பாராளுமன்றத்தைப் பிரகடனத்தின் மூலம்**, அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு முற்படாத ஒரு தேதியில் **கூடுமாறு அழைக்கலாம்** என்பதோடு, அத்தகைய **பாராளுமன்றம் அந் நெருக்கடி நிலை முடிவுற்றவுடனும், அல்லது பொதுத் தேர்தல் முடிவுற்றவுடனும், இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அது முடிவடைந்தவுடனும், கலைக்கப்பட்டுவிடும்.**

வரவிருக்கும் தேர்தல் என்பவற்றின் பின்னணியில் பெருந்தொற்றினை எதிர்கொள்ள அரசாங்கத்திற்குத் தேவையான நிதியினை
எந்தவொரு எதிர்க்கட்சியும் மறுப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

அவசரகாலநிலை முடிவுறுத்தப்பட்டதும் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்திமுடிக்கப்பட்டதும், இத் தேதிகளில் எது முதலில் வருகின்றதோ, அத் தேதியன்று பாராளுமன்றம் கலைக்கப்படுவது தற்போதைய சூழலில் உறுப்புரை 70(7)இல் சார்ந்திருப்பதன் கூடுதல் நன்மையாகும். தேவையற்ற தாமதமின்றி பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புக்கூறலின் மேலதிக அடுக்கு ஒன்றினை இது சேர்க்கும்.

**இ) பொது அவசரகாலநிலைகளை கையாளுவதற்கான விசேட அதிகாரங்கள்**

இலங்கைக்குள் கொவிட்-19 பரவலினைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் கடந்த இரண்டு வாரங்களாக எடுத்து வருகிறது.

- தனி நபர்களை, குறிப்பாக வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படபவர்களை அவர்களது சொந்த வீடுகள் மற்றும் அரசாங்கத்தால் நடத்தப்படும் இடவசதிகளிலும் தனிமைப்படுத்துதல்.
- குறிப்பிட்ட சில வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய நபர்களை சுகாதார அதிகாரிகளிடம் பதிவுசெய்யுமாறு கோருதல் மற்றும் அவ்வாறு பதிவு செய்யாத நபர்களை தொடர்பு தடமறிதல்.
- பாரியளவிலான பொதுமக்கள் ஒன்றுகூடல்களைத் தடுக்க பொது விடுமுறைகள் மற்றும் பிற விடுமுறை நாட்களை அறிவித்தல்.
- நாட்டின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவினைப் பிறப்பித்தல்.
- உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கின்ற முயற்சிகளை ஒருங்கிணைக்கும் பொறிமுறைகளை அமைத்தல்.

என்பவற்றை இது உள்ளடக்கும்.

இவை அனைத்தும் வைரஸ் பரவுவதைத் தடுக்கவும் பொது சுகாதாரத்தினைப் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகள். இருப்பினும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் தெளிவான சட்ட அடிப்படையினைக் கொண்டிருந்த போதிலும்,[112] ஏனையவை

[112] தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு மூன்றின் அடிப்படையில், குறிப்பிட்ட நபர்களை தனிமைப்படுத்துவது தொடர்பாக ஒழுங்குவிதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உள்ளது.

தொடர்பான, சட்ட அடிப்படையானது தெளிவற்றதாகக் காணப்படுகின்றது. சட்ட அடிப்படை காணப்படாமையினை அரசாங்கத்தினால் குறுகிய காலத்திற்கு சமாளிக்க முடியுமானதாக இருப்பினும், நீண்ட காலப் பின்விளைவுகள் பிரச்சனைக்குரியவை.[113]

பல பேரழிவுகளைச் கையாளுகின்ற பல தசாப்த அனுபவத்தினை கொண்டிருந்தபோதிலும், கொவிட்-19, மனித வாழ்க்கை, உரிமைகள், ஆட்சி மற்றும் பொருளாதாரம் தொடர்பில் பரந்துபட்ட பின்விளைவுகளுடனான முன்னெப்போதும் முகங்கொடுக்காத சவாலினை இலங்கை அரசுக்கு முன்வைத்தள்ளது.

இது குறைந்தபட்சமாக, பொறுப்புக்கூறும்தன்மையுள்ள, வெளிப்படையான மற்றும் வினைத்திறனான நிர்வாகம் மற்றும் முடிவெடுக்கும் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அரசாங்கத்தினைத் தேவைப்படுத்தும். அத்தகைய பொறிமுறைகளை, சவால்களின் தனித்துவமான தன்மை காரணமாக, தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பின் உருவாக்குவது கடினமாக இருக்கும்.[114]

புதிய பாராளுமன்றமொன்று தேர்ந்தெடுக்கப்படும் வரை அத்தகைய பொறிமுறைகளை புதிதாக உருவாக்குவதனை அரசாங்கம் தாமதிக்க முடியாது. எனவே, அரசியலமைப்பின் உறுப்புரை 70(7)இற்கமைய பாராளுமன்றத்தினை உடனடியாக கூட்டுவதற்கான நடவடிக்கையினை சனாதிபதி எடுக்க வேண்டும்.

அரசாங்கம், பகிரங்கமாக அறியப்படாத காரணங்களுக்காக, பாராளுமன்றத்தை கூட்டுவதில் தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. அவசரகாலநிலை சூழ்நிலைகளினைக் கையாளுவதற்காக தற்போதுள்ள சட்டங்களினை பயன்படுத்தாதிருத்தல் உள்ளிட்ட, கொவிட்-19இனை மேலும் வினைத்திறனுடன் கையாளுவதற்கு தான் உபயோகிக்கக்கூடிய கருவிகளை பாராளுமன்றத்தை கூட்டாததன் மூலம் அரசாங்கம் தனக்கு மறுக்கிறது.[115] இந்தச் சட்டங்கள் பொது அவசரநிலைகளைக் கையாளுவதற்கு மிகக் குறைந்த மேற்பார்வையுடன் கூடிய பரந்த அதிகாரத்தையும் தற்துணிவினையும் அரசாங்கத்திற்கு தர்க்கத்திற்குரிய முறையில் வழங்குகின்றபோதும், பொது அவசரகாலநிலை / பேரிடர் பிரகடனம் சனாதிபதியினால்

[113] குறிப்பாக தனிப்பட்ட பொது அதிகாரிகள் உட்பட இதன் காரணமாக பல்வேறு விளைவுகள் ஏற்படக்கூடும், மேலும் அரசாங்கத்தின் மேற்கூறப்பட்ட ஆணைகளை / முயற்சிகளை அலட்சியம் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்தால், சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

[114] எடுத்துக்காட்டாக, தொற்று நோய்கள் கட்டளைச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் ஆகிய இரண்டும் மிகவும் வேறுபட்ட சமூக மற்றும் பொருளாதார சூழலில் உருவாக்கப்பட்ட இலங்கை சுதந்திரமடைவதற்கு முந்தைய சட்டங்கள்.

[115] பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினையும் இலங்கை பேரழிவு செயலாட்சிச் சட்டத்தினையம் பார்க்க.

மேற்கொள்ளப்பட்ட பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட பாராளுமன்ற மேற்பார்வையினை தேவைப்படுத்துகின்றன.[116]

அத்தகைய அவசரகால சூழ்நிலைகளின் போது அதனுடைய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிறைவேற்றுத்துறைக்கு உதவுவதற்கு பாராளுமன்றம் அழைக்கப்பட வேண்டும் என்பது எமது அரசியலமைப்புத் திட்டம்[117] மற்றும் சட்ட அமைப்பு[118] என்பவற்றிலுள்ள பொதுவான இழையாகும். உண்மையில், அவசரகாலநிலைகள் மற்றும் பேரிடர்களைக் கையாளுவதற்காக அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறைக்கு பாராளுமன்ற மேற்பார்வை ஏதுமற்ற வரையறையற்ற அதிகாரத்தை வழங்குவது அத்தகைய அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும், அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணான எதேச்சையதிகாரமான செயல்களுக்கும் வழிவகுக்கும் என உயர் நீதிமன்றம் தலையிட்டு சுட்டிக்காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்துள்ளன.[119] எனவே, அவசரகாலநிலை / பேரழிவிற்கு வினைத்திறனுடனும், அரசியலமைப்புக்கும் சட்டவாட்சிக்கும் மதிப்பளிக்கும் வகையிலும் அரசாங்கத்தின் வேறுபட்ட துறைகள் செயற்படுவதற்கு எங்களுடைய முழுமையான சட்ட அமைப்பு தேவைப்படுத்துகிறது என வாதிடலாம்.

எவ்வாறாயினும், நிறைவேற்றுத்துறையின் மீதான சோதனைகள் விரிவானவை அல்ல மற்றும் நிறைவேற்றுத்துறைக்கு நிலைமைக்கு பதிலளிக்ககூடிய கணிசமான வழிவகைகளை வழங்குகின்றன. அத்தகைய பரந்துபட்ட அதிகாரங்களை வழங்குகின்ற அத்தகைய தற்போதுள்ள சட்டங்களைப் பயன்படுத்தாமல் அரசாங்கம் எதற்காகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுகின்றது என்பதும், அதற்கு பதிலாக வெளிப்படையாகவே அரசியலமைப்புக்கு முரணானதும் சட்டவிரோதமானதுமான பொறிமுறைகளை நாடுகின்றது என்பது புதிராக உள்ளது.[120]

இத்தகைய செயல்கள் இத்தகைய சூழ்நிலைகளைக் கையாளுவதற்கான அரசாங்கத்தின் திறன், சட்டவாட்சி மற்றும் அரசியலமைப்பு ஆட்சி தொடர்பில் அதனுடைய அர்ப்பணிப்பு, பொது நலனுக்காக அதன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான திறன் தொடர்பில் அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையினை மழுங்கடிக்கலாம். இது தேவையற்ற

---

116 பார்க்க, அரசியலமைப்பின் உறுப்புரை 155; பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 2(3), 16 மற்றும் 21; இலங்கை பேரழிவு செயலாட்சிச் சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 11.

117 பார்க்க, அரசியலமைப்பின் உறுப்புரைகள் 70(7) மற்றும் 155

118 பார்க்க, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 2(3), 16 மற்றும் 21; இலங்கை பேரழிவு செயலாட்சிச் சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 11.

119 [இலங்கை பேரழிவு செயலாட்சிச் சட்டமூலம் தொடர்பிலான] உச்ச நீதிமன்ற விசேட தீர்மானம் 04/2005அனை மறுபடியும் பார்க்கவும்.

120 26 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2168/8ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம், http://documents.gov.lk/files/egz/2020/3/2168-08_T.pdf

சட்டச் சிக்கல்கள் மூலம் அரசாங்கத்தை திசை திருப்புவதாக அமைவதுடன், பொதுமக்களின் தேவைகளைத் தீர்ப்பதில் அதன் செயல்திறனையும் குறைக்கிறது.

பின்னிணைப்பு II

## இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள்: சனாதிபதி செயலணி மீதான ஒரு சுருக்கக் குறிப்புரை

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்
8 சித்திரை 2020

**நிறைவேற்றுச் சுருக்கம்**

கொவிட்-19 சுகாதார அவசரகாலநிலைக்கு பதிலளிக்கும் வகையில், ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளை செயல்படுத்துவதனையும், புதியவற்றை நிறுவுவதனையும் இலங்கை கண்ணுற்றுள்ளது. ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்கான சனாதிபதி செயலணி ("செயலணி") அவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய அமைப்புகளில் ஒன்று. அது உருவாக்கப்பட்ட நேரத்தில், சனாதிபதி ஏற்கனவே கொவிட்-19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தினை நிறுவியிருந்தார். இருப்பினும், செயலணிக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை மற்றும் அதிகாரங்கள் நோக்கெல்லை ரீதியில் பரந்துபட்டதுடன் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை உறுதிசெய்வதில் இருந்து சமூகத்தின் நலிவுற்ற குழுக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை வழங்குவது வரையான நடவடிக்கைகளை உள்ளடக்கியுமுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் (CPA) தயாரிக்கப்பட்டுள்ள இந்த வழிகாட்டி செயலணியின் வரைச்சட்டத்தினை சுருக்கமாக ஆராய்கிறது. பெருந்தொற்றினுடைய தாக்கத்தை குறைக்க வினைத்திறனானதும், பயனுறுதியுள்ளதுமான நடவடிக்கைகள் அவசரமாகத் தேவைப்படுகின்ற போதும், அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய தற்போதுள்ள சட்ட மற்றும் நிறுவன ரீதியான வரைச்சட்டங்கள் பலவற்றை இவ் வழிகாட்டி சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக, 2005 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் இது போன்ற நிகழ்வுகளுக்குரியதான ஏற்பாடுகளை வழங்குவதோடு, தற்போதுள்ள நிறுவனங்களையும் செயற்பாட்டாளர்களையும் செயலமர்த்தி விரிவான நடவடிக்கைகளை வினைத்திறனுடன் எடுக்கவும் அனுமதிக்கிறது. செயலணிக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தனித்தனியான பணிகளை முன்னெடுத்திருக்கக்கூடிய மேலதிகமான, மாற்றீடான சட்டங்கள் உள்ளன.

செயலணியின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ள முறையிலுள்ள தெளிவற்ற தன்மையையும், பரந்தளவிலான ஆணையினது அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையினையம் ஏனைய பல எழுத்திலான சட்டங்களையும் மீறுகின்ற தன்மையினையம் வழிகாட்டி சுட்டிக்காட்டுகிறது. இந்த

தற்காலிக நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமையால் இது அதிகரிக்கப்படுகிறது. எனவே, செயலணியை ஸ்தாபிப்பதற்கான உண்மையான நோக்கங்களை வினவுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

முன்னெப்போதும் இல்லாத அளவு மற்றும் பரிணாமத்தினை உடைய அவசரகாலநிலையினை எதிர்கொள்ளும் போது, எதிர்கொள்ளுகையும் திறமையானதாகவும், ஒருங்கிணைந்ததாகவும் மற்றும் மோதல் உணர்திறன், சமத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கொள்கைகளுக்கு இணங்குவதாகவும் இருக்க வேண்டும் என்று CPA குறிப்பிடுகிறது. வழிகாட்டி சிறப்பித்துக் காட்டுவது போல, சிவில் நிர்வாகத்தில் இலங்கைக்கு நிபுணத்துவம் மற்றும் திறன்கள் உள்ளன, அவை தற்போதைய எதிர்கொள்ளுகைக்கு போதுமானதாக இருக்கமுடியும், இருக்க வேண்டும். மிக அடிப்படையில், எதிர்கொள்ளுகை இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரைச்சட்டத்திற்கு இணங்கியதாக வேண்டும்.

**அறிமுகம்**

கொவிட்-19இனைக் கையாளுவதற்கான பொது சுகாதார அவசரகாலநிலைக்கு முகங்கொடுக்கும் விதமாக, 2168/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் சனாதிபதியினால் சனாதிபதி செயலணி ஒன்று 2020 பங்குனி 26 அன்று உருவாக்கப்பட்டமை தொடர்பில் அறிவித்தது. *அதிக நெருக்கடியான நிலையிலுள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்காக* இச் சனாதிபதி செயலணி நிறுவப்பட்டது.

இலங்கையில் கொவிட்-19 நோயைக் கையாளுவதற்காக நியமிக்கப்பட்ட மிக சமீபத்திய நிறுவனம் இச் செயலணியாகும். "சுகாதாரம் மற்றும் பிற சேவைகள் பொது மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு நன்கு தயாரான நிலையில் இருப்பதை உறுதி செய்யதற்காக தவிர்ப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க" "கொவிட்-

19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தினை" சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னர் நிறுவியிருந்தார்.[121]

முகத்தோற்ற அளவில், ஒரே வகையான செயன்முயற்சிகளை இரு அமைப்புக்களும் முன்னெடுக்கின்றமைக்கு வழிவகுக்கக்கூடிய விதத்தில் செயலணி நியமிக்கப்பட்ட பின்னரும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்திற்கான தொடர்ச்சியான தேவை ஏன் அவசியமாகின்றது என்பது தொடர்பில் தெளிவின்மை காணப்படுகின்றது. எவ்வாறாயினும், செயலணியின் விரிவாக்கமடைகின்றதன்மை மற்றும் அடைவுத்தன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு, ஆணையினை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சில சொற்பிரயோகங்களின் தெளிவின்மை மற்றும் அதிகார வரம்புமீறல் தொடர்பான கேள்விகளை எழுப்புகின்ற விதமாக செயலணி மிகவும் பரந்துபட்ட ஆணையைக் கொண்டுள்ளது.

இலங்கை பல அனர்த்தங்களை எதிர்கொண்டுள்ளதுடன் அவற்றிற்கு முகங்கொடுப்பதற்கான பல்வேறு வரைச்சட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அத்தியாவசிய சேவைகள் தேவைப்படுத்தப்படுகின்ற பல அவசரகால சூழ்நிலைகளை சமாளிக்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நியமிக்கப்பட்டார்.[122] 2004 சுனாமியைத் தொடர்ந்து, மூன்று செயலணிகள்[123], மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் (RADA) மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம்[124] உட்பட்ட ஏனைய பல கட்டமைப்புகள் நிறுவப்பட்டன. 2009ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட வட மாகாணத்தில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான சனாதிபதி செயலணி உட்பட்ட பல பொறிமுறைகள் போருக்குப் பின்னைய சூழலில் உருவாக்கப்பட்டன.[125]

கூடுதலாக, மையத்திலும் பிராந்தியங்களிலும் தற்போதுள்ள பல கட்டமைப்புகள், அவசரகால நிலைமைகளின் போது முக்கிய வகிபாகங்களை வகித்துள்ளன.

கடந்த காலத்தில், நலிவுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளை அவர்களின் குறிப்பிட்ட பகுதிகளில் நிவர்த்தி செய்யவதற்காக புதிதாக நிறுவப்பட்ட நிவாரண

[121] சனாதிபதியின் ஊடகப் பிரிவு, 'இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கொவிட்-19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்திற்கு தலைமை வகிக்கின்றார்' https://www.pmdnews.lk/army-commander-shavendra-silva-heads-national-operation-center-for-prevention-of-covid-19-outbreak/

[122] ஒழுங்குவிதிமுறை 9, 2005ஆம் ஆண்டின் ஓராம் இலக்க அவசரகால (இதர விதிகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்குவிதிமுறைகள் (திருத்தப்பட்டதற்கமைய) https://www.refworld.org/pdfid/471712342.pdf

[123] Task Force for Rescue and Relief (TAFRER), Task Force for Logistics, Law and Order (TAFLOL) and Task Force for Rebuilding the Nation (TAFREN)

[124] 2015ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை பேரழிவு செயலாட்சி சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

[125] Reliefweb.int, 'இலங்கை: வடக்கை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி புதிய செயலணியை நியமித்துள்ளார்', https://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-president-appoints-new-task-force-rebuild-north

பொறிமுறைகளுடன் சமுர்த்தி திட்டம், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு கட்டமைப்புகள் ஒருங்கிணைந்து செயலாற்றியுள்ளன.

அனர்த்தங்களையும் அவசரகாலநிலைகளையும் கையாளுவதில் இலங்கையின் வரலாற்றினடிப்படையில், தற்போதைய சூழ்நிலையில் ஒரு வகிபங்கினை வகிக்கக்கூடிய மற்றும் வகிக்கவேண்டிய நிபுணத்துவம் மற்றும் திறன்கள் சிவில் நிர்வாகத்துறையில் செறிந்து காணப்படுகின்றது. கொவிட்-19 தொற்றினுடைய ஆரம்ப நாட்கள், அவசரகாலநிலைக்கு முகங்கொடுப்பதிலும் அதனைக் கையாளுவதிலும் முன்னிலை பணியாளர்களின் திறமையை வெளிப்படுத்தியது.

எனவே, சுகாதார அவசரகாலநிலையைச் கையாளுவதற்காக அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு புதிய பொறிமுறைகளும் இடரினை எதிர்கொள்வதில் தற்போதுள்ள கட்டமைப்புகளுக்கு வகிபாகமொன்று வழங்கப்படுகின்றது என்பதனையும் எந்தவொரு புதிய கட்டமைப்புகளும் அரசியல் லாபத்திற்காக தொடங்கப்படவில்லை என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.[126] முன்னைய அனுபவங்களில் இருந்து பாடங்கள் கற்றறியப்பட்டுள்ளன என்பதுவும், தற்போதைய அவசரகாலநிலைளை எதிர்கொள்வதற்கான முன்னெடுப்புக்கள் முரண்பாடு நுண்ணுணர்திறன், ஒப்புரவு / சமத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கோட்பாடுகளினை உள்வாங்கியுள்ளன என்பதுவும் மிக முக்கியமானது.

கொவிட்-19 இலங்கையில் முன்னெப்போதும் முகங்கொடுத்திருக்காத சவால்களை எழுப்பியுள்ளதுடன், பயனுறுதியுள்ளதும், ஒருங்கிணைந்ததும் மற்றும் மேற்கூறப்பட்ட கோட்பாடுகள் மற்றும் இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரைச்சட்டத்திற்கு ஏற்புடைய விதத்திலுமான கையாளுகையினை தேவைப்படுத்தியுமுள்ளது.

செயலணியின் தாபிப்பு மற்றும் அதனுடைய பரந்துபட்ட ஆணை ஆகியவை தற்போதைய சுகாதார அவசரகாலநிலை சுழ்நிலை மற்றும் இலங்கையின் ஆட்சிமுறை வரைச்சட்டத்திற்குள் தற்போதுள்ள நிபுணத்துவம், திறன்கள் மற்றும் கட்டமைப்புகள் ஆகியவற்றின் பின்னணியில் ஆராயப்பட வேண்டும்.

செயலணியின் வகிபாகத்தினையும் ஆணையினையும் ஆராய்வதற்காக தற்போதைய வழிகாட்டி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் (CPA) தயாரிக்கப்பட்டுள்ளதோடு, முக்கிய

[126] CMEV கடிதம், 6 சித்திரை 2020

பிரச்சினைகளையும் எழுப்புகிறது. பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சட்டங்கள் நடைமுறையில் உள்ளதொரு சூழலில் இத்தகைய விரிவான ஆணையைக் கொண்ட ஒரு செயலணியனை நிறுவுதற்கான அவசியத்தன்மையினை இவ் வழிகாட்டி கேள்விக்குட்படுத்துகின்றது. மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யக்கூடிய செயற்பாடுகின்ற பாராளுமன்றம் ஒன்று இல்லாத சூழலில் இந்தக் கரிசணை வலுப்பெறுகிறது.

**செயலணியின் நியமனம்**

சனாதிபதியின் பணிகளையும் அதிகாரங்களையும் உள்ளடக்கியுள்ள அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையின் கீழ் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. உறுப்புரை 33இன் கீழான எவ் அதிகாரம் செயலணியினை உருவாக்குவதற்கு பிரயோகிக்கப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை, ஆனால்,

[2] அரசியலமைப்பினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக...

> *(ஏ)* ***அரசியலமைப்பின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதனவற்றையும் அவர் செய்வதற்கு சர்வதேச சட்டத்தினால், வழக்காறினால் அல்லது வழமையினால் தேவைப்படுத்தப்படுவனவும் அல்லது அதிகாரமளிக்கப்படுவனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்குமான தத்துவத்தினை சனாதிபதி கொண்டவராதல் வேண்டும்,***

என்று கூறுகின்ற உறுப்புரை 33(ஏ)இனைத் தவிர அதினகத்துள்ள அதிகாரங்கள் அனைத்தும் மிகவும் குறிப்பிடும்படியானவை.

தற்போதைய செயலணியினை அமைப்பதற்கு சனாதிபதி இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தினார் என்று தர்க்கரிதியாக முடிவு செய்யலாம்.[127] இந்த உப உறுப்புரையின் கீழ் சனாதிபதிக்கு பரந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தோன்றமளித்தாலும், அரசியலமைப்புக்கும் அல்லது எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்திற்கும் முரணாக எதனையும் செய்ய இது அனுமதிக்கவில்லை என்று அது வெளிப்படையாகக் கூறுகின்றது. எனவே,

---

[127] மேலதிகமாக, (18ஆவது திருத்தச்சட்டத்திற்கு முன்னரான) அரசியலமைப்பின் உறுப்புரை 33(ஊ)இன் கீழ் வட மாகாணத்தில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான சனாதிபதி செயலணி நிறுவப்பட்டது. மேலும், குறித்த உறுப்புரையானது தற்போதைய உறுப்புரை 33(2)(ஏ)இனை மிகவும் ஒத்தது.

எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தையும் மீறும் அதிகாரத்தினை சனாதிபதிக்கு உறுப்புரை வழங்கவில்லை.

சனாதிபதிக்கு அங்கீகாரமளிக்கப்பட்ட அல்லது சர்வதேச சட்டத்தினால், வழக்காறினால் அல்லது வழமையினால் முன்னெடுக்கும்படி தேவைப்படுத்தப்பட்ட ஒன்றினைப்புரிவதற்காக மட்டுமே இவ் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். இவ் அதிகாரமானது நியாயமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதனை இது இயற்கையாகவே குறிக்கிறது.

செயலணியினுடைய ஆணை தொடர்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளைக் கருத்திற்கொண்டு, செயற்குழுவினைத் தாபிப்பதில் உறுப்புரை 33(2)இல் சார்ந்திருத்தல் மற்றும் அதனுடைய சட்டவலிதுடைத்தன்மை தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட வேண்டும் என CPA குறிப்பிடுகிறது.

அரசியலமைப்பின் உறுப்புரை 33 சனாதிபதியின் அதிகாரங்களை மட்டுமன்றி, அவற்றுடன் தொடர்புபட்ட சனாதிபதியின் கடமைகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. இது அரசியலமைப்பினை நிலைநிறுத்துவதனை உறுதிப்படுத்துவது சனாதிபதியின் கடமை என்று கூறுகின்ற உறுப்புரை 33(1)(அ)இனையும் உள்ளடக்கும்.

இதற்கு மேலதிகமாக, *"சனாதிபதி அரசியலமைப்பின் கீழும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அப்போதுள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் கடமை களையும் மற்றும் பணிகளையும் உரியமுறையில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்திற்கு பொறுப்பாதல் வேண்டும்"* என உறுப்பரை 33அ கூறுகிறது. ஆதலால், துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும், அவை நியாயமான மற்றும் விகிதாசார முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் சனாதிபதி தனது அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றார் என்பது குறித்து பாராளுமன்ற மேற்பார்வையானது இசைவாக்கப்பட்டுள்ளது என்பது முக்கியமானது.

தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையிலும், கொவிட்-19 நெருக்கடிக்கு மத்தியில் அதனை முன்னெடுத்துவதில் தற்போது நிலவும் ஆபத்துகளின் காரணமாக பாராளுமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட்டும் உள்ளது. தேர்தலுக்கான புதிய தேதியை நிர்ணயிப்பதனை தாமதிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் முடிவு செய்துள்ளது. இது புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்படுவதற்கு பல மாதங்கள் ஆகலாம். அவசரகாலநிலையின் போது பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படுவதன் முக்கியத்துவம் மற்றும் அவ்வாறு செய்தவற்கு

சனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் பற்றி CPA முன்பு குறிப்பிட்டுள்ளது.[128] சனாதிபதி இவ் அதிகாரங்களைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டினால் அது கொவிட்-19 மேலும் வினைத்திறனுடன் எதிர்த்துப் போராடுவதற்கும் கையாள்வதற்கும் பலவிதமான சட்டங்களை கருவிகளாக கிடைக்கச்செய்யும்.[129]

இன்னும் பரந்த அளவில் கூறுவதாயின், அரசாங்கத்தின் மூன்று தூண்களான நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை - ஆகியன செயல்படும் சனநாயகத்தில் அவசியமானதுடன், அறிமுகப்படுத்தப்படுகின்ற எந்தவொரு வரைச்சட்டமும் அவசியமான மேற்பார்வைகளினை எதிர்கொள்ள வேண்டும். அவசரகாலநிலைமைகளில் நிர்வாகத்துறை சில நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக இருப்பினும், அவை கூட சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்முறைகளுக்கு ஊடாக செல்ல வேண்டும். உதாரணமாக, அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தும்போது கூட, அந் நிலை 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆதலால், கொவிட்-19இனை தீர்ப்பதற்காக எடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும்
சட்டரிதியாகவும் அரசியலமைப்பு ரிதியாகவும் எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுதல் மிகவும் முக்கியமானது.

**செயலணியின் ஆணையும் அதிகாரங்களும்**

*அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்தல்* மற்றும் அதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பன்னிரண்டு பணிகளைச் செய்தல் செயலணியின் ஆணையாகும்.

இப் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக தேவையேற்படும் போது அத்தகைய விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் செயலணிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

---

128 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், “சுருக்க வழிகாட்டி 1: கொவிட் 19 சூழலில் பரிணமிக்கும் சட்டச் சிக்கல்கள்” https://www.cpalanka.org/brief-guide-i-evolving-legal-issues-in-the-context-of-covid-19/
129 மேற்குறிப்பிட்டது

மேலும், அதே வர்த்தமானி மூலம், செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் சனாதிபதி கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றார். யாதேனும் அரசாங்க ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரசாங்க கூட்டுத்தாபன மொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் சனாதிபதியிடம் அறிக்கையிடுமாறு செயலணி தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

இவை அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் அவற்றினை கையாளுகின்றமை மீதான கட்டுப்பாடுகளினை உள்ளடக்கிய மிதமிஞ்சிய அதிகாரங்களாகும். கொவிட்-19இனை வினைத்திறனுடன் எதிர்கொள்ளுகின்ற மற்றும் கையாளுகின்ற செயல்வினை அத்தியாவசியமானதாகும். இருப்பினும், உருவாக்கப்படுகின்ற கட்டமைப்புக்களும் வரைச்சட்டங்களும் இலங்கையின் அரசியலமைப்புக்கும், எழுதப்பட்ட சட்டங்களுக்கும் தகவிணக்கம் உடையனவாக இருக்கவேண்டும். செயலணியின் ஆணை பரந்துபட்டதாக இருப்பதுடன், அவை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுவதனை உறுதிசெய்கின்ற அக மற்றும் புற பொறிமுறைகள் காணப்படவில்லை. குறிப்பாக செயற்படுகின்ற பாராளுமன்றம் ஒன்று இல்லாத நிலையில் செயலணி அதனுடைய அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறு உள்ளது. செயலணியினை வினைத்திறனான முறையில் சோதனை மற்றும் மேற்பார்வை செய்ய இயலாத தன்மை பாரதூரமான பின்விளைவுகயுக்கு இட்டுச்செல்வதுடன் காலப்போக்கில் நிறைவேற்றுத்துறையின் மீது மேலும் அதிகாரத்தை ஒருங்குதிரட்டுவதற்கும், ஏகாதிபத்திய கட்டுப்பாட்டை நோக்கி நகர்வதற்கும் பங்களிக்கலாம்.

**தற்போதுள்ள வரைச்சட்டமும் கரிசணைக்கான விடயப்பரப்புகளும்**

இதுபோன்ற ஒரு சூழ்நிலை முன்னெப்போதும் முகங்கொடுத்திருக்காத ஒன்று என்பதனையும், சூழ்நிலையின் அனைத்து அம்சங்களையும் சமாளிக்க தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாதிருக்கலாம் என்பதனையும் ஏற்றுக்கொள்கினற போதும், நெருக்கடியைச் சமாளிக்க முதலில் தற்போதிருக்கின்ற சட்டங்களைப் பயன்படுத்துவதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தற்போதுள்ள

சட்டங்களினை பயன்படுத்துவது அதிகாரிகள் அதிகாரத்தை பயன்படுத்தும் விதம் தொடர்பில் ஒரு குறிப்பிட்ட அளவிலான மேற்பார்வை இருப்பதை உறுதி செய்கிறது.

**2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டம்**

*"இலங்கையிலுள்ள எவரேனும் ஆளின் அல்லது ஆட்கள் தொகுதியின் பாதுகாப்புக்கு அல்லது ஆரோக்கியத்துக்கு ஆபத்தாயிருக்கின்ற அல்லது ஆபத்தாயிருப்பதற்கு அச்சுறுத்துகின்ற நிகழ்ந்துள்ள அல்லது நிகழக்கூடிய சாத்தியமுள்ள இயற்கையான அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சம்பவம்"* என 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டம் பேரழிவினை வரைவிலக்கணப்படுத்துவதோடு "*(ஓ) தொற்றுநோய் பரவுகையினையும்"* உள்ளடக்கியுள்ளது. கொவிட்-19 நெருக்கடி இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் நிச்சயமாக உள்ளடங்கும்.

சட்டத்தின் பிரிவு 3 தேசிய பேரழிவுச் செயலாட்சிப் பேரவையின் அமைப்பினை குறித்துரைக்கின்றது.[130] பேரவை பின்வருவோரை உள்ளடக்கியிருக்கும்;

- சனாதிபதி (இவர் பேரவையின் தவிசாளராக இருத்தல் வேண்டும்),
- பிரதம அமைச்சர்,
- எதிர்க்கட்சித் தலைவர்,
- வேறுபட்ட விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்கள்,
- மாகாணசபை ஒவ்வொன்றினதும் முதலமைச்சர்கள் (மாகாணசபை தேர்ந்தெடுக்கப்படாத விடயத்தில் மாகாணத்துக்காக நியமிக்கப்பட்ட ஆளுநர்),
- எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் [பிரிவு 3(3)].

பேரழிவு மேலாண்மையில் உள்ளீடுகளைக் கொண்ட பல்வேறு அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் அவர்களின் கட்டுப்பாட்டிற்கு கீழ் வருகின்ற பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை உறுதி செய்வர்.

கீழ்வருவனவற்றை உள்ளடக்கிய பல்வேறு பணிகளை ஆற்றுவதற்கு பேரவைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது:[131]

- ஏதேனும் பேரழிவு ஏற்படும் பட்சத்தில், அவசரகால உதவி, மீட்பு, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு என்பவற்றை ஏற்பாடு செய்தல்,

---

[130] பார்க்க: தேசிய பேரழிவுச் செயலாட்சிப் பேரவை, பேரழிவுச் செயலாட்சி அமைச்சு http://www.disastermin.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=51&Itemid=64&lang=en

[131] 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டம், பிரிவு 4 (d), (i) மற்றும் (o)

- நிகழக்கூடிய அல்லது நிகழ்ந்துள்ள ஏதேனும் பேரழிவின் விடயத்தில், உள்ளூர் மற்றும் சமுதாயத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துதலும் ஆதரவளித்தலும்,
- இயைபான அதிகாரசபைகள் மற்றும் குழக்கள் அத்துடன் 1993ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க புனரமைப்பு, புனர்வாழ்வு நிதியச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட புனரமைப்பு, புனர்வாழ்வு நிதியம் என்பவற்றிலிருந்து பேரழிவுச் செயலாட்சிக்கான நிதிகள் குறித்தொதுக்கப்படுவதனை விதந்துரைத்தல்.

மேலும், *"பேரழிவுச் செயலாட்சி செயற்பாடுகள் பற்றித் தோதான ஒழுங்கமைப்புக்களுக்கும் அரசாங்கஞ் சாராத ஒழுங்கமைப்புக்களுக்கும் மாவட்டச் செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்களையும் வழிகாட்டு நெறிகளையும் வழங்குதலும், அத்தகைய ஒழுங்கமைப்புக்களினதும் செயலாளர்களினதும் ஒருங்கிணைப்படன் வேலை நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைத்தலும் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தலும்"*[132] உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்தொதுக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை நியமிப்பதற்கு பேரவை தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் செயலணிக்கு செயல்படுத்த பணிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு இவ் ஏற்பாடுகள் அரசினை இயைபுபடுத்தும்.

இத்தகைய பேரழிவு அல்லது அவசரகாலநிலை சூழ்நிலையில் விரைவான நடவடிக்கை அவசியம் என்பது ஒரு செயலணி மூலம் பரந்துபட்ட அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுகின்ற தற்காலிக முறையின் ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு வாதம் ஆகும். சனாதிபதி, அவரது சொந்தப் பிரேரணையின் மீதோ அல்லது பேரவையின் மதிப்புரையின் மீதோ பேரழிவு நிலையொன்று ஏற்பட்டிருக்கின்றது என்று, பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்துவதற்கு சட்டத்தின் பிரிவு 11 அனுமதியளிப்பதன் மூலமாக அத்தகைய விரைவான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை இச் சட்டம் கொண்டுள்ளது என்பது குறித்தவதானிக்கப்பட வேண்டியது. செய்யப்பட்ட பிரகடனமொன்று அப் பிரகடனமானது வெளிப்படுத்தப்பட்ட தேதியை உடனடுத்து வருகின்ற அதனது முதலாவது அமர்வின் போது பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டு தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படுவதன் மூலம் [பிரிவு 11(3)]அது நீடிக்கப்படுவதற்கு முன்னர் அப் பிரகடனம் எத்தேதியன்று செய்யப்பட்டதோ அன்றிலிருந்து இரண்டு மாத காலப் பகுதியொன்றுக்கு தொடர்ந்து வலுவிலிருக்கலாம் [பிரிவு 11(2)].

பிரிவு 12இன் கீழ், பேரழிவு நிலையொன்று வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் 21ஆம் பிரிவின் கீழ் பெயர்குறிப்பிடப்பட்ட தோதான ஒழுங்கமைப்பொன்றை

---

[132] மேற்குறிப்பிட்டது, பிரிவு 8(20(e)

(அ) பதினோராம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ், எந்த இடப்பரப்பு அல்லது இடப்பரப்புக்கள் தொடர்பில் பிரகடனமொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்புக்குள் அல்லது அந்த இடப்பரப்புக்களுக்குள் பேரழிவின் அல்லது சாத்தியப்படக்கூடிய பேரழிவின் தாக்கத்தினைத் தவிர்ப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான கிடைக்கக்கூடியதாகவுள்ள வளங்கள் எல்லாவற்றையும் நெறிப்படுத்துவதற்கும், இயைபுபடுத்துவதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும்,

(ஆ) மேலதின வளங்கள் கிடைத்திருக்குமாயின், அத்துடன் கிடைத்திருக்கும் போதும், அவற்றின் ஒதுக்கீடுகள் தொடர்பாக செய்யப்படக்கூடிய அத்தகைய ஒழுங்கேற்பாடுகளுக்கிணங்க, மேலதிக வளங்களை நெறிப்படுத்துவதற்கும், இயைபுபடுத்துவதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும்; அத்துடன்

(இ) விடயத்திற்கேற்ப, தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தில் அல்லது தேசிய அவசரகால செயலாட்சித்திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய நடவடிக்கைகளை சனாதிபதியால் அத்தகைய தோதான ஒழுங்கமைப்புக்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்க எடுப்பதற்கும் சனாதிபதி பணிக்கலாம்.

இவை, பரந்த அளவிலான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க சனாதிபதிக்கு அனுமதிக்கும் கணிசமான அதிகாரங்களாகும். தற்காலிக செயலணியின் ஊடாக செயற்படுதவனை விட இந்த சட்டத்தின் ஊடாக செயல்படுவதற்கு போதுமான நேரம் இருந்தது. 28 தை 2020இற்கு முன்னர், 12 மருத்துவமனைகள் ஏற்கனவே சிகிச்சை மையங்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன[133], இரண்டாவது உறுதிப்படுத்தப்பட்ட நோயாளி (மற்றும் முதல் உள்ளூர் நோயாளி) 11 பங்குனி 2020 அன்று கண்டறியப்பட்டார்[134], மற்றும் 20 பங்குனி 2020இற்கு முன்னர், பல விடுமுறைகள்[135] மற்றும் நாடளாவிய ரீதியிலான ‘ஊரடங்குச் சட்டம்’ ஏற்கனவே அறிவிக்கப்பட்டது[136].

---

[133] சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட்-19) - சூழ்நிலை அறிக்கை - 28.01.2020, http://www.epid.gov.lk/web/images/pdf/corona_virus_report/sitrep-sl-eu-28-01.pdf; [அனைத்து சூழ்நிலை அறிக்கைகளையும் இங்கே பார்வையிடலாம் http://www.epid.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=225&Itemid=480&lang=en]

[134] சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட்-19) - சூழ்நிலை அறிக்கை - 12.03.2020, http://www.epid.gov.lk/web/images/pdf/corona_virus_report/sitrep-sl-eu-28-01.pdf

[135] NewsFirst.lk, ‘அரசு மூன்று நாள் விடுமுறை அறிவிக்கிறது’ https://www.newsfirst.lk/2020/03/17/government-declares-three-day-holiday/

[136] NewsFirst.lk, ‘இன்று மாலை 06.00 மணி முதல் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்’ https://www.newsfirst.lk/2020/03/20/island-wide-curfew-will-be-in-effect-from-0600-pm-today/

சூழ்நிலையினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான பல்வேறு எடுக்கப்பட்டதன் பின்னர், 26 பங்குனி 2020 அன்றே செயலணி நியமிக்கப்பட்டது.
தேசிய பேரழிவுச் செயலாட்சிப் பேரவையினைக் கூட்டுதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை செயற்படுத்தல் உள்ளிட்ட பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் மீதான சார்ந்திருப்பு கையாளுகையில் எவ்விதமான தாமதத்தினையும் ஏற்படுத்தியிருக்காது.

**ஏனைய தொடர்புடைய சட்டங்கள்**

செயலணிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேகமான பணிகளில் பல குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய ஆணையினைக் கொண்டுள்ள சில அதிகாரசபைகளினால் தற்போதைய சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இவை கீழே உள்ள அட்டவணையில், அதிகார வரம்பு மீறல் பற்றிய ஏதேனும் கரிசணைகளைக் சுட்டிக்காட்டும் கருத்துகளுடன் விவரிக்கப்பட்டுள்ளன. நெருக்கடியைக் கையாளுவதில் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் ஒருங்கிணைந்ததாக இருப்பதை உறுதிசெய்யவும், பல அதிகாரசபைகள் ஒரே நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்க்கவும் இந்த அதிகாரிசபைகளை வழிநடத்துதல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றுக்கு செயலணியின் வகிபாகம் மட்டுப்படுத்தப்பட்டால், அது இந்தச் சட்டங்களின் அதிகார வரம்புகளை மீறுவதாக இருக்காது. எவ்வாறாயினும், இந்தச் செயல்களைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிசபைகளைத் தவிர்த்து, இந்த அதிகாரங்களைத் தானாகவே செயற்படுத்த செயலணி முயற்சித்தால், முன்னெடுக்கப்பட்ட அச் செயல்களின் சட்டவலிதுடைத்தன்மை கேள்விக்குரியது. வர்த்தமானியில் வழங்கப்பட்டுள்ளபடி “வழிநடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்பது” பணிக்குழுவின் நோக்கமாக இருந்திருப்பின், 33ஆவது உறுப்புரையின் கீழானது என ஊகிக்கப்படுகின்ற அதிகாரங்களை அதற்கு வழங்குவது அசாதாரணமானது. இது எதிர்வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில் கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

| **இல.** | **பணிகள்** | **பணியினை இயைபாக்குகின்ற மாற்றீடான சட்டங்கள்** |
|---|---|---|
| 1 | நெல், தானியங்கள், காய்கறிகள், பழங்கள், மீன்,<br>இறைச்சி, பால் மற்றும் முட்டை, அத்துடன்<br>தேயிலை, கறுவா மற்றும் மிளகு போன்ற பெருந்தோட்டப் பொருட்களின் உற்பத்திக்கான விவசாய நடவடிக்கைகளுக்கு விவசாயிகளினால் கோரப்படுகின்ற வசதிகளை வழங்கல். | 1979ஆம் ஆண்டின் 79ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டம் - மிகவும் சாத்தியமான வினைத்திறனுள்ள மற்றும் உற்பத்தித்திறனுள்ள முறையில் விவசாய பயிர்கள் மற்றும் கால்நடைகள் உற்பத்தியை உறுதி செய்வதற்கான ஒரு சட்டம்.<br><br>• “கமம்” என்பது பணி எண் 1 (பிரிவு 68) மூலமாக செயலணிக்கு கட்டுப்பாடு வழங்கப்பட்டுள்ள அனைத்து “விவசாய |

| | | |
|---|---|---|
| | **கருத்து:**<br>பிராந்திய மட்டத்தில் விவசாயத்தினை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கான பணியை மேற்கொள்வதற்கான ஒரு விரிவான கட்டமைப்பினை கமநல சேவைகள் சட்டம் வழங்குகிறது. இதேபோல், ஏற்றுமதி விவசாய பயிர் ஊக்குவிப்பு சட்டம் பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திக்கான கட்டமைப்பினை வழங்குகிறது. தற்போதுள்ள இந் நிறுவனங்களைப் பயன்படுத்தாததற்கான காரணங்கள் தெளிவற்றதாகக் காணப்படுவதுடன், இது பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாதற்ற நிலைமையினை தோற்றுவிக்கின்ற ஒரே செயற்பாட்டினை பல செயற்பாட்டாளர்களுக்கு வழிவகுக்கும். | நடவடிக்கைகளையும்" உள்ளடக்கிய பல்வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டமைந்தது.<br>• கமநல சேவைகள் குழுக்களுக்கு விவசாய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், அரசாங்கக் கொள்கைகளை அவற்றின் அதிகாரப் பரப்பெல்லைக்குள் செயல்படுத்தவும் அதிகாரம் உள்ளது (பிரிவு 46)<br>• இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சாகுபடி அலுவலர்கள், தங்கள் அதிகாரப் பரப்பெல்லைக்குள் விவசாயம் மற்றும் சிறு நீர்ப்பாசனப் பணிகள் தொடர்பான அனைத்து வி'யங்களிலும் கலந்துகொள்ளும் அதிகாரம் உடையவர்கள் (பிரிவு 55(2))<br>• இச் சட்டம் ஒரு கமநல சேவைகள் நிதியினை நிறுவுகிறது. இரண்டு வழிகள் இதற்கு பணம் வழங்கப்படலாம்: அத்தகைய தொகைகள் மீதான பாராளுமன்ற வாக்கெடுப்பு மற்றும் திரட்டு நிதியிலிருந்து செலுத்துவதன் மூலம் [பிரிவு 60(2)(இ) மற்றும் (ஈ)]. பொது நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பிலான பாராளுமன்ற மேற்பார்வையினை மேற்கூறிய இரண்டு முறைகளும் ஓரளவுக்கு உறுதி செய்கின்றன. மேலும், இந் நிதியின் கணக்குகள் ஒவ்வொரு நிதியாண்டும் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் [பிரிவு 60(5)]. இது பொது நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் சில மேலதிக கூர்ந்தாய்வினை வழங்குகின்றது. |

| | | |
|---|---|---|
| | | **[1992ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்பு சட்டம்]**<br>• தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் மரமுந்திரிகை தவிர்ந்த, வருடாந்த உற்பத்தியில் குறைந்தபட்சம் 50%ஆவது ஏற்றுமதி செய்யப்படுகின்ற எப் பயிர்கள் ஏற்றுமதி கமப் பயிர்கள் (அவை இச் சட்டத்திற்கு எற்புடையதாகின்றன) என்பதனை அறிவிப்பதற்கு அமைச்சருக்கு அனுமதிக்கிறது (பிரிவு 2).<br>• ஏற்றுமதி கமத்தின் பணிப்பாளருக்கு இச் சட்டத்தின் கீழ் பதனிடுபவராக, கொள்முதலாளராக, குறித்துரைக்குப்பட்ட கமப் பயிரின் பதனிடுபவராக அல்லது விற்பனையாளராக பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நபரையும் குறித்த பயிர் தொடர்பிலான விபரங்களினைப் பேணுமாறும் வழங்குமாறும் கோரும் அதிகாரம் உள்ளது (பிரிவு 6).<br>• குறித்துரைக்கப்பட்ட கமப் பயிர்களை பயிரிடுகின்ற மற்றும் பதனிடுகின்ற நபர்களுக்கு மானியங்கள் மற்றும் ஏனைய நிதி அல்லது நிதி-சாரா உதவிகளை வழங்குவதற்கான திட்டங்கள் வழங்குதல் உட்பட இச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிமுறைகளை உருவாக்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. ஓரளவுக்கேனும் மேற்பார்வை இருப்பதனை உறுதி செய்வதற்காக இவ் ஒழுங்குவிதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டுமென்பதோடு, பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படவும் வேண்டும் [பிரிவு 15(1)-(3)]. |
| 2 | விவசாய பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விநியோகிப்பதற்காக இலங்கை சதொச, கூட்டுறவு வலையமைப்பு, கார்கில்ஸ், கீல்ஸ், ஆர்பிகோ மற்றும் லா.்.ப்ஸ் சில்லறை வலையமைப்பு ஆகியவற்றை ஒழுங்கமைத்தல் மற்றும் இயக்குதல்.<br><br>**கருத்து:**<br>ஒழுங்கமைத்தல் மற்றும் இயக்குதல் ஆகிய சொற்பதங்கள் இந்த சூழ்நிலையில் எவற்றை குறித்து நிற்கின்றன மற்றும் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருக்கும் நேரத்தில் இந்த பொருட்களின் விநியோகத்திற்கான வசதிகளை வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் தெளிவில்லை. | 2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டம் - உள்நாட்டு வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துவதோடு, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கின்றது.<br><br>• இயலுமானவிடத்தெல்லாம் பாவனையாளர்கள் நியாயமான விலைகளில் பண்டங்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தல் [பிரிவு 7(இ)] மற்றும் நியாயமற்ற வியாபாரப் பழக்கங்கள் அல்லது வேறுவகைப்பட்ட வழிகளினால் வியாபாரிகளினால் பாவனையாளர்கள் சுரண்டப்படுதல் என்பவற்றுக்கு எதிராக நிவாரணம் தேடுதல் [பிரிவு 7(ஈ)] ஆகியவற்றை அதிகாரசபையின் குறிக்கோள்கள் உள்ளடக்கும்.<br>• திருப்திகரமான தரத்தையுடைய ஏதேனும் தரத்தைச் சார்ந்த பண்டங்களையும் சேவைகளையும் பாவனையாளர்களுக்கு நியாயமான விலைகளிலும் போதுமான அளவுகளிலும் கிடைப்பதனை உறுதிசெய்ய அரச அல்லது வேறு அமைப்புக்களை முன்னேற்றலாம், அவற்றுக்கு உதவலாம் மற்றும் அவற்றை ஊக்குவிக்கலாம் (பிரிவு 9).<br>• பண்டங்களை விற்கக்கூடியதான நேரங்களையயும் இடங்களையும், எவையேனும் பண்டங்கள் உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், |

| | | |
|---|---|---|
| | | சேமித்துவைத்தல், விற்றல் அத்துடன் கையிருப்பில் வைத்தல் பற்றிய வேறெவையேனும் நிபந்தனைகளை விதித்துரைத்து ஏதேனும் வகுப்பைச் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு அல்லது வியாபாரிகளுக்கு விசேட பணிப்புரைகள் வழங்கல் உட்பட்ட பணிப்புரைகளை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது (பிரிவு 10). இப் பணியின் கீழ் செயலணி முன்னெடுக்கின்ற சில செயல்களுக்கு இப் பணிப்புரைகள் மாற்றீடுகளை வழங்கலாம்.<br>• எவரேனும் வியாபாரி அல்லது பொருள்களைப் பதுக்கி வைத்தல் தவறொன்றாகும் (பிரிவு 17). |
| 3 | இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இலங்கை சுங்கம், கூட்டாண்மை வங்கித் துறை மற்றும் ஏனைய அரசாங்க ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றல் மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மருந்துகளின் இறக்குமதியையும் தேயிலை, உடற் சுகாதார ஆடைகள் மற்றும் பிற பொருட்களின் ஏற்றுமதியையும் இலகுபடுத்தல். | • 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 6இன் கீழ் குறிப்பிட்ட எந்தவொரு துறைமுகத்திற்கும் வினைத்திறனானதும் ஒழுங்குமுறையானதுமான சேவைகளை வழங்குவது துறைமுக அதிகாரசபையின் கடமையாகும். மற்றும் அதிகாரசபைக்கு பணிப்புரைகள் வழங்குவதற்கான அதிகாரம் அமைச்சருக்கு உள்ளது.<br>• தேசிய நலனைப் பாதிக்கின்ற விடயங்கள் என அமைச்சருக்கு தோன்றுகின்ற விடயங்கள் தொடர்பில் அதனுடைய கடமைகளை புரிதல் மற்றும் அதிகாரங்களைப் பிரயோகித்தல் தொடர்பில் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளினை எழுத்து மூலமாக அமைச்சர் அதிகாரசபைக்கு வழங்கவாம். அத்தகைய பணிப்புரைகளை அதிகாரசபை |

| | | |
|---|---|---|
| | | நடைமுறைப்படுத்த வேண்டும் [பிரிவு 8(1)].<br>• 1869ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்க சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 103இன் கீழ் உள்வருகின்ற மற்றும் வெறிச்செல்லுகின்ற கப்பல்கள் மற்றும் அவற்றினால் இறக்கப்படுகின்ற, போக்குவரத்து செய்யப்படுகின்ற மற்றும் கப்பல்மாற்றியேற்றுகின்ற பொருட்கள் பற்றிய பதிவுகள் தொடர்பிலான விசேட ஒழுங்குவிதிமுறைகளை காலத்திற்கு காலம் உருவாக்குவதற்கான அதிகாரத்தினை அமைச்சர் கொண்டுள்ளார்.<br>• 2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை (NMRA) சட்டத்தின் கீழ் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை இறக்குமதி செய்தல் என்பதுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் மத்திய ஒழுங்குபடுத்துநராக NMRA பணியாற்றுகின்றது [பிரிவு 3(M)]. மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான உரிமங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் வழங்குவதற்கும் NMRA அதிகாரம் கொண்டுள்ளது. இது எழுத்திலான சட்டம் என்பதினாலும், NMRA எந்த மருந்துகள் என்ன அளவுகளில் தேவை என்கின்ற ஞானத்தினை கொண்டுள்ள நிபுணர்கள் என்பதனாலும் இந் நடபடிமுறை பின்பற்றப்படவேண்டும். |
| 4 | வாடிக்கையாளர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் மற்றும் | 1961ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |

| | | |
|---|---|---|
| | பொருட்களினை கொண்டுசெல்லுகின்ற சரக்குந்து (lorry), முச்சக்கர வண்டிகள், பேருந்துகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்களின் ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு சுகாதாரம் மற்றும் துப்பரவு வசதிகளை வழங்கல் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஊரடங்கு உத்தரவு நேரத்தில் அவர்களுக்கு எரிபொருளினை வழங்குவதற்காக திறந்து வைத்திருத்தல். | நிதி அமைச்சருடன் இணைந்து வேண்டும் “பெட்ரோலிய விலை ஆணைகள்” எனப்படும் ஒரு குறித்த வகையான ஆணைகளை உருவாக்குவதற்கு அமைச்சருக்கு சட்டம் அனுமதியளிக்கிறது [பிரிவு 66(1)].<br>பிரிவு 66(2)இற்கமைய ஏதேனும் பெட்ரோலியத்தின் விற்பனை, வழங்கல் அல்லது விநியோகம் தொடர்பான நிபந்தனைகளை இவ் ஆணைகள் விதந்துரைக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களை திறந்து வைத்திருப்பதற்கான ஆணைகளை உருவாக்குவதற்கான அதிகாரம் மேற்குறிப்பிட்ட அமைச்சர்களிடம் உள்ளது என்பது இதனடிப்படையில் தோற்றுகின்றது. |
| 5 | விதை, நாற்றுகள், உரங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கான இயந்திரங்களினை விநியோகிப்பதற்காக விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், சமுர்த்தி அதிகாரசபை, கூட்டுறவு விவசாயிகள் சங்கங்கள், விவசாயிகள் அமைப்புகள், மற்றும் தனியார் விதை உற்பத்தி நிறுவனங்களுக்கு விதித்துரைத்தல் மற்றும் வசதிகளை வழங்கல்.<br><br>**கருத்து:**<br>விவசாய நடவடிக்கைகளுக்காக இந்த வசதிகள் யாருக்கு வழங்கப்படலாம் என்பது இப் பணியின் கீழ் | 2003ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க விதைச் சட்டம் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றின் தரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களக்கு ஏற்பாடு செய்வதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>• உயர் தரத்திலான விதை மற்றும் நடுகைப்பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுநெறிகளைத் தாபித்தல், விதைகளை உற்பத்தி செய்தல் மற்றும் கமக்காரர்களுக்கு விநியோகித்தல் தொடர்பான அனைத்து கருமங்கள் பற்றியும் அமைச்சருக்கும் வேறு இயைபான அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கல் உட்பட்ட பணிகளைக் கொண்டுள்ள தேசிய விதைப் பேரவையினை இச் சட்டம் |

| | | |
|---|---|---|
| | குறித்துரைக்கப்படவில்லை: விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அது விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்படலாமா? அல்லது பாதுகாப்பு படைகள் போன்ற ஏனைய அமைப்புக்களுக்கும் வழங்கப்படலாமா? | தாபிக்கின்றது [பிரிவுகள் 6(அ) மற்றும் (இ)].<br>• விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களுக்கான தேவைகளை அடையாளம் காணுதலும் தரமான விதைகளையும் நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியின் ஏற்பாட்டீற்கு வசதியளித்தல், தனியார் துறை விதைத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யுமுகமாக பொதுத்துறை முகவர் நிலையங்களிடையே ஒருங்கிணைத்தல் மற்றும் நிதி மற்றும் ஆள்வலு மூலவளங்களைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றை பேரவையின் அதிகாரங்கள் உள்ளடக்கும். |

## முடிவுரை

மேலே தெளிவுபடுத்திக்காட்டப்பட்டதைப் போல, செயலணிக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை ஏற்பாடுசெய்கின்ற பல சட்டங்கள் ஏற்கனவே உள்ளன, அதே நேரத்தில் செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் உண்மையில் அதிகார வரம்பு மீறலாக இருக்கலாம். அத்தகைய விரிவான ஆணையைக் கொண்ட ஒரு செயலணியினை நிறுவுவதற்கு உறுப்புரை 33(2)இல் சார்ந்திருக்க முடியுமா என்ற கேள்விகள் ஒரு அடிப்படை மட்டத்தில் எழுப்பப்பட வேண்டும். செயலணியால் ஆணையிடப்பட்ட நடவடிக்கைகளின் சட்டவலிதுடைத்தன்மை மற்றும் சட்டப்பூர்வத்தன்மை பற்றிய கேள்விகளை எழுப்பக்கூடும் என்பதாலும், எதிர்வுகூறாத பின்விளைவுகளை உள்ளடக்கியிருக்கலாம் என்பதாலும் இவை தொடர்பில் அவசர கவனம் எடுத்தல் தேவைப்படுகின்றது.

கொவிட்-19 நெருக்கடியை திறமையாகவும் விரைவாகவும் கையாள்வது அவசியமாகவிருப்பினும், கண்மூடித்தனமாக ஏகாதிபத்திய ஆட்சியை நோக்கி நகர்வதை அது நியாயப்படுத்தாது.

எதிர்கால அவசரகாலநிலைகளை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள் நிறுவப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்யும் கட்டமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்ட தன்மையுடனான, அவசரகாலநிலைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பதிலும் கையாளுவதிலும் இலங்கை பல

வருட அனுபவத்தினைக் கொண்டுள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் தேவை உறுதிப்படுத்தப்பட்ட கடந்த கால நிகழ்வுகளிலிருந்தும் பாடங்கள் கற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே, மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், தற்போதைய அவசரகாலநிலையை வினைத்திறனுடன் கையாளுவதற்கும், தற்போதைய சூழலில் தேவைப்படும் வேறு எந்த நடவடிக்கைக்கும் தேவையான நிதியை வழங்குவதற்கும், பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவது மிக முக்கியமானது.

**பின்னிணைப்பு III**

## சுருக்க வழிகாட்டி 3
## கொவிட்-19க்கு பதில் ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
21 சித்திரை 2020

குறிப்பிட்ட நேரங்களில் மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று தேவைப்படுத்துகின்ற அரசாங்க ஒழுங்குமுறைவிதி என்று பொதுவாக புரிந்து கொள்ளப்படுகின்ற ஊரடங்குச் சட்டம், பொது சுகாதாரம், தேசிய பாதுகாப்பு, பொது பாதுகாப்பு மற்றும் அத்தகைய நோக்கங்களை உறுதி செய்தல் போன்ற ஒரு பாரிய பொது நோக்கத்திற்காக நடமாடுவதற்கான சுதந்திரமாகிய அடிப்படை உரிமையினைக் கட்டுப்படுத்தும் ஒரு வழிமுறையாகும். அத்தகைய கட்டுப்பாடுகள் அனுமதிக்கப்பட்டாலும், அவை சட்ட மற்றும் விகிதாசாரக் கோட்பாடுகளுக்கு அமைவானவையாக இருக்க வேண்டும். இலங்கையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்துகின்ற அதிகாரம் நிறைவேற்று சனாதிபதி மற்றும் பொலிஸாரினால் பிரயோகிக்கப்படுகின்றது.

20 பங்குனி 2020 அன்று, இலங்கை அரசாங்கம் 'ஊரடங்குச் சட்டத்தை' அமுல்படுத்துவதற்கான பொது அறிவிப்பை வெளியிட்டது. பொது சுகாதார அவசரகாலநிலை காரணமாக நடமாடுகின்ற சுதந்திரத்தின் மீது இத்தகைய கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான காரணம் கேள்விக்குட்படுத்தப்படவில்லை என்றாலும், அத்தகைய "ஊரடங்குச் சட்டத்தை" அறிவிப்பதற்கான சட்ட வரைச்சட்டத்தை வழங்குவதற்கு ,அரசாங்கம் தவறிவிட்டது மட்டுமல்லாமல், இதன் காரணமாக, அதனுடைய சட்டவலிதுடைத்தன்மை பற்றிய கேள்விகளையும் எழுப்பியுள்ளது.[137] தற்போதுள்ள 'ஊரடங்குச் சட்டம்' தொடர்பான சுருக்கமான காலவரிசை பின்வருமாறு.

→ 18 பங்குனி 2020: புத்தளம் மாவட்டம் மற்றும் நீர்கொழும்பிலுள்ள கொச்சிக்கடை பொலிஸ் பிரிவில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம்.[138]

---

[137] கொவிட் 19 தடுப்புக்காக விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளை மீறுவதைத் தடுக்கும் நோக்கில் நாடு முழுவதும் 'பொலிஸ் ஊரடங்குச் சட்டம்' அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சட்ட அடிப்படை மேற்கோள் காட்டப்படவில்லை. பார்க்கவும், "ஊடக அறிக்கை 2020.03.20" (அரசாங்க தகவல் திணைக்களம், 2020) <https://www.dgi.gov.lk/news/press-releases-sri-lanka?start=5> 15 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[138] புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு-கொச்சிக்கடை ஆகிய இடங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்" (*Adaderana.lk*, 2020) 2021 <http://www.adaderana.lk/news.php?nid=61497> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

→ 19 பங்குனி 2020: ஜா-எல மற்றும் வத்தளை பொலிஸ் பிரிவுகளுக்குள் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு-கொச்சிக்கடை ஆகிய இடங்களில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் தற்காலிகமாக நீக்கப்படும்.[139]

→ 20 பங்குனி 2020: 23 பங்குனி 2020 வரை நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு.[140]

→ 23 பங்குனி 2020: நாட்டில் விதிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் 8 மாவட்டங்களைத் தவிர 8 மணிநேரத்திற்கு தற்காலிகமாக நீக்கப்பட்டது.[141]

→ 24 பங்குனி 2020: 8 மாவட்டங்களில் விதிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் 8 மணிநேரத்திற்கு தற்காலிகமாக நீக்கப்பட்டது. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள் கொவிட்-19 அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக இனங்காணப்பட்டதோடு, அந்த மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை தொடரும்.[142]

→ 30 பங்குனி 2020: 6 மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டது.[143]

→ 6 சித்திரை 2020: 6 மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் 8 மணிநேரத்திற்கு ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டது.[144]

→ 7 சித்திரை 2020: ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு (PMD) ஊரடங்கு உத்தரவு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான புதிய விதிமுறைகளைக் குறிப்பிடும் சுற்றறிக்கையை வெளியிடுவதாக அறிவித்தது.[145][146]

→ 9 சித்திரை 2020: 19 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டது.[147]

→ 16 சித்திரை 2020: 19 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டது.[148]

---

[139] புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு-கொச்சிக்கடை ஆகிய இடங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்படும்" (*Adaderana.lk*, 2020) 2021 < http://www.adaderana.lk/news.php?nid=61526> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[140] திங்கட்கிழமை வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=61577> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[141] "8 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்கு தற்காலிகமாக நீக்கம்" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=61707> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[142] "கொவிட்-19 ஆபத்து அதிகமுள்ள வலயங்களாக கொழும்பு, கம்பஹா களுத்துறை மாவட்டங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன, மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=61771> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[143] "ஆறு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்கு உத்தரவு தற்காலிகமாக நீக்கப்பட்டது" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=62017> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[144] "6 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு மறு அறிவிப்பு வரும் வரை தொடரும்" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=62269> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[145] "ஊரடங்கு உத்தரவு அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற்கான புதிய விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=62368> 14 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[146] "ஊரடங்கு உத்தரவு அனுமதிச் சீட்டு அறிவுறுத்தல்கள்" (*www.police.lk*, 2020) https://drive.google.com/file/d/1pctm6WXKu2FJaf7axPiQDs6KNErX4nmg/view, 9 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

[147] 19 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு தற்காலிகமாக நீக்கம் (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=62420> 15 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

→ 19 சித்திரை 2020: பல மாவட்டங்கள் மற்றும் பொலிஸ் பிரிவுகளில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை தளர்த்த அரசாங்கம் தீர்மானித்தது.[149]
→ 20 சித்திரை 2020: சித்திரை 22ஆம் தேதி (4 மாவட்டங்களில்) தளர்த்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு சித்திரை 27ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.[150]

இந்த வழிகாட்டியை எழுதும் நேரத்தில், அரசாங்கம் சில பகுதிகளில் தற்போது நடைமுறையில் உள்ள 'ஊரடங்குச் சட்டத்தை' தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை அறிவித்தது[151], இருப்பினும் கூறப்பட்ட 'ஊரடங்குச் சட்டத்தை' விதிக்கும் போது பயன்படுத்திய சட்ட வரைச்சட்டத்தினைப் பற்றிய எந்தத் தகவலும் இன்னும் பகிரங்கமாகக் கிடைக்கப்பெறவில்லை. இந்த தகவல் இல்லாத நிலையில், 'ஊரடங்கு உத்தரவு' சட்டவலிதுடையதா என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஊரடங்குச் சட்டத்தை மீறியதற்காக கைது செய்யப்பட்ட 33,155[152] பேர் மீது வழக்குத் தொடர முயற்சித்தால், இது பகிரங்க அதிகாரிகளுக்கு பல சிரமங்களை ஏற்படுத்தும் என்பதோடு, எதிர்வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில் ஊரடங்கு உத்தரவைத் தொடரவும் / விதிக்கவும் வேண்டிய தேவை ஏற்படின் மேலதிக கரிசணைகளையும் எழுப்பும்.

.

இந்த வழிகாட்டியில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) ஊரடங்குச் சட்டத்தினை விதித்தல் தொடர்பான சட்ட வரைச்சட்டத்தினையும், அவதானம் தேவைப்படுகின்ற தொடர்புடைய கேள்விகள் தொடர்பில் சுருக்கமாக ஆராய்கிறது. கொவிட்-19 பெருந்தொற்றினை எதிர்த்துப் போராடுவதற்கு நடமாடும் சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்துதல் உட்பட சில ஏற்பாடுகள் தேவை என்று CPA குறிப்பிடும் அதே வேளையில், எடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரைச்சட்டத்திற்கு இணங்குவது மிக முக்கியமானது.

---

148 "19 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு மாலை 4 மணி வரை தற்காலிகமாக தளர்த்தப்பட்டுள்ளது" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=62672> 18 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது.

149 "பல மாவட்டங்கள் மற்றும் பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும்" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news.php?nid=62771> 18 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது.

150 ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு சட்டம் வெள்ளிக்கிழமை, சித்திரை 24ஆம் திகதி வரை இரவு 8.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை அமுலில் இருக்கும். பார்க்க, "கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் 27 சித்திரை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது" (*Adaderana.lk*, 2020) <http://www.adaderana.lk/news/62818/curfew-in-colombo-gampaha-kalutara-puttalam-districts-extended-till-april-27> 20 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது.

151 பொது வாழ்வில் இயல்பு நிலையை மீட்டெடுக்க ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது - ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு" (ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு, 2020) <http://www.pmdnews.lk/curfew-regulations-relaxed-to-restore-normalcy-in-civilian-life/> 19 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது.

152 20 பங்குனி 2020 முதல் (19.04.2020 அன்று காலை 6 மணி வரை) ஊரடங்குச் சட்டத்தை மீறியதற்காக கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. பார்க்க, "இலங்கை: கடந்த 24 மணி நேரத்தில் ஊரடங்கு உத்தரவை மீறியதற்காக 1,475 பேரை போலீசார் கைது செய்தனர்" (Colombopage.com, 2020) <http://www.colombopage.com/archive_20A/Apr19_1587309025CH.php> 20 சித்திரை 2020 அன்று அணுகப்பட்டது.

**நிறைவேற்று சனாதிபதியினால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம்**

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்திலும்[153] பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்திலும்[154] குறிப்பிடப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதை 'ஜனாதிபதியின் சிறப்பு அதிகாரம்' என்று பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம் குறிப்பிடுகிறது.[155] ஊரடங்கு சட்டத்தை வெளிப்படையாக அங்கீகரிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் 16ஆவது பிரிவு, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம், ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள நபர்கள், குறிப்பிட்ட நேரங்களுக்கு இடையில் பொது இடங்களில் இருப்பதை, கட்டளையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அத்தகைய நபரால் வழங்கப்பட்ட எழுத்துமூலமான அனுமதியின் கீழ் சனாதிபதி தடைசெய்யலாம் என எற்பாடு செய்கின்றது. அத்தகைய உத்தரவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான நடைமுறைத் தேவையை பூர்த்தி செய்யும் போது ஊரடங்கு உத்தரவை விதிக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை இந்த பிரிவு தெளிவாக அங்கீகரிக்கிறது. அத்தகைய உத்தரவை மீறுவது அபராதம் மற்றும்/அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாகும் என இப் பிரிவு மேலும் ஏற்பாடு செய்கின்றது.

பிரிவு 16

*(1) ஏதேனும் பிரதேசத்தில் பொது ஒழுங்கின் பராமரிப்பிற்கு அவசியம் எனக் கருதும் போது, சனாதிபதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆணையின் மூலம், அவ் ஆணையின் மூலம் அல்லது இப் பகுதியின் கீழான ஏதேனும் பின்வரும் ஆணை மூலம், விதிவிலக்கிற்கு உட்பட்டு, ஆணையால் குறித்துரைக்கப்பட்டுள்ள காலங்களுக்கு இடையில் அப் பிரதேசத்தில உள்ள எந்த ஒரு நபரும், ஏதேனும் பொதுப்பாதை, புகையிரத நிலையம், பொது பூங்கா, பொது பொழுதுபோக்கு நிலையம் அல்லது பிற பொது நிலையம், அல்லது கடற்கரை என்பவற்றில் ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நபர் ஒருவரால் வழங்கப்பட்ட எழுத்து மூலமான அனுமதியுள்ள அதிகாரம் அற்று இருத்தல் ஆகாது.*

*(3) இந்தப் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆணையினை யாரேனும் மீறினால், அவர் ஒரு குற்றம் ஒன்றினை புரிந்தவராக இருப்பார், நீதவான் முன்னிலையிலான சுருக்க விசாரணைக்குப் பிறகு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஒரு மாதத்திற்கு மேற்படாத கடூழிய சிறைத்தண்டனைக்க அல்லது நூறு ரூபாய்க்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய சிறை தண்டனை மற்றும் அபராதம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.*

[153] சனநாயக, சோசலிஸ இலங்கைக் குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு. இதனகத்துப் பின்னர் அரசியலமைப்பு எனக் குறிப்பிடப்படும்.

[154] 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்

[155] 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பகுதி III

தேவைப்படுத்தப்பட்டவாறு ஆணையொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன், அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்கு செயல்பாட்டில் இருக்கும். ஆனால் அத்தகைய கால எல்லை முடிவடைவதற்கு முன்பு அவ் ஆணையானது இரத்துசெய்யப்படலாம் அல்லது அந்தக் கால எல்லை முடிவடையும் தருணத்தில் அல்லது முடிவடைவதற்கு முன்னர் மேலதிக உத்தரவு பிறப்பிக்கப்படலாம்.[156]

மிக முக்கியமாக, பிரிவு 21 இன் உபபிரிவு (2), அவசரகால நிலைப் பிரகடனம் பாராளுமன்றத்திற்கு எவ்வாறு தெரிவிக்கப்பட வேண்டுமோ[157] அதனை ஒத்த முறையில் அத்தகைய ஆணை பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும், என ஏற்பாடு செய்கின்றது.

பிரிவு 21(2)

*(2) பிரிவு 2இன் உபபிரிவு 3இன் பிரிவுகள் அவ்வாறு பிரிவு 12, பிரிவு 16 அல்லது பிரிவு 17 என்பவற்றின் கீழ் ஆக்கப்படும் ஆணை ஒன்றின் மீது, பிரிவு 2இன் உபபிரிவு (1)இன் கீழ் ஆக்கப்பட்ட பிரகடனம் ஒன்றின் மீது பிரயோகிக்கப்படும் விதத்தில் பிரயோகிக்கப்படும்.*

16ஆவது பிரிவின் அடிப்படையில் ஊரடங்குச் சட்டத்தை விதிப்பதற்கான ஆணை, அவசரகால ஒழுங்கு விதிமுறைகளை செயற்பாட்டுக்குக் கொண்டுவரும் போது செய்யப்படுகின்ற பிரகடனத்திற்குப் பொருந்தக்கூடிய நடைமுறையை [பிரிவு 2(3)] பின்பற்ற வேண்டும் என்று மேலே உள்ள ஏற்பாடுகள் தெரிவிக்கின்றன.

பிரிவு 2(3)

*(3) இப் பிரிவின் முந்தைய பிரிவுகளின் கீழ் பிரகடனம் ஒன்று ஆக்கப்படும் போது அத்தருணம் உடன் பாராளுமன்றத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் ஏதேனும் வகையில் ஒத்தி வைக்கப்பட்டிருப்பின் அல்லது பத்து நாட்களுள் முடிவுறாத கூட்டத்தொடர் நீட்டிப்பு காணப்படின் பத்து நாட்களுள் பாராளுமன்ற கூட்டத்திற்கான ஆணை ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் பிரகடனத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் அவ்வாறே பாராளுமன்றம் கூடி, ஒத்திவைக்கப்பட்டு அல்லது நீட்டிக்கப்பட்டு இருந்தவாறு தொடரப்பட வேண்டும்.*

இதன்பிரகாரம், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சனாதிபதியின் ஆணை, வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதும், அதன் பின்னர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுவதும்

---

[156] 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21

[157] 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2இனால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. எவ்வாறாயினும், 2020 பங்குனியில் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு தொடர்பாக அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எந்த அறிகுறியும் இல்லை.

(சுதந்திரமாக நடமாடும் உரிமை உட்பட) தனிநபர் உரிமைகளை அவசரகாலச் சூழ்நிலை என்று அழைக்கப்படும் காலப்பகுதிகளின் போது கட்டுப்படுத்தும் வழிமுறையாக பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 16இற்கு மேலதிகமாக, அவசரகாலச் சட்டங்களை முன்னைய அரசாங்கங்கள் பயன்படுத்தியுள்ளன.

பொதுப் பாதுகாப்பின் நலன்களுக்காக பொருத்தமானது அல்லது அவசியமானது என அவர் கருதும் சந்தர்ப்பங்களில் அவசரகால ஒழுங்குவிதிமுறைகளை உருவாக்குவதற்கு சனாதிபதிக்கு அரசியலமைப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.[158][159] பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடி அவசரகால ஒழுங்குவிதிமுறைகளை வெளியிடும் அதிகாரத்தினை அரசியலமைப்பின் உறுப்புரை 155 சனாதிபதிக்கு வழங்குகிறது.

இந்த ஒழுங்குமுறைகள், அரசியலமைப்பின் ஏற்பாடுகளைத் தவிர, எந்தவொரு சட்டத்தின் செயற்பாட்டையும் ஒதுக்கித்தள்ளல், திருத்துதல் அல்லது இடைநிறுத்தி வைத்தல் போன்ற சட்டரிதியான விளைவைக் கொண்டிருக்கின்றன.[160] எவ்வாறாயினும், நாட்டில் அவசர நிலையை கொண்டு வருகின்ற ஒரு பிரகடனத்தை மேற்கொள்ளுகின்ற சந்தர்ப்பத்தினைத் தவிர வேறு சந்தர்ப்பங்களில் அத்தகைய அவசரகால ஒழுங்குவிதிமுறைகள் செயற்பாட்டுக்கு வராது.[161]

உறுப்புரை 155(3)

*ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை ஒதுக்கித்தள்ளுகின்ற, திருத்துகின்ற, இடைநிறுத்திவைக்கின்ற சட்டப்பயனைக் கொண்ட அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு சனாதிபதிக்குத் தத்துவமளிப்பதும், பொதுமக்கள் பாதுகாப்பு பற்றியதும் ஆன ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டத்தின் கீழானதும் அத்தகைய செயற்பாடுகளை நடைமுறைக்கு கொண்டுவருவதுமான ஒரு பிரகடனத்தைச் செய்ததன் மேல் தவிர நடைமுறைக்கு வரலாகாது.*

[158] 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பகுதி II, பிரிவு 5

[159] பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(2) சனாதிபதியால் உருவாக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிமுறைகளின் பட்டியலைக் குறித்துரைக்கின்றது. இந்தப் பட்டியலில் 'ஊரடங்குச் சட்டம்' வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை எனினும், அவசரகாலச் சட்டங்களை உருவாக்குவதற்கான சனாதிபதியின் அதிகாரங்களின் பொதுவான தன்மைக்கு இந்தப் பட்டியல் எந்தப் பாதகத்தையும் ஏற்படுத்தாது எனவும் இப் பிரிவு ஏற்பாடு செய்கின்றது.

[160] அரசியலமைப்பின் உறுப்புரை 155(2)

[161] அரசியலமைப்பின் உறுப்புரை 155(3)

அத்தகைய பிரகடனமொன்று மேற்கொள்ளப்பட்டவுடன் அது பற்றி பாராளுமன்றத்திற்கு தெரிவிக்கவேண்டும்.[162] அத்தகைய பிரகடனத்தை வெளியிடும் போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலும் கூட, பிரகடனம் கூட்டத்திற்கான முந்தைய தேதியொன்றினை நியமிக்காத பட்சத்தில், அத்தகைய பிரகடனம் மேற்காள்ளப்பட்டதிலிருந்து பின்னரான பத்தாவது நாளில் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.[163] இப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும், தவறினால் பிரகடனம் காலாவதியாகிவிடும்.[164] மேற்கொள்ளப்பட்ட பின்னர், அத்தகைய பிரகடனம், சனாதிபதி அதை முன்னதாக ரத்து செய்யவில்லை என்றால், ஒரு மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும்.[165]

அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் சனாதிபதி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசரகால நிலை பிரகடனம் ஒன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. அரசாங்கம் அவ்வாறான படிமுறைகளைப் பின்பற்றாத காரணத்தினால், 20 பங்குனி 2020ஆம் திகதியன்று அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம், அவசரகால ஒழுங்குவிதிமுறைகளை வெளியிடும் சனாதிபதியின் அதிகாரத்தை மேற்கோள் காட்ட முடியாது.

**பொலிஸ் ஊரடங்குச் சட்டம்**

ஊரடங்கு உத்தரவை விதிக்க பொலிஸிற்கு சட்டப்பூர்வமாக அதிகாரம் அளிக்கும் வெளிப்படையான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லை. எவ்வாறாயினும், அவசரகால சூழ்நிலைகளின் போது இலங்கையில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் என்கின்ற விடயம் அடிக்கடி நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. பொலிஸ் ஊரடங்கு உத்தரவு என்பது தொடர்பிலான கருத்தேற்பு தொடர்பில் வெளிப்படையான கருத்தேற்பு எதுவும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் இல்லை. ஆனால் இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 261 மற்றும் 262 பொது மக்களின் பாதுகாப்புக்கான உரிமையினை அங்கீகரிக்கும் 'பொது இடையூறுகளை' குறித்துரைக்கின்றன.

**பிரிவு 261** பொது மக்களுக்கு அல்லது அயலில் வசிக்கின்ற அல்லது அயலிலுள்ள ஆதனத்தில் வசிக்கும் அல்லது இருக்கும் பொதுவான மக்களுக்கு, ஏதாவதொரு பொதுவான தீங்கு, அபாயம், அல்லது எரிச்சலை விளைவிக்கும் அல்லது ஏதாவதொரு பொது உரிமையைப் பயன்படுத்த வாய்ப்பு உள்ள நபர்களுக்கு தீங்கை, தடையை, அபாயத்தை அல்லது எரிச்சலை கட்டாயமாக விளைவிக்கக்கூடிய ஏதாவதொரு செயலைச் செய்யும் அல்லது சட்டவிரோத செய்வன செய்யாமை குற்றம் புரியும் ஒரு நபர், பொதுத் தொல்லை

[162] அரசியலமைப்பின் உறுப்புரை 155(4)
[163] அரசியலமைப்பின் உறுப்புரை 155(4)(i)
[164] அரசியலமைப்பின் உறுப்புரை 155(6)
[165] அரசியலமைப்பின் உறுப்புரை 155(5)

புரிந்த குற்றவாளியாகிறார். ஏதாவதொரு வசதி அல்லது அனுகூலத்தை விளைவிக்கிறது என்ற காரணத்துக்காக ஒரு பொதுத் தொல்லை மன்னிக்கப்படலாகாது.

**பிரிவு 262** எவரேனும், உயிருக்கு ஆபத்தான ஏதாவதொரு நோயைத் தொற்றுதலால் அநேகமாக பரப்பும் என்றிருக்கிற மற்றும் அவருக்கு தெரிந்தே அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணமிருக்கிற சட்டத்துக்குப் புறம்பான அல்லது கவனக்குறைவான ஏதாவதொரு செயலைச் செய்தால், ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்படக்கூடிய ஒரு கால அளவிலான, ஏதாவதொரு வகையிலான சிறைத்தண்டணைக்கு, அல்லது அபராதத்துக்கு அல்லது இரண்டுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

கொவிட்-19 பெருந்தொற்றின் அதிகரித்த தொற்றும் தன்மையினைக் கருத்திற்கொண்டு, பொது இடங்களில் தொடர்ந்து நீடித்திருத்தல் ஏனையோரின் உடல்நலம்/உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்கின்ற நியாயமான முடிவுக்கு வரலாம். ஆனால், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொலிஸிற்கு வழங்கப்பட்ட அதிகாரமாக இதனைக் கருத முடியாது.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 56ஆவது பிரிவு, பொதுத் தொல்லைகளைத் தடுப்பதற்குத் தனது சிறந்த முயற்சிகளையும் திறனையும் பயன்படுத்துவது ஒவ்வொரு பொலிஸ் அதிகாரியினதும் கடமை என்று கூறினாலும், ஒரு பிரதேசத்தினுள் நடமாடும் உரிமையை மீறுகின்ற விதிமுறைகளை உருவாக்குவதற்கான அதிகாரங்களைப் பற்றி கட்டளைச் சட்டம் குறிப்பிடவில்லை.

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான வெளிப்படையான அதிகாரங்கள் காணப்படாத நிலையில், “பொலிஸ் ஊரடங்கு உத்தரவு“ என்ற வழக்காற்று நடைமுறை எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்பட வேண்டும். தற்போதைய ‘ஊரடங்குச் சட்டம்’ இதை முன்னிறுத்தி அமுல்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் அவதானம் தேவை.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், ஒரு பொலிஸ் அதிகாரி, அத்தகைய உத்தரவை மீறுகின்ற, மீறிய குற்றத்தைச் செய்ததாகவோ அல்லது, மீறுகின்றார் அல்லது மீறினார் எனச் சந்தேகிக்க நியாயமான காரணங்களை கொண்டுள்ள போது அந் நபரினை பிடியாணை இன்றி கைது செய்ய முடியும்.[166] ஆனால் இது ஏற்புடையாவதற்கு, (மேலே கலந்துரையாடப்பட்ட) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

[166] 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 18

**கொவிட்-19இன் போது பிற சட்டங்களால் உரிமைகள் மீதான தாக்கம்**

மேற்கூறியவற்றைத் தவிர, கொவிட்-19 போன்ற பொது சுகாதார நெருக்கடி சூழ்நிலைகளில் ஏனைய சட்டங்களும் தனிநபர் உரிமைகளைத் தடுக்கலாம்.

இலங்கையில் எந்தவொரு நோய்த்தொற்று ஏற்படுவதை அல்லது பரவுவதைத் தடுக்கும் நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவசியமானதாக கருதக்கூடிய ஒழுங்குவிதிமுறைகளை உருவாக்கலாம், இரத்துச் செய்யலாம் அல்லது மாற்றலாம் என்று தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டம் ஏற்பாடுசெய்கின்றது.[167] கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3, அமைச்சரால் எவ் ஒழுங்குவிதிமுறைகள் உருவாக்கப்படலாம் என்பது குறித்த விடயங்களை பட்டியலிடுகிறது. இருப்பினும், பட்டியலில் உள்ள எதுவும் ஊரடங்கு உத்தரவை விதிக்கவோ அல்லது பொது மக்களின் நடமாடும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தவோ எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை. எனவே, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலான எவ்வித சட்ட அடிப்படையையும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாகக் காண முடியாது.

**தற்போதைய நிலை**

பெருந்தொற்றினை எதிர்கொள்ள சில நடவடிக்கைகள் தேவைப்பட்டாலும், 'ஊரடங்குச் சட்டம்' சட்டப்பூர்வமாக விதிக்கப்பட்டதா என்று வினவுவது அவசியமானது. இதை எழுதுகின்ற சந்தர்ப்பத்தில், அரசியலமைப்பின் 155ஆவது உறுப்புரையின்படி எந்தவொரு அவசரகால விதிமுறைகளையும் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 16 வது பிரிவின்படி வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, 20 பங்குனி 2020 அன்று விதிக்கப்பட்டு, பின்னர் நீட்டிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் சட்டவலிதுடைத் தன்மை குறித்து கேள்விகள் எழுப்பப்பட வேண்டும். 'ஊரடங்குச் சட்டத்திற்கு' சட்டவலிதுடைத் தன்மை காணப்படாத நிலையில், அவ் 'ஊரடங்குச் சட்டத்தை' சார்ந்திருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் சட்டபூர்வமான தன்மையும் கேள்விக்குறியாகிவிடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பிடத்தக்க பின்விளைவுகளுடன், அரசாங்கம் 'ஊரடங்குச் சட்டத்தின்' அடிப்படையை பகிரங்கமாகக் கூறுவதும், கொவிட்-19இனை எதிர்கொள்வதற்குத் தேவையான ஊரடங்கு உத்தரவு மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரைச்சட்டத்திற்கு இணங்க எடுக்கப்படுவதை உறுதி செய்வதும் விவேகமானதாகும். கொவிட்-19 காரணமாக விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் சட்ட அடிப்படையைப் புரிந்துகொள்வதில் ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளை பின்வரும் அட்டவணை வழங்குகிறது.

---

[167] 1897ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2

| மூலம் | பொருத்தமான சட்ட ஏற்பாடு |
|---|---|
| அரசியலமைப்பு | உறுப்புரை 76(2)<br><br>*76. (1) பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற்றத்துவத்தை துறத்தலோ, எந்த விதத்திலும் பராதீனப்படுத்துதலோ ஆகாது என்பதுடன், ஏதேனும் சட்டமாக்கற்றத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுதலுமாகாது.*<br><br>***(2) பொது மக்கள் பாதுகாப்பு பற்றிய ஏதேனும் சட்டத்திற்கு இணங்க அவசரகால விதிகளை ஆக்குவதற்கு சனாதிபதிக்குத் தத்துவமளிக்கின்ற ஏற்பாடுகளை அத்தகைய பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய சட்டத்தில் பாராளுமன்றம் செய்வது, இவ் உறுப்பரையின் (1)ஆம் பந்தியின் ஏந்பாடுகளை மீறுவதாகாது.***<br><br>உறுப்புரை 155<br>*(1) அரசியலமைப்பத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலிருக்கின்ற திருத்தப்பட்டவாறான பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம், பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*<br><br>*(2) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ளதான சட்டத்தின் கீழ் அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவமானது, அரசியலமைப்பினது ஏற்பாடுகள் தவிர்ந்த ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை ஒதுக்கித்தள்ளுகின்ற, திருத்துகின்ற அல்லது இடைநிறுத்திவைக்கின்ற சட்டப்பயன் கொண்ட ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.*<br><br>*(3) ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளை ஒதுக்கித்* |

| | |
|---|---|
| | *தள்ளுகின்ற, திருத்துகின்ற அல்லது இடைநிறுத்தி வைக்கின்ற சட்டப்பயனைக் கொண்ட ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குச் சனாதிபதிக்கத் தத்துவமளிப்பதும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றியதுமான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டத்தின் கீழானதும் அத்தகைய ஏற்பாடுகளை நடைமுறைக்க கொண்டுவருவதுமான ஒரு பிரகடனத்தைச் செய்ததன் மேல் தவிர, நடைமுறைக்கு வரலாகாது.*<br><br>*(4) அத்தகைய ஒரு பிரகடனஞ் செய்யப்பட்டதன் மேல், அதனைச் செய்தமைக்கான சந்தர்ப்பம் பற்றி, இவ் உறுப்பரையின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமையஈ பாராளுமன்றத்துக்கு உடனடியாக அறிவிக்க வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க -*<br><br>*(i) அத்தகைய பிரகடனம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டதால், பாராளுமன்றம் கூடுதவற்கென முன்னரான ஒரு தேதியை அப்பிரகடனம் நியமித்தாலொழிய (இத் தேதி பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறையாத தேதியாக இருக்கும்) அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து பத்தாம் நாளன்று கூடும்படி பாராளுமன்றத்தினை அழைப்பதாக அத்தகைய பிரகடனம் தொழிற்பட வேண்டும். அவ்வாறு கூடும்படி அழைக்கப்பட்ட பாராளுமன்றமானது, அத்தகைய பிரகடனம் அல்லது அதற்கடுத்த வேறு ஏதேனும் பிரகடனம் அற்றுப்போகும்வரை அல்லது ஒழிக்கப்படும்வரை அல்லது பொதுத்தேர்தல் முடிவுறும்வரை, இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதுவரையில், அமர்விலிருத்தல் வேண்டுமென்பதுடன் அதன்மேல் கலைந்துவிடுதல் வேண்டும்;*<br><br>*(ii) அத்தகைய பிரகடனஞ் செய்யப்படும் தேதியன்று, பாராளுமன்றம்ஈ பத்து நாட்களுக்குள் அற்றுவிடாத அத்தகைய ஏதேனும்* |

| | |
|---|---|
| | ஒத்திவைத்தலினால் அல்லது அமர்வ நிறுத்துகையினால் கூடாதிருப்பின் பத்து நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட வேண்டும் என்று கூறும் பிரகடனமொன்று விடுக்கப்படுதல் வேண்டும்.<br><br>(5) பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அச் சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனத்தினை செய்வதன் மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பிரகடனம், இவ்வுறுப்புரையின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக்கு அமைய, அத்தகைய பிரகடனத்தினை செய்த தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குஈ ஆனால் அத்தகைய பிரகடனத்தை முன்னராகவே ஒழிப்பதற்கோ அக்காலம் முடிவடையும் போது அல்லது முடிவடையும் முன்னர் மேலும் ஒழு பிரகடனஞு செய்வதற்கோ பங்கமின்றி நடைமுறையிலிருத்தல் வேண்டும்.<br><br>(6) இவ் உறுப்புரையின் (3)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய ஏதேனுஞ் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகள், அத்தகைய சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனத்தினை செய்வதன் மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளவிடத்து அத்தகைய பிரகடனமானது பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய அத்தகைய ஏற்பாடுகள் எத்தேதியன்று நடைமுறைக்கு வந்திருக்குமோ அத் தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் கொண்ட காலத்தின் பின்னர் அத்தகைய பிரகடனமானது அற்றுப்போதல் வேண்டும்:<br><br>ஆயின் -<br><br>(அ) அத்தகைய பிரகடனஞ் செய்யப்பட்ட தேதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருப்பின்; அல்லது<br><br>(ஆ) பாராளுமன்றம், அத்தகைய தேதியில், இவ் |

| | |
|---|---|
| | *உறுப்பரையின் (4)(ii)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் ஒத்திவைத்தலினால் அல்லது அமர்வு நிறுத்துகையினால் கூடாதிருப்பின்; அல்லது*<br><br>*(இ) இவ் உறுப்புரையின் (4)(ii)ஆம், (4)(ii)ஆம் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கூடும்படி அழைக்கப்படும் போது பாராளுமன்றம் கூடாதுவிடின்;*<br><br>*அப்போது, அத்தகைய பிரகடனம் பாராளுமன்றம் அடுத்தமுறை கூடி அமரும் தேதியில் நடைபெறும் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய அவ்வாறு கூடிய தேதியிலிருந்து பத்து நாட்கள் முடிந்ததும் அற்றுப்போதல் வேண்டும்.*<br><br>*(7) பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ள தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் கொண்ட காலத்துக்குள் இவ் உறுப்புரையின் (6)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பிரகடனம் ஒழிக்கப்படுவதன் மேல், அல்லது (6)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகையதொரு பிரகடனம் அற்றுப்போவதன் மெல், அடுத்துவருகின்ற முப்பது நாட்களுக்குள் செய்யப்படுகின்ற பிரகடனம் எதுவும் அப் பிரகடனத்தைச் செய்வதற்கு பாராளுமன்றத் தீர்மானமொன்றினால் அங்கீகாரம் அளிக்கப்படும்வரை நடைமுறைக்கு வருதலாகாது.*<br><br>*(9) பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படும் போது அது கூடாத காரணத்தினால் ஒரு பிரகடனம் செய்யப்பட்டமை பற்றி பாராளுமன்றத்துக்கு அறிவிக்க முடியாமலும் அதனால் அங்கீகரிக்கப்படமுடியாமலுமிருப்பின் இவ் உறுப்புரையின் (6)ஆம் அல்லது (7)ஆம் பந்தியில் அடங்கியுள்ள எதுவும் அத்தகைய பிரகடனத்தின் செல்லுபடியை அல்லது செயற்பாட்டை* |

| | |
|---|---|
| | *பாதித்தலாகாது:*<br><br>*ஆயின், அத்தகைய சந்தர்ப்பத்தில், அதன் பின்னர் கூடிய விரைவில் பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படுதல் வேண்டும்.* |
| பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் | பிரிவு 5<br>*(1) பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அக்கறைகளைப் பேணவும், பொது ஒழுங்கைப் பாதுகாக்கவும், மற்றும் கிளர்ச்சி, கலவரம் அல்லது குடியியல் சச்சரவினை அடக்கவும், அல்லது சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை பேணுவதற்காக அவருக்குத் தேவையானதாக அல்லது பொருத்தமானதாகத் தோன்றுகின்ற போது இது போன்ற ஒழுங்குவிதிமுறைகளை குடியரசுத் தலைவர் (இனிமேல் "அவசரகால ஒழுங்குவிதிமுறைகள்" என்று குறிப்பிடப்படும்) உருவாக்கலாம்.*<br><br>*(2) முந்தைய துணைப்பிரிவால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பொதுவான தன்மைக்கு பாரபட்சம் இல்லாமல், அந்த துணைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்காகவும் சனாதிபதிக்கு அவசியமானதாகவோ அல்லது பொருத்தமானதாகவோ தோன்றும் சந்தர்ப்பங்களில் அவசரகால ஒழுங்குவிதிமுறைகள் -*<br>*(அ) நபர்களை தடுத்து வைப்பதற்கு அதிகாரமளிக்கலாம் மற்றும் ஏற்பாடு செய்யலாம்;*<br>*(ஆ) (i) அரசின் சார்பாக, ஏதேனும் சொத்து அல்லது தொழில் நிறுவனத்தை உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதற்கு; (ii) நிலத்தைத் தவிர வேறு எந்தச் சொத்தையும் அரசின் சார்பாக கையகப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம்;*<br>*(இ) எந்தவொரு வளாகத்திலும் நுழைவதற்கும் தேடுவதற்கும் அதிகாரமளிக்கலாம்;*<br>*(ஈ) எந்தச் சட்டத்தையும் திருத்துவதற்கும், எந்தச்* |

| | |
|---|---|
| | *சட்டத்தினுடைய செயற்பாட்டை இடைநிறுத்துவதற்கும், எந்தச் சட்டத்தை மாற்றத்துடன் அல்லது இல்லாமல் பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுசெய்யலாம்;*<br>*(உ) ஒழுங்குவிதிமுறைகளின் நோக்கங்களுக்காக எந்தவொரு உரிமம், அனுமதிப்பத்திரம், சான்றிதழ் அல்லது ஏனைய ஆவணங்களினை வழங்குதல் தொடர்பில் கட்டணம் விதிப்பதற்கு ஏற்பாடு செயதல், விதிமுறைகளால் அல்லது விதிமுறைகளின் கீழ் அத்தகைய கட்டணம் நிர்ணயிக்கப்படலாம்;*<br>*(ஊ) ஒழுங்குவிதிமுறைகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு மற்றும் ஊதியம் வழங்கலாம்;*<br>*(ப) குற்றவாளிகளை கைது செய்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும், இராணுவ நீதிமன்றங்கள் அல்லாத அத்தகைய நீதிமன்றங்களால் அவர்களை விசாரணை செய்வதற்கும், மற்றும் ஒழுங்குவிதிமுறைகளால் வழங்கப்படக்கூடிய அத்தகைய நடபடிமுறையின்படி, அத்தகைய நீதிமன்றங்களின் கட்டளைகள் அல்லது முடிவுகளிற்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கும் மற்றும் அத்தகைய மேல்முறையீடுகளினை விசாரணை செய்வதற்கும் முடிவுறுத்துவதற்குமான ஏற்பாடுகளை உருவாக்கலாம்.*<br><br>*(3) எந்தவொரு அவசரகால ஒழுங்குவிதிமுறையும் பாராளுமன்றத்தின் தீர்மானம் அல்லது இந்தப் பிரிவின் முந்தைய விதிகளின் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் சேர்க்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம் அல்லது ரத்துசெய்யப்படலாம்.* |
| பொலிஸ் கட்டளைச் சட்டம் | பிரிவு 56<br>*இந்த கட்டளைச் சட்டத்தில் உள்ள அனைத்து நோக்கங்களுக்காகவும் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரும் எப்போதும் கடமையில் இருப்பவர்களாகக் கருதப்பட வேண்டுமென்பதுடன், இலங்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பொலிஸ் அதிகாரியின் அதிகாரங்களைக் கொண்டிருக்கவும்* |

| | |
|---|---|
| | *வேண்டும்.*<br>*(அ) அனைத்து குற்றங்கள், குற்றச்செயல்கள் மற்றும் பொது தொல்லைகளைத் தடுக்க அவரது அதி சிறந்த முயற்சிகள் மற்றும் திறனைப் பயன்படுத்துதல்*<br>*(ஆ) அமைதியைக் காத்தல்*<br>*(உ) ஒழுங்கற்ற மற்றும் சந்தேகத்திற்கிடமான நபர்களைப் பிடித்தல்*<br>*(ன) குற்றவாளிகளைக் கண்டறிந்து நீதியின் முன் நிறுத்துதல்*<br>*(இ) பொது அமைதியைப் பாதிக்கும் உளவுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் வழங்குதல்; மற்றும்*<br>*(க) எந்தவொரு தகுதிவாய்ந்த அதிகாரியாலும் அவருக்கு சட்டப்பூர்வமாக வழங்கப்பட்ட மற்றும் பணிந்துரைக்கப்பட்ட அனைத்து உத்தரவுகள் மற்றும் ஆணைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்து செயல்படுத்தல் என்பவை அவருடைய கடமைகளாகும்.* |
| தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டம் | பிரிவு 2<br><br>*2. இலங்கையுள் ஏதேனும் நோயின் அறிமுகத்தினை தடுத்தல் மற்றும் இலங்கையின் உள்ளேயும் வெளியேயும் ஏதேனும் நோயின் பரவலைத் தடுத்தல் முதலான நோக்கங்களுக்காக காலத்திற்குக் காலம் ஒழுங்குவிதிமுறைகளை ஆக்கலாம், இரத்துச்செய்யலாம் அல்லது திருத்தலாம்.*<br><br>பிரிவு 3<br><br>*3(2) எப்பொழுதும் இந்த பிரிவில் உள்ள எதுவும்,*<br><br>*பிரிவு 2இன் கீழ் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பொதுவான தன்மையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்துவதாகவோ இப் பிரிவிலுள்ள ஏதேனும் ஏற்பாடுகள் பொருள்கோடல் செய்யப்படக்கூடாது.* |

| | |
|---|---|
| | *ஆனால், அத்தகைய அதிகாரங்கள், இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஒப்பான அல்லது ஒப்பற்ற இல்லாவிட்டாலும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான ஒழுங்குமுறைகளை உருவாக்குவது பொருத்தமானதாக இருக்கும் விதத்தில் அனைத்து விடயங்களுக்கும் நீட்டிக்கப்படும்.* |
| தண்டனைச் சட்டக்கோவை | **பிரிவு 261** பொது மக்களுக்கு அல்லது அயலில் வசிக்கின்ற அல்லது அயலிலுள்ள ஆதனத்தில் வசிக்கும் அல்லது இருக்கும் பொதுவான மக்களுக்கு, ஏதாவதொரு பொதுவான தீங்கு, அபாயம், அல்லது எரிச்சலை விளைவிக்கும் அல்லது ஏதாவதொரு பொது உரிமையைப் பயன்படுத்த வாய்ப்பு உள்ள நபர்களுக்கு தீங்கை, தடையை, அபாயத்தை அல்லது எரிச்சலை கட்டாயமாக விளைவிக்கக்கூடிய ஏதாவதொரு செயலைச் செய்யும் அல்லது சட்டவிரோத செய்வன செய்யாமை குற்றம் புரியும் ஒரு நபர், பொதுத் தொல்லை புரிந்த குற்றவாளியாகிறார். ஏதாவதொரு வசதி அல்லது அனுகூலத்தை விளைவிக்கிறது என்ற காரணத்துக்காக ஒரு பொதுத் தொல்லை மன்னிக்கப்படலாகாது.<br><br>**பிரிவு 262** எவரேனும், உயிருக்கு ஆபத்தான ஏதாவதொரு நோயைத் தொற்றுதலால் அநேகமாக பரப்பும் என்றிருக்கிற மற்றும் அவருக்கு தெரிந்தே அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணமிருக்கிற சட்டத்துக்குப் புறம்பான அல்லது கவனக்குறைவான ஏதாவதொரு செயலைச் செய்தால், ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்படக்கூடிய ஒரு கால அளவிலான, ஏதாவதொரு வகையிலான சிறைத்தண்டணைக்கு, அல்லது அபராதத்துக்கு அல்லது இரண்டுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். |

பின்னிணைப்பு 4

## வினாக்களும் பதில்களும்

## தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் இலங்கையில் கொவிட்-19இனை கையாளுவதில் இதனுடைய தாக்கம் எத்தகையது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)
6 கார்த்திகை 2020

இலங்கையில் பல புதிய கொவிட்-19 தொற்றுகள் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் (கட்டளைச் சட்டம்) இரண்டாம் மூன்றாம் பிரிவுகளின் கீழ் வியாழக்கிழமை, 15 ஐப்பசி 2020 தேதியிடப்பட்ட 2197/25ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சுகாதார அமைச்சரால் ஒழுங்குவிதிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வழிகாட்டி இவ் ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் கொவிட்-19 பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பிற நடவடிக்கைகள் தொடர்பான சட்ட வரைச்சட்டத்தினை சுருக்கமாக ஆராய்கிறது.

இலங்கையில் அரசியலமைப்பு ஆட்சிக்கு அமைவானதும் இலங்கையில் சட்டவாட்சியை நிலைநிறுத்தும் வகையிலானதுமான பெருந்தொற்றினைக் கையாள்வதற்கான முயற்சியின் முக்கியத்துவத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA) தொடர்ந்து வலியுறுத்தியுள்ளது. கொவிட்-19 உடன் தொடர்புடைய சட்ட மற்றும் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பான பல்வேறு ஆவணங்கள் CPAஇனால் முன்னர் வெளியிடப்பட்டுள்ளதுடன், அவற்றினை CPAஇனுடைய இணையதளத்தில் பெற்றக்கொள்ளலாம்.

1. இலங்கையில் கொவிட்-19 பரவலைத் தொடர்ந்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகள் யாவை?
    - வெள்ளிக்கிழமை, 20 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2167/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - 1925 மற்றும் 1960ஆம் ஆண்டு கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தற்போதுள்ள தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகள் கொவிட்-19 தொடர்பாக எடுக்கப்படும் நடபடிமுறைகளுக்குப் ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக கொவிட்-19 நோயினை தனிமைப்படுத்தற்குரிய நோயொன்றாக அறிவித்தல்
    - புதன்கிழமை, 25 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2168/6ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - முறையான அதிகாரி மற்றும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தல்.

- சனிக்கிழமை, 11 சித்திரை 2020 தேதியிடப்பட்ட 2170/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - கொவிட்-19இனால் இறந்துள்ள ஆளொருவரின் பூதவுடலின் கட்டாய தகனம்.
- வியாழக்கிழமை, 15 ஐப்பசி 2020 தேதியிடப்பட்ட 2197/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - நடமாட்டத்தின் மீதான மட்டுப்பாடும், பொது இடங்களில் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டிக்குறிப்புகளும்.

2. இந்த ஒழுங்குவிதிமுறைகள் சாதாரண குடிமக்களை எவ்வாறு பாதிக்கின்றன?
இந்த ஒழுங்குவிதிமுறைகள் சாதாரண குடிமக்களின் வாழ்வில் கீழ்க்கண்டவாறு நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன:
    - சமூக இடைவெளியை உறுதி செய்வதற்காக பொதுக் கட்டடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்திற்கான அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை விகிதங்கள் வரையறுக்கப்படலாம்.[168]
    - ஒரு முறையான அதிகாரி ஒரு மருத்துவமனை அல்லது கண்காணிப்பு இடத்தை நிறுவி நியமித்திருந்தால், எந்த ஒரு அங்கீகரிக்கப்படாத நபரும் அதனை அணுகவோ அல்லது அதனிலிருந்து நூறு யார் (yard) தூரத்திற்குள் வரவோ முடியாது.[169]
    - ஒரு முறையான அதிகாரி "ஏதேனுமொரு வீட்டில் அல்லது இடத்தில் நோய்வாய்ப்பட்ட அல்லது நோயுற்றதாக சந்தேகிக்கப்படும் நபரை[170]" ஏதேனும் ஒரு பொது மருத்துவமனை அல்லது இந் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட ஏனைய இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம்'' அல்லது அத்தகைய நபரை சுய தனிமைப்படுத்தல் செய்யும்படி பணித்துரைக்கலாம், அத்துடன் இச் செயல்முறைக்கு இடையூறு விளைவிப்பது சட்டத்தின் கீழ் குற்றமாகும்.[171]
    - ஒரு வீடு அல்லது வளாகத்தில் குடியிருப்பவர்களில் எவரேனும் தொற்றக்கூடிய, பரவக்கூடிய அல்லது தொற்றுந்தன்மை வாய்ந்த ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காக ஒரு முறையான அதிகாரி ஒரு வீடு அல்லது வளாகத்திற்குள் நுழையலாம்.[172]

---

[168] 1925 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 61 மற்றும் 65, மற்றும் ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 90, 94, 95 மற்றும் 97

[169] 1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 43 மற்றும் 44

[170] இதன் காரணமாக, ஒரு நபர் தனக்கு அறிகுறி இல்லை என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதற்கு மறுக்க முடியாது.

[171] 1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 49, கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4 (1); ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 91 மற்றும் 92

[172] 1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 66

- தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் பொது போக்குவரத்தைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது[173] (வாடகைக் கார் மற்றும் சவாரி வசதிகள் உட்பட). முறையான அதிகாரியின் அனுமதியின்றி, ஏதேனுமொரு பொது போக்குவரத்தின் உரிமையாளர் அல்லது ஓட்டுநர் அத்தகைய நோயுற்ற பயணிகளை ஏற்றிச் செல்வதையும் விதிமுறைகள் தடை செய்கின்றன.[174]
- நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்திலுள்ள ஒரு பொது இடத்திலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ யாரேனும் ஒரு நபர் மற்றொரு நபருடன் நெருக்கமான இடைத்தொடர்பு கொண்டிருப்பாராயின், அத்தகைய நபர், எல்லா நேரங்களிலும் முகக்கவசத்தினை அணிய வேண்டும் மற்றும் இரு நபர்களிடையே ஒரு மீட்டருக்கு குறையாத சமூக இடைவெளியைப் பேண வேண்டும்.[175]
- ஒரு நபர், முறையான அதிகாரியால் அனுமதிக்கப்படும் வரை, உரிய அதிகாரியால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள், நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்தில் உள்ள எந்தவொரு நிறுவனத்தையும், வணிக இடத்தையும் அல்லது அதனையொத்த எந்தவொரு வளாகத்தையும் பொதுமக்களுக்கு திறக்கக்கூடாது. அத்தியாவசிய சேவைகளை அல்லது தேசிய பாதுகாப்பு அல்லது பொது சுகாதாரத்தை பேணுவதற்கு தேவையான பிற சேவைகளை வழங்கும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்திலுள்ள எந்த ஒரு நிறுவனம், பணியிடம், பலபொருள் அங்காடிகள், கடை, விற்பனை நிலையம் அல்லது பிற வணிக இடம் என்பவற்றை முறையான அதிகாரி ஒருவர் செயற்பட அனுமதிக்கலாம்.[176]
- தொழில்தருநர் அல்லது ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது பணியிடத்தின் பொறுப்பதிகாரி அல்லது அத்தியாவசிய சேவைகளை வழங்கும் பல்பொருள் அங்காடி, கடை, விற்பனை நிலையங்கள் அல்லது வேறு எந்த வணிக இடம் என்பவற்றை வைத்திருக்கும் அல்லது அவற்றுக்கு பொறுப்பதிகாரியாக இருக்கும் நபர்;

  அ) வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கையை மீறாமல் இருப்பதை உறுதிசெய்யவும், சமூக இடைவெளி பேணுப்படுவதை உறுதிசெய்யவும்,

  ஆ) அனைத்து நபர்களும் எல்லா நேரங்களிலும் முகமூடி அணிவதை உறுதி செய்யவும்,

  இ) உள்நுழையும் அனைத்து நபர்களின் உடல் வெப்பநிலை அளவிடப்படுவதை உறுதி செய்யவும்,

[173] ஒரு பொது போக்குவரத்து என்பது எந்தவொரு புகையிரதம், கார், தெரு கார், படகு, வண்டி, பேருந்து, விமானம் அல்லது வாடகைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் பிற வாகனம் என பரந்துபட்ட அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது.

[174] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 69

[175] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 90

[176] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 92 மற்றும் 93

ஈ) உள்நுழைவதற்கு முன் அனைத்து நபர்களும் தங்கள் கைகளை கழுவுவதற்குப் போதுமான கை கழுவும் வசதிகளை வழங்குதலினை உறுதி செய்யவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.[177]

- நபரொருவரின் உடல் வெப்பநிலை, சரியான அதிகாரியால் நிர்ணயிக்கப்பட்ட உடல் வெப்பநிலையை விட அதிகமாக இருந்தால், அத்தகைய நபர் அத்தகைய வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படக்கூடாது.[178]
- எந்தவொரு நோய்க்குட்பட்ட பிரதேசத்திலும் உள்ள பொதுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனத்தின் ஓட்டுநர், நடத்துனர் மற்றும் உரிமையாளர் ஆகியோர் பயணிகளிடையே சமூக இடைவெளி மற்றும் ஏனைய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்ய வேண்டும்.[179]

3. சரியான அதிகாரி என்பவர் யார்?

25 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2168/6ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் முழு இலங்கைக்குமான "முறையான அதிகாரியாக" சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட வர்த்தமானியால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குமுறை 1இன் பிரகாரம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரங்களில் சிலவற்றை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளின் தவிசாளர்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் எந்தவொரு இராணுவ, கடற்படை அல்லது விமானப்படை தாபனத்திலும் உள்ள மருத்துவ அதிகாரிகள் மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு வழங்கலாம்.

எவ்வாறாயினும், சட்டமா அதிபர் பதில் பொலிஸ் மா அதிபருக்கு (IGP) அனுப்பியுள்ள கடிதத்தில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரங்களை பதில் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.[180] கொவிட்-19இனை கையாளுவதன் ஒரு பகுதியாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகளின் சட்டவலிதுடைத்தன்மையினை அங்கீகரிக்க இந்த கடிதம் பயன்படுத்தப்பட்டாலும், எந்த சட்ட ஏற்பாடுகள் மற்றும்/அல்லது

[177] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 94 மற்றும் 95
[178] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 96
[179] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 97
[180] MENAFN, 'பொலிஸால் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு இலங்கை சட்டமா அதிபர் ஒப்புதல்' இங்கே பார்வையிடலாம் <https://menafn.com/1100099455/Sri-Lanka-AG-approves-steps-enforced-by-Police> 4 கார்த்திகை 2021 அன்று அணுகப்பட்டது.

ஒழுங்குவிதிமுறைகளின் கீழ் சரியான அதிகாரியின் அதிகாரங்கள் பதில் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

4. நோய்க்குட்பட்ட பிரதேசம் என்றால் என்ன? நோய்க்குட்பட்ட பிரதேசத்தினை அடையாளங் காணக்கூடியவர் யார்?
தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், "நோய்க்குட்பட்ட" என்பது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள அல்லது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றமையைக் குறிக்கும்.

25 பங்குனி 2020 அன்று தேதியிடப்பட்ட 2168/6ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி, நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள அல்லது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்பட்டதும் முறையான அதிகாரி தீர்மானிக்க வேண்டிய அத்தகைய காலப்பகுதிக்கு நோய்க்குட்பட்ட பிரதேசங்களாக முறையான அதிகாரியினால் நோய்க்குட்பட்டதாக வெளியிடப்பட்டதுமான ஏதேனும் இடப்பிரதேசம் என "நோய்க்குட்பட்ட பிரதேசம்" என வரையறுக்கிறது.

இவ் ஒழுங்குவிதிமுறைகளின்படி, முறையான அதிகாரி நோய்க்குட்பட்ட பிரதேசத்தைக் கண்டறிய வேண்டும். எவ்வாறாயினும், தற்போது நோய்க்குட்பட்ட பிரதேசங்களை அடையாளம் காணும் பொது அறிவித்தல்கள் வர்த்தமானியின் கீழ் முறையான அதிகாரியாக அடையாளப்படுத்தப்படாத பொலிஸாரால் வழங்கப்படுகின்றன.

5. ஒழுங்குவிதிமுறைகளின் கீழ் தனிமைப்படுத்தல் செயல்முறையை மேற்கொள்ள யாருக்கு அதிகாரம் உள்ளது?
ஐப்பசி 2020இல் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 91 மற்றும் 92இன் பிரகாரம், ஒரு முறையான அதிகாரி "ஏதேனுமொரு வீட்டில் அல்லது இடத்தில் நோய்வாய்ப்பட்ட அல்லது நோயுற்றதாக சந்தேகிக்கப்படும் நபரை" ஏதேனும் ஒரு பொது மருத்துவமனை அல்லது இந் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட ஏனைய இடங்களுக்கு அவ்வாறு பணிந்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அழைத்துச் செல்லலாம்'' அல்லது அத்தகைய நபரை சுய தனிமைப்படுத்தலுக்கு பணிக்கலாம்.

எவ்வாறாயினும், தற்போது, தனிமைப்படுத்தல் செயல்முறை ஒழுங்குவிதிமுறைகளின் கீழ் சரியான அதிகாரி என அடையாளம் காணப்படாத பொலிஸ் மற்றும்/அல்லது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகிறது. இது இது செயன்முறையின் பொறுப்புக்கூறல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கான சாத்தியத்தன்மை பற்றிய கரிசனைகளை எழுப்புகிறது.

6. ஒருவரை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அல்லது சுய தனிமைப்படுத்தலுக்கு பணித்துரைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன?
தற்போதைய ஊரடங்கு உத்தரவு பெரும்பாலும் ”தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு” என்று குறிப்பிடப்படுகிறது.

1925ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளின் கீழ், ஒரு வீடு அல்லது வளாகத்தில் குடியிருப்பவர்களில் எவரேனும் தொற்றக்கூடிய, பரவக்கூடிய அல்லது தொற்றுந்தன்மை வாய்ந்த ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காக ஒரு முறையான அதிகாரி ஒரு வீடு அல்லது வளாகத்திற்குள் நுழையலாம்.[181] இச் செயன்முறைக்கு அடையூறு விளைவிப்பது கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும்.

எவ்வாறாயினும், இந்த செயன்முறை தொடர்பாக பெறப்பட்ட பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் கரிசனைகளின் வெளிப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ) தனிமைப்படுத்தல் செயன்முறையில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிட்டுள்ளது.

- “முறையான அதிகாரி” மூலம் அதிகாரங்களை வழங்குவதில் வெளிப்படைத்தன்மை
- குறித்தளிக்கப்பட்ட தகைமை வாய்ந்த பணியாளர்களுக்கான சோதனை செய்வதற்கான அதிகாரங்கள்
- தனிமைப்படுத்தல் நிலையங்களாக குறித்தளிக்கப்பட்ட இடங்கள் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் ஆகியவற்றின் பட்டியல்.
- தேவையான தனிமைப்படுத்தல் காலத்தை தெளிவுபடுத்தல்
- தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு தனிமைப்படுத்தலுக்கான காரணம், அவர்கள் அழைத்துச் செல்லப்படும் இடம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட காலம் உள்ளிட்ட விபரங்களைக் கொண்ட பற்றுச்சீட்டு முறையை உருவாக்கல்.
- குறிப்பாக ‘‘முறையான அதிகாரியினால்’’, தனிமைப்படுத்தப்பட்ட மையங்களின் வெளியக ஆய்வு
- தனிமைப்படுத்தப்பட்டவர்களை கொடிய வைரஸால் பாதிக்கப்பட்ட துரதிர்ஷ்டவாசிகளாகவன்றி, குற்றமிழைத்தவர்கள் போல் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தும் விதத்தில் முன்மொழியப்பட்ட தனிமைப்படுத்தல் முயற்சிகளைப் பற்றி தனிமைப்படுத்தலைக் கையாள்பவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவிப்பதைத் தடைசெய்தல் ஆகிய நடவடிக்கைகளை புரிவதன் மூலம் தனிமைப்படுத்தல் செயல்முறை சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும் என இ.ம.உ.ஆ. பரிந்துரைக்கிறது

[181] 1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறை 66

தனிமைப்படுத்தல் செயல்முறையால் திணிக்கப்பட்ட சிரமங்களை போக்குவதற்கு இ.ம.உ.ஆ. பின்வரும் பரிந்துரைகளையும் மேற்கொள்கின்றது.

- தனிமைப்படுத்தப்பட்ட காலம் ஊதியத்துடன் கூடிய / கடமை விடுப்பாகக் கருதப்படுவதை உறுதி செய்தல்
- தனிமைப்படுத்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிதி அல்லது வேறு ஏதேனும் உதவிகளை உறுதி செய்தல்
- ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டால் உடனடியாக கிராம சேவையாளருக்குத் தெரிவித்தல்
- தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையின் காரணமாக குடும்பங்களில் உள்ள நலிவுற்ற தங்கிவாழ்பவர்கள் கைவிடப்பட்ட சூழ்நிலைகளில், முறையான அதிகாரிகளை எச்சரிப்பது உட்பட நலிவுற்ற நபர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதை கிராம சேவையாளர் உறுதி செய்தல்

7. தற்போது சில பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்திற்கான சட்ட அடிப்படை என்ன?

கொவிட்-19 சுகாதார அவசரகாலநிலையினை எதிர்கொள்வதற்காக விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் சட்டவலிதுடைத்தன்மை முன்னர் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.[182]

தற்போதைய ஊரடங்கு உத்தரவு அடிக்கடி "தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு" என்று குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் எந்தவொரு 'ஊடரங்குச் சட்டத்தையும்' விதிப்பதற்கு ஏற்பாடு செய்யவில்லை. சனாதிபதியால் விதிக்கப்பட வேண்டிய 'ஊரடங்குச் சட்டம்' என்ற சொற்பதத்தினை பொ.பா.கட்டளைச்சட்டத்தின் 16வது பிரிவில் மட்டுமே காண முடியும்.

- பொ.பா.கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21(2), பிரிவு 2இன் உபபிரிவு 3இன் ஏற்பாடுகள் அவ்வாறு பிரிவு 12, பிரிவு 16 அல்லது பிரிவு 17 என்பவற்றின் கீழ் ஆக்கப்படும் ஆணை ஒன்றிற்கு ஏற்புடையதாகும்" எனக் கூறுகின்றது.
- "இப் பிரிவின் முந்தைய பிரிவுகளின் கீழ் பிரகடனம் ஒன்று ஆக்கப்படும் போது அத்தருணம் உடன் பாராளுமன்றத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன்

---

182 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொவிட்-19இனைக் கையாளுவதற்கு ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள், இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/curfew-in-response-to-covid-19-legal-framework-and-relevant-questions-in-sri-lanka/> 3 கார்த்திகை 2020 அன்று அணுகப்பட்டது; இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான HRCSLஇனுடைய பரிந்துரைகள் இங்கே பார்வையிடலாம் <https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/curfew.HRCSL-recommendation-final.pdf> 3 கார்த்திகை 2020 அன்று அணுகப்பட்டது.

பாராளுமன்றம் ஏதேனும் வகையில் ஒத்தி வைக்கப்பட்டிருப்பின் அல்லது பத்து நாட்களுள் முடிவுறாத கூட்டத்தொடர் நீட்டிப்பு காணப்படின் பத்து நாட்களுள் பாராளுமன்ற கூட்டத்திற்கான ஆணை ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் பிரகடனத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் அவ்வாறே பாராளுமன்றம் கூடி, ஒத்திவைக்கப்பட்டு அல்லது நீட்டிக்கப்பட்டு இருந்தவாறு தொடரப்பட வேண்டும்" என பொ.பா.கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02(3) விதந்துரைக்கின்றது.

எனவே, சட்டத்தின் பிரகாரம், ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதை உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அதன் பின்னர் குறித்த வர்த்தமானியின் விவரங்களை பாராளுமன்றத்திற்கு வெளியிடுவதற்கும் ஜனாதிபதி கடமைப்பட்டுள்ளார்.

8. பொதுமக்களின் வெப்பநிலையினை தற்போக்காக சோதனை மேற்கொள்வதற்கான அதிகாரம் யாருக்கு உள்ளது?

இராணுவ நடமாடும் படைகள் ரோந்து செல்வதாகவும் தற்போக்காக சோதனைகளை மேற்கொள்வதாகவும் ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க, "இராணுவம் படைப்பிரிவுகள் கொழும்பின் அனைத்து பகுதிகளிலும் தற்போக்காக முறையில் வெப்பநிலை சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன. இது நோய்த்தொற்றின் சாத்தியத்தன்மை தொடர்பில் எச்சரிக்கைத்தன்மையினையும் விழிப்புணர்வையும் உறுதி செய்வதற்காகும். மேலும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில், ஒவ்வொரு நாளும் சுமார் 2,500 வாகனங்களைச் சோதனையிடும் திடீர் வீதித் தடைகளும் செயற்படுத்தப்பட்டன. இதுவரை, நாங்கள் 25,000 வரையான வாகனங்களை சோதனை செய்துள்ளோம், 100இற்கும் குறைவானவர்களே மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்" எனத் தெரிவித்தார்.

தொழில்தருநர் அல்லது ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது பணியிடத்தின் பொறுப்பதிகாரி அல்லது அத்தியாவசிய சேவைகளை வழங்கும் பல்பொருள் அங்காடி, கடை, விற்பனை நிலையங்கள் அல்லது வேறு எந்த வணிக இடம் என்பவற்றை வைத்திருக்கும் அல்லது அவற்றுக்கு பொறுப்பதிகாரியாக இருக்கும் நபர் அனைத்து நபர்களின் உடல் வெப்பநிலையினை உள்நுழைவதற்கு முன்னர் அளவிடுவதற்கு 2197/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி[183] அதிகாரமளிக்கின்றது.

கட்டளைச் சட்டத்தின் கீழ் இன்றுவரை வெளியிடப்பட்ட வர்த்தமானிகளின் பிரகாரம் வெப்பநிலை பரிசோதனையினை இராணுவத்தினர் மேற்கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் இல்லை.

[183] ஐப்பசி 2020 ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குவிதிமுறைகள் 94, 95 மற்றும் 96.

9. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிமுறைகளுக்கு ஒருவர் இணங்கத் தவறினால், பின்பற்ற வேண்டிய சட்ட நடைபடிமுறை என்ன?

சட்டப்பூர்வ அதிகாரம் அல்லது காரணம் இன்றி கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு ஒழுங்குவிதிமுறையையும் மீறுவதனை எந்தவொரு நபருக்கும் தண்டனைக்குரிய குற்றமாக கட்டளைச் சட்டம் ஆக்குகிறது. ஒரு நபர் ஒழுங்குவிதிமுறைகளுக்கு இணங்கத் தவறினால், அவர் மீது நீதவான் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்படலாம், மேலும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆறு மாதங்களுக்கு மேற்படாத கடுழிய அல்லது சாதாரண சிறைத்தண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

மாற்றாக, அவர் மீது சட்டத்திற்குப் புறம்பாக அல்லது அலட்சியமாக உயிருக்கு ஆபத்தான நோய்த்தொற்றைப் பரப்பக்கூடிய எந்தவொரு செயலையும் புரிதலை குற்றமொன்றாக விதித்துரைக்கின்ற தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 262இன் கீழ் அல்லது தொற்று நோய் நிலவும் இடங்களுக்கும் பிற இடங்களுக்கும் இடையிலான இடைத்தொடர்பினை ஒழுங்குபடுத்துவதற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு விதியையும் தெரிந்தே மீறுவதனை குற்றமாக விதித்துரைக்கின்ற தண்டனைச் சட்டக் கோவையின் 264ஆவது பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்படலாம்.

10. கொவிட்-19 நோயால் இறப்பவர்களை கட்டாய தகனம் செய்வது குறித்த சட்ட நிலை என்ன?

நோயினால் இறக்கும் எந்தவொரு நபரின் அடக்கம் அல்லது தகனம் செய்யும் முறையை பரிந்துரைப்பதற்கான விதிமுறைகளை உருவாக்க அமைச்சருக்கு கட்டளைச் சட்டத்தின் 3(1)(i) பிரிவு அதிகாரமளிக்கிறது.

சனிக்கிழமை, 11 சித்திரை 2020 அன்று தேதியிடப்பட்ட 2170/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் கொவிட்-19 நோயால் இறந்த அல்லது இறந்ததாகச் சந்தேகிக்கப்படும் நபரின் உடலை தகனம் செய்வதனைக் கட்டாயமாக்குகிறது.

கொவிட்-19இன் காரணமாக இறந்தவரின் உடலைப் பாதுகாப்பாக மேலாண்மை செய்வதற்கான தொற்றுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த 24 பங்குனி 2020 அன்று தேதியிடப்பட்ட உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) இடைக்கால வழிகாட்டிக்குறிப்பு காணப்படுகின்றது. ‘பிணங்கள் நோயைப் பரப்புவதில்லை’ என்றும், ‘தொற்று நோயால் இறந்தவர்களை தகனம் செய்ய வேண்டும் என்பது பொதுவான மூடநம்பிக்கை, ஆனால் இது உண்மையல்ல. தகனம் செய்வது என்பது கலாச்சார தெரிவு மற்றும்

கைவசமுள்ள வளங்கள் தொடாடபான விடயம்' என இவ் வழிகாட்டிக்குறிப்பு கூறுகின்றது. "குடும்பத்தினரின் உரிமைகள், இறப்புக்கான காரணத்தை விசாரிக்க வேண்டிய அவசியம் மற்றும் தொற்றுநோய்க்கு உள்ளாவதற்கான ஆபத்துகள் என்பவற்றினை சமனிலைப்படுத்தும் விதத்தில் ஒவ்வொரு சூழ்நிலையையும் தனித்தனியாக மேலாண்மை செய்யும்படி" வழிகாட்டிக்குறிப்பு அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்துகிறது. உடலினை அகற்றுவதைப் பொருத்தவரை, "கொவிட்-19 நோயால் இறந்தவர்களை அடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம்" என்று வழிகாட்டிக்குறிப்பு கூறுகிறது. 2170/8ஆம் இலக்க ஒழுங்குவிதிமுறையின்படியான தகனத்தின் கட்டாயத் தன்மையை மறுபரிசீலனை செய்வதாக அரசாங்கம் சமீபத்தில் கூறியுள்ளது.

பின்னிணைப்பு 5

## இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்க்கு தீர்வு காண்பதற்கான சட்ட வரைச்சட்டம் பற்றிய இற்றைப்படுத்தல்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA)
12 வைகாசி 2021

சித்திரை 2021 இறுதிப்பகுதியிலிருந்து, இலங்கையில் கொவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித்து வந்துள்ளது.[184] ஒவ்வொரு நாளும் பதிவாகும் புதிய தொற்றுநோயாளிகளின் சராசரி எண்ணிக்கை புதிய உச்சத்தை எட்டியுள்ளது, இப்போது தினசரி 2,000இற்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளங்காணப்படுகின்றனர்.[185] பிரதானமாக, ஏற்கனவே அதிகரித்த வேலைப்பளுவிற்கு முகங்கொடுக்கின்ற சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவ ஊழியர்கள் மீதான அதிகரித்த அழுத்தத்தின் காரணமாக கொவிட்-19 தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இலங்கை மருத்துவ சங்கம் (SLMA), அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், மருத்துவ நிபுணர்கள் சங்கம் மற்றும் SLMA கல்லூரிகளுக்கிடையேயான செயற்குழு ஆகியவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிற்கு எழுதிய கடிதத்தில் தேசிய சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துபோகும் நிலையை அடைந்துவிட்டதாக சுட்டிக்காட்டியுள்ளன.[186] கொவிட்-19 வைரஸின் பல புதிய திரிபு வகைகள் அடையாளம் காணப்பட்டிருப்பது மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மேலும் கரிசணையினை ஏற்படுத்தியுள்ளது. தொற்றுநோயினை வினைத்திறனுடன் எதிர்கொள்வதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், மேலதிக உயிரிழப்புகள், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பல நெருக்கடிகள் ஏற்படுதவற்கான சாத்தியக்கூறுகளுடன் இலங்கை முன்னெப்போதும் முகங்கொடுத்திருக்காத சுகாதார நெருக்கடியில் உள்ளது.

கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவது, சோதனை செயல்முறையை அதிகரிப்பது, சுகாதார வசதிகளை வலுப்படுத்துவது மற்றும் தடுப்பூசி வழங்கல் செயல்முறையை விரைவுபடுத்துவது போன்றவையே இவ்வாறான ஒரு சூழ்நிலையில்

---

[184] Colombo Page, 'இலங்கையின் தினசரி கொவிட்-19 தொற்றுக்கள் 1,662 தொற்றுக்களுடன் மற்றொரு சாதனையை முறியடித்தன, மொத்த எண்ணிக்கை 108,146 ஆக உயர்ந்துள்ளது' இங்கே பார்வையிடலாம் <http://www.colombopage.com/archive_21A/Apr30_1619799640CH.php> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[185] உலக சுகாதார நிறுவனம், "இலங்கை" இங்கே பார்வையிடலாம் <https://covid19.who.int/region/searo/country/lk> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[186] The Sunday Times, 'பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கவும் அல்லது பேரழிவை எதிர்கொள்ளவும் சனாதிபதியை மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்' இங்கே பார்வையிடலாம் <https://www.sundaytimes.lk/210509/news/medical-experts-urge-president-to-impose-travel-restrictions-or-face-disaster-443061.html> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

எடுக்கப்பட வேண்டிய சிறந்த நடவடிக்கைகள் என வைரஸின் விரைவான பரவலை எதிர்த்துப் போராடும் பிற நாடுகளின் அனுபவத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.[187]
எவ்வாறாயினும், பொது மக்களுக்கு சரியான தகவல்கள் கிடைக்காமை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அச்சம் மற்றும் தவறான தகவல்கள் நிலவுகின்ற சூழல் இலங்கையின் கொவிட்-19இனைக் கையாளுகையை பலவீனப்படுத்தியுள்ளது. மேலும், குறிப்பாக தடுப்பூசி வழங்கல் செயல்முறை மற்றும் தனிமைப்படுத்தல் நடைமுறைகள் தொடர்பிலான அதிகரித்த எதேச்சையதிகாரமான நடவடிக்கை குடிமக்களின் ஆரோக்கியத்தையும் உயிரையும் ஆபத்தில் தள்ளக்கூடும்.

இந்த இக்கட்டான பின்னணியில், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் எதேச்சையதிகாரமானதும் தற்காலிகமானதுமாக அல்லாமல், அரசியலமைப்பு மற்றும் சட்ட வரைச்சட்டத்திற்கு ஏற்புடையனவாக உள்ளன என்பதனை உறுதி செய்வது மிகவும் முக்கியமானது.

கொவிட்-19இற்கு தீர்வு காண்பதற்கான இலங்கையின் முயற்சிகளில் சனநாயக ஆட்சி மற்றும் சட்டவாட்சி கோட்பாடுகளை கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA) தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன், இது தற்போதும் ஏற்புடையதாக உள்ளது.[188]

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மீதான வினா-விடை உள்ளிட்ட கொவிட்-19 உடன் தொடர்புடைய பல்வேறு சட்ட மற்றும் கொள்கை விடயங்கள் குறித்து CPAஇனால் பல வழிகாட்டிக்குறிப்புகளும் கொள்கை விளக்கங்களும் முன்பு வெளியிடப்பட்டுள்ளன.[189]

இவ் ஆவணம், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறைக் கட்டமைப்புகளின் பின்னணியில் இது தொடர்பான சமீபத்திய முன்னேற்றங்களை மீழ்மதிப்பீடு மற்றும் மீளாய்வு செய்கிறது.

---

187 மேற்குறிப்பிட்டது

188 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், "சுருக்க வழிகாட்டி 1: கொவிட் 19 சூழலில் பரிணமிக்கும் சட்டச் சிக்கல்கள்" இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/brief-guide-i-evolving-legal-issues-in-the-context-of-covid-19/> 07 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

189 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் இலங்கையில் கொவிட்-19இனை கையாளுவதில் இதனுடைய தாக்கம் எத்தகையது மீதான வினா-விடை. இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/q-and-a-on-regulations-issued-under-the-quarantine-and-prevention-of-diseases-ordinance-how-this-impacts-the-covid-19-response-in-sri-lanka/>; கொவிட்-19இனைக் கையாளுவதற்கு ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள், இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/curfew-in-response-to-covid-19-legal-framework-and-relevant-questions-in-sri-lanka/>; இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள்: சனாதிபதி செயலணி பற்றிய சுருக்கமான கருத்து இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/structures-to-deal-with-covid-19-in-sri-lanka-a-brief-comment-on-the-presidential-task-force/>

**தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள்**

சமீபத்திய மாதங்களில் வெளியிடப்பட்ட பல விதிமுறைகள் பின்வருமாறு:

- வெள்ளிக்கிழமை, 20 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2167/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - 1925 மற்றும் 1960ஆம் ஆண்டு கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தற்போதுள்ள தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகள் கொவிட்-19 தொடர்பாக எடுக்கப்படும் நடபடிமுறைகளுக்குப் ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக கொவிட்-19 நோயினை தனிமைப்படுத்தற்குரிய நோயொன்றாக அறிவித்தல்
- புதன்கிழமை, 25 பங்குனி 2020 தேதியிடப்பட்ட 2168/6ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - முறையான அதிகாரி மற்றும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தல்.
- சனிக்கிழமை, 11 சித்திரை 2020 தேதியிடப்பட்ட 2170/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - கொவிட்-19இனால் இறந்துள்ள ஆளொருவரின் பூதவுடலின் கட்டாய தகனம்.
- வியாழக்கிழமை, 15 ஐப்பசி 2020 தேதியிடப்பட்ட 2197/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - நடமாட்டத்தின் மீதான மட்டுப்பாடும், பொது இடங்களில் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டிக்குறிப்புகளும்.
- வியாழக்கிழமை, 25 மாசி 2021 தேதியிடப்பட்ட 2216/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி - கொவிட்-19இனால் இறந்துள்ள ஆளொருவரின் பூதவுடலின் தகனம் அல்லது புதைப்பு.

அவதானம் செலுத்தப்படவேண்டிய பின்வரும் முக்கிய விடயங்களையும் CPA எழுப்புகிறது:

**அதிக ஆபத்துள்ள பகுதிகளை தனிமைப்படுத்துதல்**

தனிமைப்படுத்தல் நிலையங்களினதும் செயன்முறைகளினதும் சட்டவலிதுடைத்தன்மை குறித்து சமீபத்திய நிகழ்வுகள் கரிசணையினை எழுப்பியுள்ளன. மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிமுறைகளின் கீழ், முழு இலங்கையையும் பொறுத்தமட்டில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ”முறையான அதிகாரியாக” நியமிக்கப்பட்டார்.[190] மேற்குறிப்பிட்ட வர்த்தமானியால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகளின் ஒழுங்குமுறை 1இன் பிரகாரம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரங்களில் சிலவற்றை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளின் தவிசாளர்கள், துறைமுகங்கள்,

[190] 25 பங்குனி 2021 தேதியிடப்பட்ட 2216/6ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் <http://documents.gov.lk/files/egz/2020/3/2168-06_T.pdf> 07 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

விமான நிலையங்கள் மற்றும் எந்தவொரு இராணுவ, கடற்படை அல்லது விமானப்படை தாபனத்திலும் உள்ள மருத்துவ அதிகாரிகள் மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு வழங்கலாம்.

எவ்வாறாயினும், ஊடக அறிக்கைகளின்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் (DGHS) சட்டப்பூர்வ அதிகாரத்தை கைப்பற்றி, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் சமீபத்திய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக 2 வைகாசி 2021 அன்று மாலை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பிலியந்தலை பொலிஸ் பகுதி தனிமைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த தனிமைப்படுத்தல் மறுநாள் நீக்கப்பட்டதோடு, அதற்கு பதிலாக, பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 10 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டன.

சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, அவ் உத்தரவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் (DGHS) வைத்திய கலாநிதி அசேல குணவர்தனவிடமிருந்து வராததனால், பிலியந்தலை பொலிஸ் பகுதியில் விதிக்கப்பட்ட கொவிட் -19 தொடர்பான தனிமைப்படுத்தலை நீக்குவதற்கான முடிவு சுகாதார அமைச்சினால் எடுக்கப்படவில்லை. பிலியந்தலை பகுதி முழுவதையும் தனிமைப்படுத்துவதற்கு கெஸ்பேவ சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சமந்திகா விஜேசுந்தர கோரிக்கை விடுத்திருந்தார் எனவும் தனிமைப்படுத்தலை முழுமையாக நீக்குவதற்கான நடவடிக்கை குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் பின்னர் தெரிவிக்கப்பட்டது.[191]

இது குறித்த பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து, பிலியந்தலையில் நிலவிய கொவிட் -19 நிலைமையை மதிப்பிடுவதற்கு அரசாங்கம் நிபுணர்கள் குழுவை அனுப்பியது, இது அப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் தேவையில்லை என அக் குழு முடிவு செய்தது.[192] கடந்த சில நாட்களாக கொழும்பு மாவட்டத்தில் அதியுச்ச எண்ணிக்கையான கொவிட்-19 நோயாளிகள் பிலியந்தலையில் பதிவாகியுள்ளனர்.

---

[191] ஹிரண்யத தேவசிறி, ‘பிலியந்தலை முடக்கல் நீக்கப்பட்டது சுகாதார அமைச்சினால் அல்ல’ (*The Morning*, 5 வைகாசி 2021) இங்கே பார்வையிடலாம் <https://www.themorning.lk/piliyandala-lockdown-lifting-not-by-health-ministry/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[192] EconomyNext, ‘பிலியந்தலை முடக்கலை தளர்த்துவதிலான தகாத அரசியல் செல்வாக்கை அரசாங்கம் மறுக்கிறது’ இங்கே பார்வையிடலாம் < https://economynext.com/govt-denies-undue-political-influence-in-relaxing-piliyandala-lockdown-81472/> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது; The Island, 'முட்டாள்கள் வைத்திய கலாநிதிகளாக முயற்சிக்கும் போது' இங்கே பார்வையிடலாம் <https://island.lk/when-mutts-try-to-be-docs/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

முடக்கல் மற்றும் தனிமைப்படுத்துதல் தொடர்பான அனைத்து முடிவுகளும் தேசிய கொவிட்-19 செயலணியினால் எடுக்கப்படுவதாகவும்[193] பிலியந்தலையில் திடீரென முடக்குதல் நீக்கப்பட்டதில் அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்படவில்லை என்றும் இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ்பத்திரன தெரிவித்தார்.

கொவிட்-19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்திற்கு (NOCPCO) ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமை வகிக்கின்றார்.[194]

குறித்தளிக்கப்பட்ட முறையான அதிகாரியின் சட்டப்பூர்வ அதிகாரத்தை கைப்பற்றி "நோய்க்குட்பட்ட இடப்பிரதேசங்கள்" தொடர்பாக பொலிஸ் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்கள் அடையாளம் காணல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் குறித்து CPA முன்பு கரிசணைகளை எழுப்பியுள்ளது.[195]

அண்மையில், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட்-19 நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்ணாண்டோபுள்ளே, இலங்கையில் தொற்றுநோய் நிலைமை தீவிரமடைந்தால், நாடு முழுவதனையும் முடக்க வேண்டிவரலாம் என்று கூறினார்.[196]

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிமுறைகளின்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நாடு தழுவிய முடக்கம் அமுல்படுத்தப்படலாம். கடந்த காலங்களில், கொவிட்-19 வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக முடக்கல்கள் சனாதிபதி அல்லது பொலிஸாரால் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மூலம் அமுல்படுத்தப்பட்டன.இத்தகைய முடக்கல் பொறிமுறைகளின்

---

[193] EconomyNext, 'பிலியந்தலை முடக்கலை தளர்த்துவதிலான தகாத அரசியல் செல்வாக்கை அரசாங்கம் மறுக்கிறது' இங்கே பார்வையிடலாம் < https://economynext.com/govt-denies-undue-political-influence-in-relaxing-piliyandala-lockdown-81472/> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 'இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள்: சனாதிபதி செயலணி பற்றிய சுருக்கமான கருத்தினையும்' பார்க்கவும். இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/structures-to-deal-with-covid-19-in-sri-lanka-a-brief-comment-on-the-presidential-task-force/>

[194] DailyNews, 'நாட்டினை முழுமையாக முடக்குவதாக அறிவிப்பதாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை' இங்கே பார்வையிடலாம் <http://www.dailynews.lk/2021/05/10/local/248889/no-decision-taken-declare-complete-lockdown> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[195] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மீதான வினா-விடை. இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/q-and-a-on-regulations-issued-under-the-quarantine-and-prevention-of-diseases-ordinance-how-this-impacts-the-covid-19-response-in-sri-lanka/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[196] EconomyNext, 'சூழ்நிலை ஏற்பட்டால் இலங்கை முடக்கப்படலாம்: இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே' இங்கே பார்வையிடலாம் <https://economynext.com/sri-lanka-may-go-into-lockdown-if-situation-calls-for-it-state-minister-fernandopulle-81638/> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

சட்டபூர்வமான தன்மை குறித்து CPA முன்னர் கரிசனைகளை எழுப்பியுள்ளது.[197] நாடு தழுவிய முடக்கல் தேவைப்படும் சூழ்நிலையில், இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தேவையின் அடிப்படையில் மற்றும் ஏற்கனவே உள்ள சட்ட வரைச்சட்டத்திற்கு இணங்க எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**கோவிட்-19 நோயால் இறந்தவர்களின் தகனம் அல்லது அடக்கம்**

நாட்டிலுள்ள முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மையினர் மற்றும் தேசிய[198] மற்றும் சர்வதேச[199] உரிமைக் குழுக்களின் 10 மாத தொடர்ச்சியான விமர்சனங்களைத் தொடர்ந்து கொவிட்-19 நோயால் இறப்பவர்களை தகனம் செய்வது அல்லது அடக்கம் செய்வது தொடர்பான, வியாழக்கிழமை, 25 மாசி 2021 தேதியிடப்பட்ட 2216/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி, இறந்தவர்களின் உடல்கள் கட்டாய தகனம் செய்யப்படவேண்டும் என்ற சர்ச்சைக்குரிய உத்தரவைத் (சனிக்கிழமை, 11 சித்திரை 2020 அன்று தேதியிடப்பட்ட 2170/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலால் வெளியிடப்பட்டது) திருத்தியது.

கொவிட்-19 நோயினால் தகனத்திற்கு மேலதிகமாக அடக்கம் செய்வதனை உள்வாங்கும் விதத்தில் முன்னைய உத்தரவு திருத்தப்பட்டது, அத்துடன் கொவிட்-19 தொற்றினால் இறந்தவரின் உடல் புதைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக முறையான அதிகாரியால் இடுகாட்டில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் அத்தகைய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் அவ் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்ற ஒரு புதிய உப ஒழுங்குவிதிமுறையும் சேர்க்கப்பட்டது.[200]

**தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளை மீறும் நபர்களின் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள்**

10 வைகாசி 2021 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளை மீறும் நபர்கள் மீது தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு

---

[197] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொவிட்-19இனைக் கையாளுவதற்கு ஊரடங்கு உத்தரவு: இலங்கையில் சட்ட வரைச்சட்டம் மற்றும் தொடர்புடைய கேள்விகள், இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/curfew-in-response-to-covid-19-legal-framework-and-relevant-questions-in-sri-lanka/> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[198] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், "கட்டாய தகனங்கள் மீதான கூற்று" இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/statement-on-forced-cremations/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[199] The Hindu, 'கொவிட்-19 நோயினால் இறந்தவர்களின் கட்டாய தகனங்களை இலங்கை முடிவுக்குக் கொண்டுவந்தது' இங்கே பார்வையிடலாம் <https://www.thehindu.com/news/international/sri-lanka-ends-forced-cremations-of-covid-19-victims/article33940422.ece> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[200] வியாழக்கிழமை, 25 மாசி 2021 தேதியிடப்பட்ட 2216/38ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் <http://documents.gov.lk/files/egz/2021/2/2216-38_T.pdf>

கட்டளைச் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழ் வழக்குத் தொடரப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் (DIG) அஜித் ரோஹண,மீண்டும் வலியுறுத்தினார்.[201] தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளை மீறும் நபர்கள் மீது தனிமைப்படுத்தல் மற்றும் நோயத்தடுப்பு கட்டளைச்சட்டத்தின் பிரிவுகள் 4 மற்றும் 5 மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 264 ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்படலாம்.[202]

“எவரேனும் நபரொருவர், சட்டப்பூர்வ அதிகாரம் அல்லது காரணமின்றி (எண்பிக்கும் பொறுப்பு அவருடையது), இந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு ஒழுங்குவிதிமுறையையும் மீறிகால், அல்லது இக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது இதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிமுறைகளின் கீழ் செய்யக்கூடாத எதையும் செய்தால், அல்லது செய்யவேண்டியதை செய்யாது தவிர்த்தால், அல்லது ஒழு பொலிஸ் பரிசோதகரை அல்லது இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அதிகாரியை அல்லது இக் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிமுறைகளை நிறைவேற்றும் ஏதேனும் பொலிஸ் அதிகாரியினைத் தடுத்தால் அல்லது இடையூறு விளைவித்தால் அல்லது தடுக்க அல்லது இடையூறு விளைவிக்க உதவி செய்தால் அந் நபர் இக் கட்டளைச் சட்டத்திற்கு எதிரான குற்றமொன்றை புரிந்தவராகக் கொள்ளப்படுவார்” என தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4(1) குறிப்பிடுகிறது.

பிரிவு 5(1)இன் பிரகாரம், “இக் கட்டளைச் சட்டத்திற்கு எதிரான குற்றமொன்றைப் புரிந்ததாகக் கொள்ளப்பட்ட நபரொருவர் மீது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய்க்கு குறையாத மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்பட்டு நீதவான் ஒருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்”.

இதேபோல், “தொற்று நோய் நிலவும் இடங்களுக்கும் பிற இடங்களுக்கும் இடையிலான இடைத்தொடர்பினை ஒழுங்குபடுத்துவதற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு விதியையும் தெரிந்தே மீறுபவர் மீது ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு சிறைத்தண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்” என தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 264 கூறுகின்றது.

---

[201] சுல்பிக் ஃபர்ஸான், “தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளை மீறியதற்காக 351 பேர் கைது செய்யப்பட்டனர் ஐப்பசி 2020 முதல் 7,000 பேர் கைது” (*NewsFirst*, 10 வைகாசி 2021) இங்கே பார்வையிடலாம் <https://www.newsfirst.lk/2021/05/10/351-arrested-for-violating-quarantine-rules-7000-arrested-since-october-2020/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[202] 'தனிமைப்படுத்தலினை மீறியதற்காக மேல் மாகாணத்தில் 75 பேரினை பொலிஸ் கைது செய்தது' (*DailyNews*, 6 வைகாசி 2021), இங்கே பார்வையிடலாம் <http://www.dailynews.lk/2021/05/06/law-order/248538/police-arrest-75-wp-quarantine-violations> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

30 ஐப்பசி 2020 முதல் 10 வைகாசி 2021 வரையிலான காலப்பகுதியில் முகக்கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை போன்ற தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளை பின்பற்றாததற்காகக் மொத்தம் 7316 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.[203]

தனிமைப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளை பொதுமக்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பதை கண்காணிப்பதற்காக பொது இடங்களில் விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்[204]. முக்கியமாக கொழும்பு நகர எல்லைக்குள்ளும் மற்றும் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் பொலிஸார் தொடர்ந்து விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வர் எனவும், பேருந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள், கடற்கரைகள், பூங்காக்கள் மற்றும் உணவகங்கள் போன்ற பொது இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.[205] இவ் விசேட நடவடிக்கைகள் சட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் பயன்படுத்தப்படுகின்ற மற்றொரு சந்தர்ப்பம் என விமர்சிக்கப்படுகின்றன.[206]

**கொவிட்-19 தடுப்பூசியேற்றல் தேசிய திட்டத்துக்கான சனாதிபதி செயலணி தாபிப்பு**

31 மார்கழி 2020 தேதியிடப்பட்ட 2208/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கொவிட்-19 தடுப்பூசியேற்றல் தேசிய திட்டத்துக்கான சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியால் நிறுவப்பட்ட செயலணி, சமீபத்திய மாதங்களில் நியமிக்கப்பட்ட மிக சமீபத்திய செயரணியாக அமைகின்றது.[207]

இச் செயலணியின் ஆணை பின்வருமாறு:

---

[203] சுல்பிக் ஃபர்ஸான், "தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளை மீறியதற்காக 351 பேர் கைது செய்யப்பட்டனர் ஐப்பசி 2020 முதல் 7,000 பேர் கைது" (*NewsFirst*, 10 வைகாசி 2021) இங்கே பார்வையிடலாம் <https://www.newsfirst.lk/2021/05/10/351-arrested-for-violating-quarantine-rules-7000-arrested-since-october-2020/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[204] இமேஷ் ரணசிங்க, 'தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிமுறைகளுக்கு இணங்கவில்லை என்ற குற்றச்சாட்டில் 7,316 இலங்கையர்களை பொலிஸ் கைது செய்துள்ளது' (EconomyNext, 10 வைகாசி 2021), <https://economynext.com/police-arrest-7316-sri-lankans-for-alleged-non-compliance-of-quarantine-regulations-81736/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[205] மேற்குறிப்பிட்டது

[206] மேற்குறிப்பிட்டது

[207] சனாதிபதி செயலணிகளை நிறுவுவதிலுள்ள சட்ட மற்றும் நடைமுறை தாக்கங்களை CPA முன்பு ஆய்வு செய்துள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 'இலங்கையில் கொவிட்-19இனைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள்: சனாதிபதி செயலணி பற்றிய சுருக்கமான கருத்தினை' பார்க்கவும். இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/structures-to-deal-with-covid-19-in-sri-lanka-a-brief-comment-on-the-presidential-task-force/>

(அ) தொழில்நுட்ப விசேட நிபுணர்களுடன் கலந்துரையாடி மற்றும் தற்போதுள்ள சாட்சிகளை அடிப்படையாகக்கொண்டு இலங்கைக்கு மிகவும் பொருத்தமான பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான தடுப்பூசியொன்றை கொவிட்-19இற்காக இனங்காணுதல்.

(ஆ) கொவிட்-19 தடுப்பூசியை உரிய காலத்தினுள் பெற்றுக்கொடுக்கும் போது அவசர அங்கீகாரம் வழங்குதல், துரித பெறுகை நடவடிக்கைகள், இறக்குமதி, சுங்க விடுவிப்பு மற்றும் தேசிய நோயெதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக விநியோகம் செய்யும் போது பொருத்தமான மற்றும் முறையான ஒழுங்குறுத்துகை மற்றும் நிருவாக விதிமுறைகளைத் தாபித்தல்.

(இ) தொழில்நுட்ப மற்றும் பொருள் ரிதியான ஒத்துழைப்புக்காக உரிய உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள், ஐக்கிய நாடுகளின் முகவராண்மைகள் மற்றும் தொழிற்துறையினருடன் பணியாற்றுதல்.

(ஈ) தடுப்பூசியேற்றும் முதலாவது கட்டத்திற்காக கொவிட்-19 நோய்த் தொற்று ஏற்படுவதற்கு அதிக ஆபத்துமிக்க மக்கள் குழுவினர்களை இனங்கண்டு முன்னுரிமை வழங்குதல் மற்றும் அதன் பின்னர் முறையே ஏனையோருக்குப் பெற்றுக் கொடுத்தல்.

(உ) தெளிவான பொறுப்பு, தரநிலை வழிநடத்தல்கள், செயற்பாட்டு விதிமுறைகள் மற்றும் பங்குபற்றும் தரப்பினர்களுக்காக கால அட்டவணை மற்றும் அறிக்கையிடும் செயற்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பு உள்ளடங்கும் கொவிட்-19 தடுப்பூசியை விநியோகித்தல் மற்றும் தடுப்பூசியேற்றும் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.

(ஊ) தடுப்பூசிகளின் தொகையினைக் களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், வெப்ப நிலையைப் பராமரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் தடுப்பூசித் தொகையினை அறிக்கையிடுவதற்காகத் தற்போதுள்ள முறைமைகளின் குறைபாடுகளை இனங்காணுவதற்காகத் தற்போதைய வழங்கல் முறைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

(எ) தடுப்பூசி பாவனையை மேற்பார்வை மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை உள்ளடங்கும் விதத்தில் தடுப்பூசிகளின் தொகை முகாமைததுவம் மற்றும் விநியோகித்தலின் வலுவான வழங்கல் முறைக்கான தகவல் தொகுதியொன்றினைத் தாபித்தல்.

(ஏ) தடுப்பூசியேற்றலுக்கான இடங்கள் மற்றும் தடுப்பூசியேற்றும் குழுவினை இனங்காணுதல், வைத்திய உபகரணங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல், குளிர் நிலைமுறை கொள்ளளவு மற்றும் ஊசிமருந்துகளை களஞ்சியப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் உள்ளடங்கும் விதத்திலான தடுப்பூசியேற்றல் திட்டத்தைச் செயற்படுத்துதலுக்குப் பொருத்தமான வழங்கல் சேவைகள் திட்டமொன்றைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(ஐ) தடுப்பூசிகளின் விநியோகம் மற்றும் குறித்த காலப்பகுதியினுள் தடுப்பூசியேற்றல் என்பவற்றை உறுதிசெய்வதற்காகத் தேவையான மனித வளம், தொழில்நுட்ப மற்றும் நிதி ஒதுக்கீடுகளை இனங்காணுதல்.

(ஒ) கொவிட்-19 தடுப்பூசி தொடர்பான உலகலாவிய தகவல்களைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் அத் தகவல்களை ஏற்றவாறு, கொவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல் மற்றும் தடுப்பூசியேற்றல் செயறற்பாட்டினைத் திட்டமிடும் போது மறறும் தயாரிக்கும் போது பயன்படுத்துதல்.

(ஓ) தடுப்பூசியேற்றும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பாதகமான சம்பவங்களை அறிக்கையிடுவதற்காகத் தடுப்பூசி ஆய்வுத்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

(ஔ) தடுப்பூசியினை விநியோகித்தல் மற்றும் தடுப்பூசியேற்றுதலை வெற்றிகரமாக மற்றும் குறித்த காலச்சட்டகத்தினுள் மேற்கொளளுவதற்காக வழங்கல் முறைகள் மற்றும் சுகாதார பணியாளர் குழுவினை முறையாகப் பயிற்றுவித்தலை உறுதிப்படுத்துவது மற்றும் பயிற்சியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக உரிய விசேட நிபுணர்கள் மற்றும் நிறுவனஙகளோடு இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஃ) தடுப்பூசிகளின் விநியோகம் மற்றும் தடுப்பூசியேற்றலின் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுவதற்குப் பொதுத் தொடர்பாடல் முறையொன்றைத் தாபித்தல்.

அதன் ஆணையை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான விதத்தில் பணிப்புரைகளை வழங்குவதற்கும், விசாரணைகளை மேற்கொள்வதற்கும், அத்தகைய விடயங்களை புலன்விசரணை செயவதற்கும் செயலணிக்கு மேலும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. செயலணி அறிவுறுத்தல்களை வழங்கக்கூடிய அனைத்து பகிரங்க அதிகாரிகள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்கள் அத்தகைய அறிவுறுத்தல்களுக்கு இணங்க வேண்டும் மற்றும் அத்தகைய அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்.

இலங்கை, இவ் வருடம் தை மாதம் 29ஆம் தேதி தனது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை தொடங்கியதிலிருந்து சுகாதாரத் துறையிலுள்ள முன்னிலை பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினர் உட்பட 925,242 குடிமக்கள் முதலாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களும் தொடர்ந்து வந்த சில வாரங்களில் முதலாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டனர்.

எவ்வாறாயினும், முன்னுரிமைப் பட்டியல் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் விதத்தில் சம்பிரதாயமற்ற முறையில் நீக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் தடுப்பூசி வழங்கும் செயல்முறை சித்திரை 15ஆம் திகதியன்று இடைநிறுத்தப்பட்டது.[208]

சித்திரை 23 முதல் வைகாசி 09 வரை, முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்ட 925,242 பேரில் முன்னிலை பணியாளர்கள் உட்பட 196,546 பேர் அஸ்ட்ராசெனெகாவின் இரண்டாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டனர்.

இந்திய அரசாங்கத்தால் நன்கொடையின் மூலம், COVAX நிலையத்தினூடாகப் பெற்றுக்கொண்டதன் மூலம் அல்லது உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ததன் மூலம் ஒட்டுதொத்தமாக பெறப்பட்ட 1,264,000 அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகளில் அதிகாரிகள் 338,758 தடுப்பூசிகளை இரண்டாவது தடுப்பூசியாக வழங்குவதற்காக சேமிப்பகத்தில் வைத்துள்ளனர். இன்றைய நிலவரப்படி, 586,484 பேர் இன்னும் இரண்டாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளவில்லை.

இதற்கிடையில், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) ஒப்புதலைத் தொடர்ந்து, சீனத் தயாரிப்பான சினோ.ஃபார்ம் தடுப்பூசியையும் ரஷ்ய தயாரிப்பான ஸ்பட்னிக் V தடுப்பூசியையும் இலங்கை மக்களுக்கு வழங்க ஆரம்பித்தது.[209] மிக அண்மையில் ஃபைசர் கொவிட் தடுப்பூசிக்கும் NMRA அனுமதி வழங்கப்பட்டது.[210]

எவ்வாறாயினும், கடந்த சில மாதங்களாக தடுப்பூசி செயல்முறை தொடர்பில் பல குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் பதிவாகியுள்ளன.

கொவிட்-19இனைக் கையாளுவதில் முன்னிலையில் நின்று செயற்பட்ட போதிலும் தாதியர்கள் கொவிட்-19 தடுப்பூசியை இன்னும் பெற்றுககொள்ளவில்லை என அகில இலங்கை தாதியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

---

[208] சங்க ஜயசிங்க, "கொவிட்-19இற்கு எதிராக 7,500இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் சினோபார்ம், ஸ்புட்னிக் V தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர்" (*EconomyNext*, 10 வைகாசி 2021) இங்கே பார்வையிடலாம் <https://economynext.com/over-7500-sri-lankans-have-received-sinopharm-sputnik-v-vaccines-against-covid-19-81758/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[209] மேற்குறிப்பிட்டது

[210] DailyFT, "இலங்கையில் ஃபைசர் தடுப்பூசியைப் பயன்படுத்த NMRA அங்கீகரிப்பு", இங்கே பார்வையிடலாம் <https://www.ft.lk/front-page/NMRA-approves-Pfizer-vaccine-for-use-in-SL/44-717560> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

சர்வதேச ரிதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறிமுறையின் அடிப்படையில் இலவசமாக பெறப்பட்ட தடுப்பூசிகளை வழங்க அரசாங்கம் தவறியுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[211]

சில தரப்பினரால் எடுக்கப்பட்ட தீர்மானங்களினால், கொவிட்-19 தடுப்பூசியை வழங்கும் முறையில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட்-19 நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்ணாண்டோபுள்ளே ஒப்புக்கொண்டுள்ளார்.

"பொது சுகாதாரம் பற்றிய புரிதல் இல்லாத சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகளே இதற்குக் காரணம். கொவிட்-19 நோய் கட்டுப்பாட்டு கொவிட் அடக்குதல் குழுவின் கூட்டம் இருப்பது பற்றி எனக்குத் தெரியாது. தகவல் தொடர்பு பிரச்சனைகளால் ஒரு குறிப்பிட்ட குழப்பநிலை நிலவுகிறது. இது மாற்றப்பட வேண்டும்" என இராஜாங்க அமைச்சர் கூறினார்.[212]

தடுப்பூசி வழங்கல் தொடர்பான செயல்முறை குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட பொது பிரச்சாரம் இல்லாததால் ஏற்பட்டுள்ள அச்சம் மற்றும் நிச்சயமற்ற தன்மை தடுப்பூசி வழங்கல் நடைமுறையில் உள்ள முறைகேடுகளை அதிகரிக்கச்செய்துள்ளது.

மேல் மாகாணத்தின் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதால், நாடளாவிய ரீதியிலான தடுப்பூசி வழங்கல் எவ்வாறு இடம்பெறும் என்பது குறித்து போதிய தகவல்கள் இல்லை. இவற்றை உடனடியாக சரி செய்யப்பட வேண்டும்.

முடிவுரை

பெருந்தொற்றுநோயை திறம்பட கையாளுவதற்குப் போதுமான சட்ட மற்றும் கட்டமைப்பு வரைச்சட்டங்கள் காணப்படுகின்றமையினை CPA அதனுடைய முன்னைய வழிகாட்டிக்குறிப்புகளில் வெளிப்படுத்தியுள்ளது.

---

211 News First, "தாதியர்கள் இன்னும் கொவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை, தொழிற்சங்கங்கள் அறிக்கை" இங்கே பார்வையிடலாம் <https://www.newsfirst.lk/2021/05/03/nurses-yet-to-receive-covid-19-vaccines-union-claims/> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

212 'கொவிட் தடுப்பூசியை வழங்குவதில் உள்ள சிக்கல்களை இராஜாங்க அமைச்சர் ஒப்புக்கொள்கின்றார், சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளைக் குற்றம் சாட்டுகிறார்' (*ColomboPage*, 24 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் <http://www.colombopage.com/archive_21A/Feb24_1614188873CH.php> 10 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

வலுவான பொது சுகாதாரத் துறை மற்றும் பரந்துபட்ட அனர்த்த முகாமைத்துவ பொறிமுறைகள் மூலம் அவசரகாலநிலைகள் மற்றும் பேரழிவுகளை வெற்றிகரமாகக் கையாள்வதில் இலங்கை பல வருட அனுபவத்தைக் கொண்டுள்ளது.

அவசரகாலநிலைகளுக்கு முகங்கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள பொறிமுறைகளின் முழுப் பலனையும் குடிமக்கள் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வதற்கு அனைத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சட்டவலிதுடைத்தன்மை காணப்படவேண்டியதன் அவசியத்தை கடந்த கால பேரழிவுகள் மற்றும் தேசிய அவசரகாலநிலை நிகழ்வுகள் நிரூபித்துள்ளன.[213]

அவ்வாறு இருந்த போதிலும், வைரஸ் பரவுவதைக் குறைப்பது மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவது முதல் கொவிட்-19 தடுப்பூசி வழங்கலை ஒழுங்குபடுத்துவது வரையான கொவிட்-19 தொடர்பான பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதற்கு கடந்த ஆண்டு அடுத்தடுத்து பல சனாதிபதி செயலணிகள் உருவாக்கப்பட்டன.

CPA இக் கட்டமைப்புகளின் சட்டவலிதுடைத்தன்மை மற்றும் பெருந்தொற்றினை வினைத்திறனாகக் கையாளுதலிலும் சனநாயகத்தின் மீதும் இது கொண்டிருக்கக்கூடிய எதிர்வுகூறமுடியாத விளைவுகள் பற்றிய கரிசணைகளை எழுப்பியுள்ளது.[214] தற்போதைய நெருக்கடி, இந்த கட்டமைப்புகள் வளர்ந்து வரும் சுகாதார நெருக்கடியை தீர்க்கத் தவறிவிட்டன என்பதைக் காட்டுகிறது. மற்றும் தற்போதைய இராணுவமயமாக்கப்பட்ட அணுகுமுறை மற்றும் தற்காலிக நடபடிமுறைகளுக்கு மாறாக, கொவிட்-19இனைக் கையாளுவதில் சுகாதார தொழில் நெறிஞர்கள் மற்றும் ஏனைய நிபுணர்களின் மிகவும் வலுவான வகிபாகத்தினை CPA முன்மொழிகிறது.

---

213 பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றிய கேள்விகளை எழுப்புகின்ற விதமாக தேவைக்குக் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள இருகம கொவிட்-19 நிதியில் உள்ள சிக்கல்களைக் குறிப்பிடுகின்ற ஊடக அறிக்கைகள் மீது இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். Daily FT. 'கொவிட் சவால்கள்' இங்கே பார்வையிடலாம் <https://www.ft.lk/ft_view__editorial/COVID-challenges/58-717654>; டிரான்ஸ்பரன்சி இன்டர்நே'னல். 'கொவிட்-19 நிவாரணம் இலங்கை மக்களை சென்றடைவதை உறுதி செய்தல்' இங்கே பார்வையிடலாம் <https://www.transparency.org/en/blog/ensuring-covid-19-relief-reaches-sri-lankas-people> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.

214 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், "இலங்கையில் கொவிட்-19 நோயைக் கையாளுவதற்கான கட்டமைப்புகள்: சனாதிபதி செயலணி பற்றிய சுருக்கமான கருத்து" இங்கே பார்வையிடலாம் <https://www.cpalanka.org/structures-to-deal-with-covid-19-in-sri-lanka-a-brief-comment-on-the-presidential-task-force/> 11 வைகாசி 2021 அன்று அணுகப்பட்டது.